நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 46 | மே5 - மே 18, 1994 | விலை7/=


**சந்திரனும் சூரியனாய் ஆம்!**

நாய்வால் நிமிரும்; நரிக்கொம்பு ஊதும்
பேய்வாலில் எழுந்துநின்று பேசும்- ஓய் கேளும்
இந்தியா வந்திறங்கும்; எங்கசிவா நாவசைப்பில்
சந்திரனும் சூரியனாய் ஆம்!

- ஈழமோகம்

## இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு மேல் எவராலும் முடியாது! - ஜே.ஆர்

இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் வழங்கப்பட்டுள்ளவற்றிற்கு மேல் எதையும் எந்த ஒரு தேசிய அரசாங்கத்தாலும் வழங்கி விட முடியாது. அதைவிட குறைவாக வழங்குவதும் சாத்தியம் இல்லை. ஏனென்றால் அதைவிட அதிகமாக வழங்குவதை பெரும்பான்மை மக்கள் விரும்பமாட்டார்கள். அதே வேளை அதைவிடக் குறைவாக வழங்குவதையும் வடக்கிலுள்ள தமிழர்கள் ஏற்க மாட்டார்கள்' என்று தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அவர்கள். இந்திய இலங்கை ஒப்பந்தம் தொடர்பாக அவருடைய இப்போதைய பார்வை பற்றி பத்திரிகையாளர் ஒருவரால் கேட்கப்பட்ட கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். காலத்திலேயே வடமராட்சி தாக்குதல் நடைபெற்றது என்பதுவும், இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவாகும் சூழ்நிலை உருவாகியது அந்நேரத்திலேயே என்பதுவும் தெரிந்ததே.

## இலங்கை - இந்திய ஒப்பந்தமும் எம்முடைய சாதனையே - கூட்டணி சிவா

'வடமாராச்சி ஒப்பரேசனில் யாழ் நகர் வீழ்ச்சியடைய இருந்த நேரத்தில் இந்தியத் தலையீட்டை உருவாக்கி இராணுவத்தை பின்வாங்கச் செய்தமை, உணவுப் பொட்டலங்களை போடுவித்தமை, அதைத் தொடர்ந்து இந்திய -இலங்கை உடன்படிக்கை என்பனவும் எமது சாதனைகளில் ஒரு அங்கமே'

கடந்த 23,24ம் திகதிகளில் திருமலையில் நடைபெற்ற த.வி.கூட்டணியினரின் புனருத்தாரண நடவடிக்கையின் போது நடைபெற்ற கருத்தரங்கின் போது, இதுவரை நீங்கள் சாதித்தது என்ன என்ற கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போது இவ்வாறு குறிப்பிட்டார் த.வி.கூ தலைவர் சிவசிதம்பரம்.

இக்கருத்தரங்கில் பேசிய இராசம்பந்தன் எமது இனத்தை அடக்குமுறையால் பயமுறுத்தி விடலாம் என்று கனவு கண்டவர்க்கு எமது இளைஞர்கள் தகுந்த பதிலடி கொடுக்கிறார்கள். ஆயுதப் போராட்டம் ஒரு சமாதானத் தீர்வுக்கான உந்து சக்தியாக இருக்குமே ஒழிய அது தீர்வு ஆகாது. யாழ்ப்பாணத்தை தனிநாடாக்கி விட்டால் கிழக்கை மீட்கலாம் என்பது பகற்கனவு. இதற்கு வட அயர்லாந்துப் போராட்டமே சான்றாகும் என்றுர்

கருத்தரங்கிற்கு கூட்டம் நிரம்பி வழிந்தது. கூட்டணியினரிடம் கேள்விகள் கேட்பதற்காகவே இளைஞர் குழாம் ஒன்று கேள்விக் கொத்தொன்றை றோனியோ பண்ணிக் கொண்டு வந்து விநியோகித்திருந்தது.

## குப்பை அள்ள மட்டுமே எனக்கு அதிகாரம்! - மட்டு மேயர்

பிரதேச செயலாளர்களுக்கு உள்ள அதிகாரம் கூட மாநகர முதல்வர்களுக்கு இல்லை; குப்பை அள்ளுவதற்கு மட்டுமே அவர்களுக்கு அதிகாரம் உண்டு எனவும் மட்டக்களப்பு மாநகர முதல்வர் செழியன் பேரின்பநாயகம் தனது சலிப்பை தனதுஅந்தரங்க மட்டங்களில் கூறி வருகின்றார்.

1987ல் கைச்சாத்தான இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் பிறந்த மாகாண சபைகளே அதிகாரம் இன்றி வெறுமனே தூங்கிக் கிடக்கும் பொழுது மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க பண்டாரநாயக்கா உட்பட பலரும் மாகாணசபைகளுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை என கண்டனம் தெரிவித்த பின்பும், மாநகரசபையைக் கைப்பற்றுவதன் மூலம் தமிழ் மக்களிற்கு விமோசனத்தை ஏற்படுத்தி பெரும் சாதனை படைக்கப் போவதாக நம்பிய இவர்களுக்கு இப்போதான் உண்மைகள் புரியத் தொடங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

ஆயினும் கூட நகரமுதல்வரைச் சந்திப்பதென்பது பொதுமக்களை பொறுத்தவரை பெரும்பாடாகவே உள்ளதென்றும் பல பிரயத்தனங்களுக்குப்பின் அவரைச் சந்திக்கச் சென்றாலும் மக்கள் தமது குறைகளை மனம் விட்டுப் பேசமுடியாதவாறு அவரது பரிபாலகர்கள் புடைசூழ அவர் வீற்றிருக்கிறார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒருபுறம் அதிகாரத்தைக் கைப்பற்றும் அவா. மறுபுறம் அதிகாரம் இன்மையின் அவலம். இதன் வெளிப்பாடு தான் மக்களைச் சந்திக்கக்கூட நேரம் இல்லாத தலைவராக அவர் தன்னை உருவாக்கி வைத்திருப்பதன் இரகசியம் என்கிறார் அவரைச் சந்தித்துவிட்டு வந்த மட்டுநகர் வாசி ஒருவர்.

## கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை

அண்மையில் காலபோக நெற்செய்கையில் இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத வடபகுதியில் அமோக நெல்விளைச்சல் கிடைத்துள்ளது. வெள்ளத்தாலும் கடும் மழையினாலும் பாதிக்கப்பட்ட போதிலும் விளைச்சல்களைக் கண்டு விவசாயிகள் மனம் குளிர்ந்தார்கள்!

ஆனாலும் அதனை அனுபவிக்க கொடுத்து வைக்கவில்லை. சீரற்ற மழைக்கு மத்தியிலும் மிகவும் கஷ்டப்பட்டு அறுவடை செய்து சூடுமிதித்து உழவு இயந்திரங்களின் பெட்டிகளில் ஏற்றி வந்து. (அரசாங்கத்தின் தடையுத்தரவு காரணமாக சாக்குகள் இல்லாத நிலையில்) வீட்டு அறைகளில் நெல்லைக் குவியலாகக் கொட்டி வைத்துள்ளார்கள்.

தனியார் வர்த்தகர்கள் எவரும் நெல் கொள்வனவு செய்யக்கூடாது. புலிகளின் நெல் கொள்வனவு நிலையங்கள் தவிர்ந்த வேறு எவருக்கும் விவசாயிகள் நெல் விற்பனை செய்யக்கூடாது என்ற கட்டுப்பாடும் விதிக்கப்பட்டுள்ளது.

அறுவடை, சூடடிப்பு செலவுகள் குடும்பத் தேவைகள் என்பவற்றிற்காக நெல்லை விரும்பியபடி விற்பனை செய்ய முடியாது. புலிகளின் நெல் கொள்வனவு நிலையங்களும் மிகக்குறைந்த அளவில் நெல்லைக் கொள்வனவு செய்துவிட்டு, விவசாயிகளுக்குக் கொடுக்கப் பணமில்லை என்று கூறி கொடுப்பனவுகளில் தாமதம் செய்துள்ளார்கள்.

அவசிய அவசரம் காரணமாக நெல்லை விற்க முயலும் விவசாயிகளிடம் ஒன்று அல்லது இரண்டு மூடைகளுக்கு மேல் புலிகளும் கொள்வனவு செய்வதில்லையாம்

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்ற நிலையில் வடபகுதி விவசாயிகள் வாடுகின்றார்கள்.

## அடுத்தமுறை சின்னமேளமும் வரும்

திருமலையில் நடைபெற்ற டெலோ இயக்கத்தினரின் மாநாட்டு இறுதி நாள் நிகழ்ச்சி கூச்சல்கள் குழப்பங்களுடன் முடிவுற்றது. தங்கள் அரசியல் நிகழ்ச்சிகளுக்குக் கூட்டம் வராது என்பதை அவர்கள் திடமாக உணர்ந்து இருந்ததால் பிரமாண்டமான இவ்விசைக்கச்சேரி ஒன்றை முற்றவெளி அரங்கில் ஒழுங்கு செய்திருந்தார்கள்.

அவர்கள் எதிர்பார்த்தபடியே மக்கள் திரண்டு வந்தார்கள். நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர்களுக்கோ ஒரே குஷி. மக்களைச் சரியாகக் கணக்குப் போட்டு விட்டதாகத் தங்கள் முதுகிலே தாங்களே தட்டிக் கொடுத்து உற்சாகப்பட்டுக் கொண்டார்கள்.

கானமழை தொடர்ந்தது மக்கள் மயங்கினர். புதிய பழைய பாடல்கள் என்று அமர்க்களப்படுத்தினர்.

திடீரென ஒரு அறிவிப்பு. ''இப்பொழுது அரசியற் கூட்டம் இடம் பெறும்.'' மக்கள் திடீரென எழுந்து நடக்க ஆரம்பித்து விட்டார்கள். ''தயவு செய்து போகாதீர்கள்! தயவு செய்து போகாதீர்கள்!!'' என்ற விநயமான வேண்டுகோள். மக்கள் கேட்டாத்தானே!

''இசைக்கச்சேரி தொடர்ந்து இடம் பெறும்'' என்றார்கள். மக்கள் மீண்டும் அமர்ந்தார்கள்.

நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தி ஒலிவாங்கியை எடுத்தார். மக்கள் மத்தியிலிருந்து கூச்சலும் விசிலும். ''மைனர் மச்சான் பேசாதே'' என்ற குரல்கள்.

''இப்பொழுது மட்டக்களப்பு மாநகரசபைத் தலைவர் செழியன் பேரின்பநாயகம் பேசுவார்.'' என்றார் தலைவர். கூச்சல் கூடிக் கொண்டே இருந்தன. செழியன் வந்தார். ஏதோ சொல்ல வாய் எடுத்தார். முடியவில்லை. மீண்டும் முயன்றார். கூச்சல் கூடியதால் வெறுப்புடன் திரும்பி விட்டார்.

சூரியமூர்த்தி வந்தார். ''வந்தாரை வாழ வைக்கும் திருமலை மக்களின் பண்பு இதுதானா?'' என்றார். ''மட்டக்களப்பு மேயரை அவமதித்தது எவ்வளவு பண்பு கெட்ட செயல்?'' என்று வினவினார். கூச்சல் அடங்கவில்லை ''இத

→ 15

## தமிழீழ பணம் இப்போதைக்கு இல்லை

தமிழீழ பணத்தை அறிமுகம் செய்வதற்கும் பின்னர் கிராமிய வங்கியை ஆரம்பிப்பதற்கும் முயற்சியெடுத்த புலிகள் அந்த முயற்சிகளை இப்போது தற்காலிகமாக கைவிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

தமிழீழ பணப்புழக்கம் பல நடைமுறை கஷ்டங்களை ஏற்படுத்தும் என உணர்ந்து அதன் மூலம் பொதுமக்களின் அதிருப்தியை அதிகளவில் சம்பாதிக்க நேரிடும் என்றும், வடக்கில் மாத்திரம் தனியே தமிழீழ பணத்தைப் புழக்கத்தில் விடுவது அவர்களது நிலைப்பாட்டுக்கு கூடாது என ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டதையடுத்தே இந்த முயற்சி இப்போது கைவிடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

நன்றி - நூலகத்திட்டம்



# சிலையை நிமிர்த்தலாம் உயிர்ப்பித்தல் சாத்தியமா?

அரவிந்தன்


கடந்த மே மாதம் நடந்த அவரது ஈமச்சடங்குகட்குப் பிறகு அரச பத்திரிகைகளிலும் ரூபவாஹினி மற்றும் வானொலியிலும் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டு வந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா பற்றிய, அவரது அரசியற் கோட்பாடுகள் பற்றிய செய்திகள் கடந்த சில நாட்களாக இந்த தொடர்பு சாதனங்களின் முக்கிய செய்திகளாகியுள்ளன. கடந்த ஓராண்டு கால ஆட்சியில் ஆளுங்கட்சியினரின் போக்கானது பிரேமதாசாவின் மலினத்துவக் (Populist) கோட்பாடுகளை மறுதலித்து விட்டு ஜே.ஆர்.கால கோட்பாடுகளை முன்நிறுத்தி அரசியலை நடாத்துவதன் மூலம், பிரேமதாசாவினால் கட்சிக்கு ஏற்பட்ட அபக்கியாதியிலிருந்து விடுபட்டு விட முடியும் என்று நம்புவதாக அமைந்தது. ஆயினும் டி.பி.விஜயதுங்காவை தலைவராக்கியதுடன் கட்சிக்குள் மீளத் தம்மை ஸ்திரப்படுத்திக் கொண்ட மேட்டுக்குடி அரசியல்வாதிகள், எந்தப் பிரேமதாசாவின் நடவடிக்கைகளை வெறும் தமாஷா நடவடிக்கைகளாக இனங்கண்டார்களோ, அவற்றுக்குள் தஞ்சம் புகுவதன் மூலமே தம்மை தற்காத்துக் கொள்ள முடியும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதே இங்குள்ள முரண்நகையான அம்சமாகும்.

அரசியல் படுகொலைகள், மட்டுமீறிய ஜனநாயக மீறல்கள் என்பனவற்றின் காலமாக விளங்கிய பிரேமதாசாவின் காலம, யூ.என்.பி ஆட்சியாளர்களின் ஆட்சியின் மீதான மக்களின் வெறுப்பு தீவிரமடைந்த காலமாகும். ஆயினும் மக்களின் வெறுப்பிலிருந்து கட்சியைக் காப்பாற்றப் போவதாக கூறிய யூ.என்.பியினர் பிரேமதாச மறைந்த இந்த ஓராண்டுக்குள் புதிதாக எதையும் சாதித்ததில்லை. எந்த ஜனநாயக மறுப்பு பிரேமதாசாவின் அபகீர்த்திக்கு காரணமாக இருந்ததோ அந்த ஜனநாயக மறுப்பு இன்னமும் நிலவுவே செய்கிறது. ஜனாதிபதி முறைமையை மாற்றியமைக்க முயலப் போவதாகவும் வேறும் பல அதிகாரங்களை அமைச்சர்களுக்கு வழங்கப் போவதாகவும் குறிப்பிட்ட விஜேதுங்க அரசின் ஆரம்ப சூரத்தனம் வெறும் வாய் சவடாலாகவே போயிற்று. ஆட்கடத்தல், கொலை மிரட்டல் தேர்தல் தில்லுமுல்லுகள் எல்லாம் அப்படியே தொடர்கின்றன. எம்பிலிப்பிட்டிய புதைகுழிகளை மூடி மறைத்தது, தென் மாகாண சபை அரசைத் திட்டமிட்டு கலைத்தது என்பன பிரேமதாசா கால மலினத்துவ அரசியலின் பின்னால் நடைமுறையில் இருந்த அத்தனை விடயங்களும் அப்படியே இருக்கின்றன என்பதைக் காட்டும் இரு உதாரணங்களாகும். பிரேமதாசா கால ஆட்சிக்கும், டி.பி.கால ஆட்சிக்குமிடையில் ஆட்சியின் பீடத்தில் உட்கார்ந்திருக்கும் நபர்கள்தான் மாறியுள்ளார்களே தவிர ஆட்சியின் பிரதான கோட்பாடுகளில் மாற்றமில்லை என்பது தெளிவாகவே புரிந்து கொள்ளப்பட மக்களுக்கு ஓராண்டு காலம் கூடத் தேவைப்படவில்லை.

பிரேமதாசா தனது அரசியலை இரண்டு அடிப்படையான விடயங்கள் மீது கட்டி எழுப்பியிருந்தார். ஒன்று தனக்கும் தனது சகாக்களுக்கும் எதிரான எல்லாவிதப் போக்குகளையும் இரும்புக் கரம் கொண்டு நசுக்குதல். அதற்காக அவர் எத்தகைய ஜனநாயக கோட்பாடுகளையும் விலை கொடுக்கத் தயாராக இருந்தார். இன்னொன்று ஓய்வேயற்ற முடிவில்லாத மலினத்துவத் திட்டங்களை வெளியிட்டுக் கொண்டே இருப்பது. வறுமை ஒழிப்பு ஜனசவிய திட்டம், கம்உதாவ திட்டம் போன்ற திட்டங்களினால் ஆண்டின் 365 நாட்களும் மக்களுக்கான திட்டம் என்ற பெயரால் ஏதாவது திட்டம் ஒன்றை அரங்கேற்றிக் கொண்டிருப்பது, இன,மத வேறுபாடுகட்கு அப்பாற்பட்ட ஒரு தலைவராகவும், எப்போதும் 'ஏதுமற்ற'(ந:த்தி பரி) மக்களுக்காக உழைக்கும் ஒரு அரசாகத் தமது அரசைக் காட்டிக் கொள்வது போன்ற செயல்களால் ஒரு வகையான பிம்பத்தை தன்னைச் சுற்றி உருவாக்கிக் கொள்வது. தனது இத்திட்டங்களை விளம்பரப்படுத்த அவர் அரச சார்பு தொடர்பு சாதனங்கள் அனைத்தையும் மிகவும் செய் நேர்த்தியுடன் பயன்படுத்தினார்.



யூ.என்.பி கட்சியின் அதிகாரத்தில் உள்ள வர்க்கத்தினரின் நோக்கங்களை வெறுமனே நிறைவேற்றும் கருவியாக பிரேமதாசா தனது அரசாங்கத்தை நினைக்கவில்லை. ஆளும்வர்க்கங்களது நோக்கங்களை நிறைவேற்றும் அதேவேளை, அதைப் பரந்துபட்ட மக்களின் ஆதரவுடன் செய்ய வேண்டுமென்பதில் அவர் மிகவும் கவனமாக இருந்தார். அவரது தனியார் மயமாக்கல் போன்ற திட்டங்கள், மக்கள் மயமாக்கல் போன்ற அழகிய சொற்றொடர்களின் பின்னால் மிகவும் இலகுவாகவே மறைக்கப்பட்டன. அவருடைய இம்மலினத்துவத்தின் வெற்றி பல முன்னாள் இடதுசாரிப் புத்திஜீவிகளையே மயக்கிவிட்டிருந்தது. யூ.என்.பியின் வரலாற்றிலேயே இடதுசாரிப் புத்திஜீவிகள் யூ.என்.பிக்காக வேலை செய்தது அவரது காலத்தில் மட்டுந்தான் என்பது ஒரு குறிப்பிடத்தக்க விடயம்.



ஆனால், பிரச்சினை பிரேமதாசா எதிர்பாராத பக்கத்திலிருந்து வந்தது. மேல் மாகாணத்தில் குறிப்பாக கொழும்பு மாவட்ட புத்திஜீவிகளை அவர் அவ்வளவாகக் கணக்கில் எடுக்கத்தவறி விட்டார். ஒஸியை இணைத்துக் கொள்வதன் மூலமாக அதில் பெருமளவு பங்கினை வென்றெடுத்துவிட முடியும் என்று கருதினார். ஆனால் அது சாத்தியமாகவில்லை. அவரது மலினத்துவத் திட்டத்தில் புத்திஜீவிகளை வென்றெடுக்க பொருத்தமான ஒரு திட்டத்தை அவர் கொண்டிருக்கவில்லை. 1989 வாக்கில் தீவிரமடைந்த ஜே.வி.பி கிளர்ச்சியை அவர் நசுக்கிய விதம் இதற்கான வாய்ப்பினை மிகவும் மோசமாகப் பாதித்து விட்டிருந்தது. இப் புத்திஜீவிகள் நாட்டு மக்களின் ஏதுமற்ற (ந:த்தி பரி) பிரிவினருடன் ஒப்பிடுகையில் மிகச் சிறுபான்மையினரே என்ற போதும் அவர்கள் நாட்டின் அபிப்பிராய உருவாக்கத்தில் பிரதான பங்கு வகிப்பவர்கள் என்பதை அவர் அவ்வளவாகக் கணக்கெடுக்கவில்லை. அவரது மலினத்துவத் திட்டங்கள் இப்புத்திஜீவிகளது பலத்த தாக்குதலுக்கு உள்ளாகின.

இதனால் பிரேமதாசாவின் திட்டங்களை விமர்சித்துப் பதவிக்கு வந்ததும் அதிகாரத்தை ஸ்திரப்படுத்திக் கொண்ட யூ.என்.பியின் மேட்டுக்குடிப் பிரதிநிதிகள் அவரது மலினத்துவத் திட்டங்கள் மீது கைவைப்பதே சரியானது என்று கருதினர். ஆனால் அத்தனை நாள் எந்தப் போர்வை பிரேமதாசா அரசின் கோர முகங்களை ஓரளவாவது மூடிமறைத்துக் கொண்டிருந்ததோ அதை நீக்கி விட்டு, தாம் நாட்டில் தேவையற்ற தமாஷாக்களை குறைத்து விட்டதாக நம்பினர்.

மலினத்துவத் திட்டங்களிற்குப் பதில், டி.பி.யின் சிறுபான்மையினங்கள் மீதான தாக்குதல்கள், தீவிரமான யுத்த முயற்சி போன்ற திட்டங்களை முன்வைத்தனர். இனவாதத்தை வெளிப்படையாகவே கக்குவதன் மூலமாக சிங்கள மக்களின் உண்மையான காவலன் இந்தக் கட்சியே என்ற நம்பிக்கையை ஊட்டி விட முயன்றனர்.



கட்சிக்குள் செல்வாக்குள்ள நபர்களைச் சேர்த்துக் கொள்ளல் எதிர்கட்சிகளை உடைத்தல், அவற்றில் பிளவுகளை ஏற்படுத்தல் போன்ற ஜே.ஆர். கால யுக்திகளை மேற்கொண்டனர். அரசின் மீதான அவப் பெயரைப் பாதுகாக்க நீதித்துறையையும் பித்தலாட்டத்துக் குள்ளாக்கினர், பிரேமதாசா காலத்தில் தேடப்பட்டு வந்த உடுகம்பொலவை கூட்டிவந்து உயர் பதவியும் கொடுத்துக் கௌரவித்தனர். அயோக்கியர்களுக்கும், கொலையாளிகட்கும் பதவி வழங்குவதும், அரசியல் பழி வாங்கலுக்காக காரணமில்லாமலே சிறையிலிடுவதும் போன்ற வழி முறைகளை இவர்கள் கையாண்டனர். இவையெல்லாம் இவர்களது அரச இயந்திரத்தைப் பலப்படுத்தவும், செல்வாக்கினை வளர்க்கவும் உதவும் என்று இவர்கள் கருதினர்.

ஆனால் இந்த உத்திகள் எப்போதோ காலாவதியாகிப் போன உத்திகள். 77ற்குப் பிறகு தொடர்ச்சியாக மக்கள் கண்டுவந்த இந்த யுக்திகள் கட்சியின் சரிவை காப்பாற்றிவிடவில்லை என்பதை இவர்கள் மறந்துவிட்டனர். பிரேமதாசா இவைகளை தமது பிரதான பலங்களாக ஒருபோதும் கருதியதில்லை. இவற்றை தனக்கு உதவுபவையாக மட்டுமே அவர் கருதினார். அவர் பிரதான பலமாக கருதியதெல்லாம் அவர் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன் சொன்னதுபோல 'சிறு வயதுமுதல் கட்டிக்காத்த' அவரது நற்பெயரையே. எப்பாடுபட்டாவது, எவ்வழியிலாவது 'நற்பெயரை' பேணுவதிலேயே அவர் கவனமாக இருந்தார். அதற்காக அவர் எத்தகைய ஜனநாயக மீறலுக்கும் தயாராக இருந்தார்.

புதிய ஆட்சியாளர்களோ, இவற்றைப் பற்றிக் கவலைப்படவே இல்லை. 'போர் என்றால் போர் -சமாதானம் என்றால் சமாதானம்' என்று கூறிய ஜே.ஆருக்குத் தப்பாத சீடனாக வந்த டி.பியார் 'இங்கு இனப்பிரச்சினையே கிடையாது' என்று கூறினார்.

கடந்த மாதம் நடந்த தென் மாகாணசபைத் தேர்தலில் பிரேமதாசாவின் பிறந்த கிராமம் உள்ள தொகுதி (பல்லேகல) யைத்தவிர அனைத்து தொகுதிகளிலும் இவர்கள் படுதோல்வியடைந்தனர். இந்தப் படுதோல்வி, திரும்பவும் பிரேமதாசாவின் மலினத்துவக் கொள்கைகள் என்ற போர்வையைத் தாம் போர்த்திக் கொள்ள வேண்டும் என்ற முடிவை மேட்டுக்குடி நபர்களுக்கு ஏற்படுத்தியிருக்கின்றது. பிரேமதாசாவின் மரணத்தோடு அவமானப்படுத்தப்பட்டு ஒதுக்கப்பட்ட பிரேமதாசா குடும்பத்தை திரும்பவும் கட்சிக்குள் இழுக்கவும் தொண்டமானுடன் உடைந்த உறவைப் புதுப்பிக்கவும் அவர்கள் செய்த முயற்சிகள் இதை தெளிவாகக் காட்டுகின்றன. பிரேமதாசாவின் கொள்கைகளை மீள உயிர்ப்பிக்கும் இந்த நடவடிக்கை யூ.என்.பியின் தவிர்க்க முடியாத கடைசிப் புகலிடமாகியுள்ள அதேவேளை பிரேமதாசாவின் கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதில் தீவிரமாக உழைத்த சிறிசேன குரேயை வெளியேற்றுவதையும் இவர்கள் நிறுத்திவிடவில்லை.


பிரேமதாசாவின் பெயரால் கிடைக்கக் கூடிய லாபங்களை பெற்றுக் கொள்ளவும், பிரேமதாசா அணியினரை விரட்டி விட்டு மேட்டுக்குடியினர் அதிகாரத்தை தொடர்ந்து நிலைநிறுத்தவும் ஏற்ற விதத்தில் அண்மைய சரிக்கட்டல்கள் நடந்துள்ளன.

எது எப்படி இருப்பினும், பிரேமதாசாவின் மரணம், பிரேமதாசாவின் மலினத்துவ கொள்கைகளின் சரிவுடன் சேர்ந்து நிகழ்ந்த ஒரு நிகழ்வாகிப் போனது என்பதை யூ.என்.பியினர் கணக்கில் எடுக்காமலேயே இந்த நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர் என்பது தெளிவு. எழுந்துவரும் சந்திரிகா அலையின் வேகத்துக்கு முன்னால், இத்தகைய மீள்கொணரல்கள் எவ்வளவுக்கு தாக்குப் பிடிக்க முடியும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. சந்திரிகா அலையின் பின்னால் எழுந்துள்ள அலை, பிரேமதாசா காலத்து மலினத்து அலையின் இன்னொரு வடிவமாகவே உள்ளதால், ஏற்கனவே முடிவுப்புள்ளியை நோக்கி நகர்ந்து விட்ட பிரேசமதாசா அலையை மீளக் கொணர்வது யூ.என்.பியினரின் எதிர்பார்ப்புகட்கு வாய்ப்பாக இருக்கப் போவதில்லை.

மேட்டுக்குடி யூ.என்.பியினர் கருத்துக்களை விட, சந்திரிகாவின் மக்கள் கூட்டின் 'மக்கள் சார்புப்' போலித்தனம் அதிகம் விலைபோக கூடிய சரக்காக உள்ளதை ஒருவர் அவதானிக்காமல் இருக்க முடியாது. இம்முறை மேதின ஊர்வலம் இதற்கு ஒரு தெளிவான சாட்சியாக அமைந்தது.

பிரேமதாசாவின் பிரதிமைகளை நகர வீதிகளெங்கும் ஒட்டிவைத்து, அவரது உருவச்சிலையை திறந்து வைத்து, தொடர்பு சாதனங்களின் மூலமாக அவரை மீள உயிர்ப்பித்துக் கொள்ள நடாத்தும் இந்த நாடகம் மூலம் யூ.என். பியினர் மெய்ப்பிக்க விரும்புவது என்ன என்பதையிட்டு யாரும் அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை.

சிலையை நிமிர்த்தலாம்; செத்ததை உயிர்ப்பித்தல் சாத்தியமா?



சரிநிகர்
4, ஜெயரட்ன மாவத்தை,
திம்பிரிகஸ்யாய
கொழும்பு - 5
தொலைபேசி 584380

பிரதம ஆசிரியர் : சேரன்

# மேதினம்

எல்லாக் கட்சிகளும் வழமைபோல மே தினத்தை வெகு கோலாகமாகக் கொண்டாடியிருக்கின்றன.

ஐ.தே.கவுக்கு மட்டும் இம்முறையும் துரதிர்ஷ்டம்.

காலி முகத்திடலில் 'தொழிலாளர் மகிழ்ச்சிக்காகப்' போடப்படும் பல லட்சக்கணக்கான ரூபா செலவுள்ள பந்தலோ, இன்னும் பல லட்சங்களைச் செலவு செய்து வட இந்தியாவிலிருந்து வருவிக்கும் சினிமா பாடகர்களோ (ஐ.தே.கட்சி அரசின் சிறுபான்மை இன தொழிலாளர்களின் மீதான கரிசனை காரணமாக வட இந்தியர்களுடன் தென்னிந்தியத் தமிழ்ப் பாடகர்களும் அவ்வப்போது அழைக்கப்படுவதுண்டு) இல்லாமல் மே தினத்தைக் கொண்டாடினார்கள் என்று கூட எழுத முடியாதளவுக்கு அவர்களுக்குள்ளேயான அக்கப் போர்.

ஐ.தே.கவின் சரிந்து வரும் செல்வாக்கையும், கட்சிக்குள்ளான இழுபறியையும் 'பிரேமதாசாவுக்கு அஞ்சலி செய்வது' என்கிற போர்வைக்குள் மறைந்து விடப்பார்க்கிறது அது. கூடவே இன்னொரு இலாபமும் அதற்கு உண்டு. எட்ட நிற்கும் பிரேமா அணியினரை கிட்ட அழைக்கும் ஒரு தந்திரமும் கூட அது. பிரேமதாசாவின் இறுதிக் கிரியைகளுக்கே சுகவீனம் காரணமாக வராமல் போன முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனாவே வந்து பிரேமதாசாவின் சிலையைத் திறந்து வைக்க வேண்டிய நிர்ப்பந்தம். இம்முறை தற்போதைய ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க சுகயீனம் காரணமாக இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவில்லை என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்த வருடம் இவரும் எங்காவது ஒரு பிரேம்தாசாவின் சிலை திறப்பு விழாவிலேயோ அல்லது பெயர் சூட்டு விழாவிலேயோ கலந்து கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. விடயம் அது வல்ல.

தொழிலாளர்களது தினத்தை அன்று முதல் இன்று வரை வெறும் கேலிக்கூத்தாகவும், களியாட்டங்களாகவும் மாற்றி வைத்த 'பெருமை' ஐ.தே.கவைத்தான் சாரும்.

அதனுடைய அகராதியில் மே தினம் என்பது வருடம் முழுவதும் உழைக்கும் தொழிலாளர்களுக்கு வருடத்தில் ஒரு முறை தொழில் கொள்வோர் தமது செலவில் வழங்கும் ஒரு களியாட்ட நாள். அதற்கு மேல் ஒன்றுமில்லை. இதுவே இங்குள்ள எல்லா முதலாளித்துவக் கட்சிகளுடைய கோட்பாடும். பெருமளவு தொழிலாளர்களை கொண்டதாக கூறப்படும் இ.தொ.காவும் இதற்கு விதிவிலக்கல்ல.

இக்கட்சிகளது நலன்களையும், கோட்பாடுகளையும் முன்னெடுத்துச் செல்லவும், அவற்றை இலகுவாக வெகுஜனப் படுத்தவும் இந்த மேதினத்தை இவை பயன்படுத்தி வருகின்றன.

இம்முறையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஐ.தே.க மீதான வளர்ந்து வரும் அதிருப்தியைப் பயன்படுத்தி தான் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான வாக்குகளைப் பெறுவதற்குரிய ஒரு பிரச்சார மேடையாகவே இந்த மே தினத்தை பயன்படுத்தியிருந்தது. இக் கட்சிகள் ஆட்சிக் கட்டிலில் ஏறுவதற்காக உதிர்க்கும் வெறும் வெற்றுக் கோஷங்களே தொழிலாளர் உரிமைகள் பற்றிய இவர்களது கோஷங்கள்.

இடதுசாரிக் கட்சிகளோ மே தினத்தின் புரட்சிகரத் தன்மையை எல்லாம் தொலைத்து விட்டு -சாயம் போன சிவப்புச் சட்டையை மட்டும் இன்னமும் வைத்திருக்கிறார்கள். வெறும் தொழிலாளர் நல உரிமைகள் என்பவற்றுக்குள் அடைபட்டு இந்த முதலாளித்துவ சக்திகளின் பின்னால் இழுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில் சிக்காகோ நகரில் தொழிலாளர்களின் போராட்டம், சிந்திய ரத்தம் அவர்களது அதிகாரம் என்பன யாவும் இந்தப் பாராளுமன்றக் கட்சிகளது மேதின கலாசாரத்தில் அடிபட்டுப் போய்விட்டன.

தொழிலாளர் தினம் இக் கட்சிகளின் அரசியல் முழக்கங்களை அரங்கேற்றும் தினமாகச் சிறுமைப்படுத்தப்பட்டுவிட்டது.

தொழிலாளர்களது அதிகாரத்துக்கான அவர்களது போராட்டம். அதற்கான நினைவு கூரப்படும் இந்நாள் இந்தப் படாடோபங்களுக்குள் திட்டமிட்டு வசதியாக மறைக்கப்பட்டு விட்டது.

'திறந்த பொருளாதாரக் கொள்கை' யின் கீழ் உலகச்சந்தையின் இராட்சத நுகர்வுக்கும், பல்தேசியக் கம்பனிகளின் சுரண்டலுக்கும் தீனியாகிப் போய்க் கொண்டிருக்கும் லட்சக்கணக்கான தொழிலாளர்களது வாழ்வும் அவர்களது உரிமைகளும் பற்றி இத்தினத்தில் மூச்சுவிடக்கூட ஒருவர் இருக்கவில்லை.

எங்களது முதுகில் சவாரி செய்தே எங்கள் மீதான அதிகாரத்தைப் பெற அவர்களை எதுவரையில் நாம் அனுமதிக்கப் போகிறோம்? என்று உழைக்கும் மக்கள் தமது முஷ்டியை உயர்த்தப்போவது எப்போ?

இதுதான் இப்போது முக்கியமான கேள்வி.

கிழக்கின் ஊர்மனைகள் தோறும் நிலை கொண்டிருந்த இராணுவத்தின் பெரும்பகுதியினர் வடக்கே நோக்கி நகர்த்தப்படுவதால் அம்பாறை மாவட்டத்தில் நிலை கொண்டிருந்த விசேட அதிரடிப்படையினர், இராணுவம் விட்டு வெளியேறும் மட்டக்களப்பின் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அம்பாறை மாவட்டம் முழுவதும் பொலிஸாரின் பொறுப்பில் முடுக்கிவிடப்பட்டுள்ளது. இவர்களின் நடவடிக்கைகள் அதிரடிப்படையினரின் கெடுபிடிகளையும் முரட்டுத்தனங்களையும் விட மிகவும் மூர்க்கத்தனமாகவுள்ளது.

ஐ.தே.கட்சியின் ஆசியுடன் அமைச்சர் மன்சூரின் சிபாரிசின் பேரில் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட பலநூறு முஸ்லீம் பொலிஸாரே இங்கு கூடுதலாக கடமையீலிடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

அன்றாடத் தேவைகளுக்காகவும், தொழிலின் நிமித்தமும், முஸ்லீம் பிரதேசங்களான கல்முனை, மருதமுனை போன்ற இடங்களுக்குச் செல்லும் தமிழர்களை இனம்பிரித்து வயது வேறுபாடின்றி முன்னர் ஊர்காவல் படையினர் செய்த பாணியில் கேள்விகளைக் கேட்டுத் துளைப்பதும், தூஷண வார்த்தைகளால் பேசுவதுமென தனிக்காட்டு ராஜாங்கம் நடாத்துகிறார்கள். இவை தணிந்து போயிருக்கும் தமிழ், முஸ்லீம் முரண்பாடுகளை மீள உசுப்பி விடும் நடவடிக்கைகளாக இருக்கின்றன.



# பிரிகேடியரின் 'மென்மனம்'

## மட்டக்களப்பிலிருந்து வர்மா

அதைவிடச் சித்திரைப் புத்தாண்டுக்காக அரசபடையினர் நடத்திய விளையாட்டுப் போட்டியில் மாட்டு வண்டி ஓட்டமும் இடம் பெற்றது. இதில் முதல் பரிசு பெற்று பின்னர் பரிசும் கொடுக்காமல் கலைத்து விரட்டப்பட்ட மாட்டு வண்டிக்காரர், போட்டியில் தனது மாட்டைக் கத்தியால் முதுகிலும், தொடையிலும் குத்திக்கிழித்து அதன் மேல் உப்பைத் தடவி ஓடவைத்து முதலில் வந்தவராம். இவரின் மிருகவதையைப் பிரிகேடியர் ரொஹான் குணவர்த்தனா மிக வன்மையாகக் கண்டித்துள்ளாராம். அவ்விஷயத்தை தனது நண்பர் ஒருவரிடம் பிரிகேடியர் ரொஹான் குணவர்த்தனாவின் பின்னால் எந்நேரமும் சுற்றிக் கொண்டு திரியும் அரசு அதிபர் மோனகுருசாமி பெருமையுடன் சொல்லிக் கொண்டாராம். ''என்ன மனிதாபிமானம் பாருங்கள். மாட்டுக்கு ஏற்பட்ட வலியைக்கூட தாங்கிக் கொள்ளக்கூட முடியாத மென்மையான மனசு அவருக்கு'' என்றராம்.

வந்தாறுமூலையிலும், தள்ளாமுனையிலும், தாழங்குடாவிலும், கொக்கட்டிச் சோலையிலும், மைலந்தனையிலும் பிஞ்சுக் குழந்தைகளிலிருந்து பெரியவர்கள் வரை ஒரு நூறு ஆயிரம் மனிதர்கள் இதே பிரிகேடியரின் படைகளினால் தான் எரித்துக் கொல்லப்பட்டார்கள். ஐயா மோனகுருசாமி அவர்களே அந்த நேரம் நீங்கள் எந்த தேசத்தில் இருந்தீர்கள்?

அதே நேரம் மண்டூரில் இறுதியாக நடந்த சித்திரைப் புது வருடவிழா மேடையில் விசேட அதிரடிப்படை அதிகாரி பேசிவிட்டு கீழே இறங்கியதும் குண்டு வெடித்தது. மக்கள் கலைந்து ஓடினார்கள். விட்டார்களா படையினர். கலைத்துப் பிடித்து நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களை வெளுத்து வாங்கினார்கள். பரிசு வாங்கியவர்கள் உட்பட பலர் இன்னமும் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

மட்டக்களப்பில் ஐ.தே.கட்சி தலைமைகளுக்குள் தங்கள் பலத்தை நிரூபிக்க கடும் போட்டிகள். பத்மநாதனுக்கும், ஈஸ்வரனுக்கும் தோன்றியெழுந்த பிரச்சினையில் ஈஸ்வரன் ஐயா அவர்கள் காட்டுக்கந்தோர் வரை போய், நான்கு நாட்கள் உள்ளே இருந்து விட்டார்.

தேர்தலில் போட்டியிடாமல் இருப்பதே நல்லதென பலரிடம் கூறினாராம் ஈஸ்வரன். இல்லையேல் புலிகளிடம் அனுமதி பெற்றுத்தான் நிற்கவேணும் என்றாராம். இவ்விடயங்களையெல்லாம் நீண்ட பக்கங்களில் நிரப்பி பத்மநாதன் மேலிடத்துக்கு அனுப்பியதால் வந்த விளைவு ஈஸ்வரன் இப்போது எதுகேட்டாலும் மௌனமாக இருக்கிறார். பார் எனக்கே இப்படிச் செய்து விட்டார்கள் என்று தனக்கு வேண்டியவர்களிடம் அடிக்கடி சொல்லிக் கொண்டாராம்.

ஈஸ்வரனின் ஆதரவாளர்களிலிருந்து பத்மநாதனுக்கு எதிராக தேர்தல் காலங்களில் பிரச்சாரம் செய்தவர்களும் பயந்து கொண்டு தானிருக்கிறார்கள். மோனகுருசாமி ஐயா அவர்களுக்கு ஒரு பிரிகேடியர் ரொஹான் குணவர்த்தனா மாதிரி பத்மநாதன் ஐயா அவர்களுக்கு பொலிஸ் மா அதிபர் டக்ளஸ் பீரிஸ், தனது பழைய கோபதாபங்களின் வெளிப்பாடுகளை பத்மநாதன் பழிவாங்கல்கள் மூலம் காட்டத் தொடங்கி விட்டார்.


முகத்தைப்பார்த்துச் சிரிப்பதற்கும் பத்து ரூபா லஞ்சம் கேட்கும் ரிஸ்வி சின்னலெப்பை இப்போது ஐ.தே.கட்சி வட்டாரங்களிலிருந்து பின்னுக்கு கொஞ்சம் தள்ளி வைக்கப்பட்டுள்ளார். இதற்கு முக்கிய காரணம் தேர்தல் மோசடியால் குற்றம் சாட்டப்பட்டதால் அல்லவே அல்ல. தேர்தல் பிரச்சாரத்துக்கு ஒதுக்கிய தொகையில் சுருட்டிக் கொண்டதே.

முன்னைய மாகாணசபைத் தேர்தலாலும் கிழக்குக்கு ஒதுக்கிய பணத்தில் பெரும்பகுதீயை ரிஸ்வி சின்னலெப்பையும், முன்னாள் அமைச்சர் கே.ட பிள்யூ தேவநாயகமும் சுருட்டிக் கொண்ட விடயம் முன்னைய ஜனாதிபதி பிரேமதாசா வரை சென்றது. ரிஸ்வி சின்னலெப்பை பியோன் வேலைக்கும், ரீச்சர் வேலைக்கும், பொலிஸ் வேலைக்கும் நிவாரணம் எடுத்துத் தருவதாக் கூறியும் பலரிடம் லஞ்சம் பெற்ற விடயம் முன்னைய ஜனாதிபதி பிரேமதாசாவால் நேரடியாகவே கடிந்து கொள்ளப்பட்டது.

நடந்து முடிந்த தேர்தலாலும், தேர்தலுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் அளவிற்கு மீறி சுருட்டிக் கொண்டதற்காகவும் ஐ.தே,கட்சியினால் கொஞ்சம் கடிந்து கொள்ளப்பட்டு தள்ளி வைக்கப்பட்டிருக்கிறார். எல்லாம் அடுத்த தேர்தல் வரையும் தான். திரும்பவும் நிமிர்ந்து விடுவார்.

# 1977: த.வி. கூட்டணியின் தமிழீழக் கோஷம்

## தேர்தல் வெற்றிக்கான ஏமாற்று?



எப்போதும் சரியானவற்றை மட்டுமே ஒருவர் செய்ய வேண்டும் என்பதில்லை; ஒருவர் தவறுகள் செய்வது சாத்தியமே. ஆனால் தனது புத்திக்கு சரியென்று படாததைச் செய்வது தான் ஆபத்தானது. ஏனென்றால் முன்னவர் தன்னைத் திருத்திக் கொள்ள முடியும். பின்னவரால் தன்னை ஒருபோதும் திருத்திக் கொள்ள முடியாது.

ஒரு தமிழ்க்கட்சி பாராளுமன்றப் பாதையை தனது அரசியல் பாதையாக வகுத்துக் கொள்வது, அவ்வழியிலேயே இன்று நிலவுகின்ற சிக்கலைத் தீர்க்க முடியும் என்று நம்புவது என்பவற்றில் ஒருவர் ஒரு போதும் குற்றங் காணமுடியாது. அப்படிச் செய்வதற்கு ஒரு கட்சிக்கு பூரண உரிமையும் உண்டு.


பாராளுமன்ற வழிமுறையில் அல்லது அது போன்ற வழிகளில், தாம் கருதும் அரசியல் கோட்பாடுகளுக்காக இயங்குகின்ற ஒருவரை அல்லது ஒரு கட்சியை அவ்வாறு இயங்க அனுமதிக்க மறுப்பதும் அது வெளிப்படையாகவே தவறானதாக இருப்பினும் கூட - ஜனநாயக விரோதமானதாகும். ஆனால், அது எதற்காக தனது அரசியல் பாதையை அவ்வாறு வகுத்துக் கொள்வதாக சொல்கிறதோ; அதற்கு முரணாக தனது நடவடிக்கைகளை வகுத்துக் கொள்ளும் போதுதான் அதன் உண்மைத் தன்மை மீதான சந்தேகம் எழுகிறது.

இன்று புனருத்தாரணம் செய்து கொண்டு மீண்டும் அரசியலில் தீவிரமாக இயங்க (அவர்களின் வார்த்தைகளில் 'மக்களுக்கு சேவை செய்ய வேண்டும்') முடிவெடுத்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி தொடர்பாக சிந்திக்கும் ஒருவருக்கு மேற்கண்ட சிந்தனைகள் எழாமலிருக்க நியாயமில்லை.

தேர்தலுக்கான காலம் நெருங்கிக் கொண்டிருக்கையில் கட்சிக் கிளைகளைப் புனரமைத்துக் கொள்வதும், அதன் மூலம் தமது மக்களின் 'அபிலாஷைகளையும் தேவைகளையும் வென்றெடுக்கவும்', அவர்களது எதிர்கால 'நல்வாழ்வினை கட்டிக் காக்கவும்' பாராளுமன்ற வழியை நம்புகின்ற ஒரு கட்சி முயற்சி செய்வது நியாயமே.

ஆனால் இங்கு எழுகின்ற முக்கியமான கேள்வி, இந்தப் பாராளுமன்றப் பாதை' இவற்றையெல்லாம் செய்வதற்கு இவர்களை அனுமதிக்கும் என்பதை இவர்கள் உண்மையாகவே நம்புகிறார்களா என்பது தான்.

1977 இல், இதே கட்சி, தமிழ் மக்களின் விடுதலைக்கு 'தமிழீழம் ஒன்றே தீர்வு' என்று அறிவித்து, அதை வடக்குக் கிழக்கின் பெரும்பான்மை மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்று காட்டுவதற்காக தமக்கு வாக்களிக்கும்படி கேட்டது; வெற்றியும் பெற்றது. அம்மக்களின் 'அபிலாஷைகளும் தேவைகளும்' 1977 இற்குப் பிற்பட்ட நாட்களில் எவ்வளவு மோசமாகிப் போயின என்பதும், அதற்காக இந்தக் கட்சியால் எதையும் செய்ய முடியவில்லை என்பதும் தெரிந்தவைதான். பாராளுமன்றத்துள் எதிர்கட்சியாக வந்த ஒரே காரணத்துக்காக, இக்கட்சியினரை பாராளுமன்றத்திலிருந்து விரட்ட ஐ.தே.க அரசு செய்த செயல்களையும், ஈற்றில் இவர்களை விரட்டியதையும் இவர்கள் மறந்திருக்க முடியாது.



1977 இலிருந்து 1993 வரையான இந்தப் 16 வருட காலத்துள் எந்தஉருப்படியான விடயங்களையும் இக்கட்சியால் சாதிக்க முடியவில்லை. இந்திய அரசுடன் பேசி, இலங்கை இந்திய ஒப்பந்தம் என்ற ஒரு 'ஆக்கிரமிப்பு ஒப்பந்தத்தை' நடைமுறைக்கு கொண்டு வர துணை போனதைத் தவிர.

'தமிழர் விடுதலைக் கூட்டணி' யின் 'தமிழர் விடுதலையும் போய், கூட்டணியும் போய் சில தனிநபர்களாகச் சுருங்கிப் போகக் காரணமாக இருந்த அதன் பாராளுமன்றப் பாதையை அது இன்றுவரை நம்பிக் கொண்டிருக்கின்றதென்றால் இதை எப்படி விளங்கிக் கொள்வது?

பாராளுமன்றம் அது வழங்கும் பதவி இன்ன பிற சுகங்கள் தான் இவர்கள் இலட்சியங்கள்; அதை மூடி மறைக்கவே தமிழ் மக்களின் அபிலாஷைகள் பற்றி இவர்கள் பேசுகிறார்கள் என்று சொல்லலாமா?

உண்மை; தமிழர் விடுதலைக் கூட்டணியை சுதந்திரமாக இயங்குவதற்கு விடுதலைப்புலிகள் அனுமதிக்கவில்லை; அதன் தலைவர்களையே புலிகள் சுட்டுக் கொன்றார்கள். மாற்றுக் கருத்தாளர்களை துப்பாக்கிக் குண்டுகளால் எதிர் கொள்வதுதான் புலிகளின் அரசியலாகிப் போனது எமது தேசத்தின் துரதிர்ஷ்டம்; அது கூட்டணிக்கும் துரதிர்ஷ்டமாய்ப் போனது.

ஆனால், ஒரு காலத்தில் தானைத்தளபதி என அழைக்கப்பட்ட 'அண்ணன் அமிர்தலிங்கம்', எந்த ஒருவரது விரலசைப்புக்காக முழுத்தேசமும் பொங்கியெழத்தயாராக காத்திருந்ததோ அந்த அமிர்தலிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டது ஒரு சாதாரண; மிகச் சாதாரண மரணங்களில் ஒன்றாகிப் போய்விட்டதே? எப்படி?

இது அவர்கள் முன்வைத்த கொள்கையைக் கைவிட்டு 'தமிழீழக் கோரிக்கையை' வெறும் பாராளுமன்றத் தேர்தல் கோஷமாக அவமதித்ததால், அதைக் கைவிட்டு விட்ட 'துரோகத்தனமான' செயலால் நியாயப்படுத்தப்படவில்லையா?

இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தில் இளைஞர்களையும், வயல் வெளிகளையும் பயிர் பச்சைகளையும் தனது டாங்கிச் சக்கரங்களுக்குள் நசுக்கிக் கொண்டிருக்கையில் தூரதர்ஷன் மூலமாக இந்தியாவில் இருந்தபடி இந்தியப் படையை ஆதரிக்கும்படி இந்தத் தானைத் தளபதி கோரிக்கை விட்டதால் இக்கொலை நியாயப்படுத்தப்படவில்லையா?

இத்தனைகால அரசியல் நெருக்கடிகளைச் சந்தித்த அனுபவத்தின் பின்னால், 'தமிழ் மக்களின் விடுதலைக்காக' கட்சிக்கிளைகளைப் புனரமைத்து தேர்தல் முஸ்தீபில் இறங்குவது தான் சரியென்று அது உண்மையாக நம்புகிறதா?

ஆட்சியிலிருப்பவர்களைப் பற்றியும், அவர்களிடமிருந்து சிறுபான்மை மக்கள் விடுதலை பெற ஆராய வேண்டிய விடயங்கள் பற்றியும் ஒரு கட்சியின் கருத்தை மக்கள் எதிர்பார்க்கின்ற காலம் இது.

'மக்களோடு மக்களாக இருந்து செயற்பட வேண்டிய காலம் கனிந்து விட்டது' என்ற முடிவு எதற்காகச் செயற்பட என்ற கேள்விக்குப் பதிசொல்லாமலே அறிவிக்கப்படுவதை யாருமே ஏற்றுக் கொள்ள முடியாத காலம் இது.

ஏனென்றால் இது 1977 அல்ல; 1994. இத்தனைக்கும் பிறகு இக்கட்சி -தனது செயல்களை வகுத்துக் கொள்ளும் போது இந்தக் கேள்விகளுக்குத் தெளிவான பதில்களை பகிரங்கமாக வைத்தே ஆக வேண்டும்.

- 'தமிழீழம்' என்று 1977ல் சொன்னது வெறும் தேர்தல் வெற்றிக்கான கோஷமா? அப்படியானால் அதனால் திரட்டப்பட்ட இளைஞர்களை அம்முயற்சியை கைவிடும்படி கட்சி கேட்குமா?
- பாராளுமன்ற தேர்தல், மாகாணசபைகள் போன்ற இலங்கை அரசின் அமைப்புகளின் ஊடாக எப்படிப்பட்ட நன்மைகளை தமிழ் மக்கள் பெற்றுக் கொள்ளலாம் என்று இக்கட்சி நம்புகிறது?
- இத்தனைகால பாராளுமன்ற அனுபவத்தில் இக்கட்சி சாதித்த- தமிழ் மக்களுக்காகச் சாதித்த -ஒரு சில சாதனைகளையாவது அறிவிக்குமா?
- தமிழ் முஸ்லீம் மக்கள் தொடர்பாக இக்கட்சி என்ன தீர்வைக் கொண்டிருக்கிறது?
- இத்தீர்வு தமிழ் மக்களது 'அபிலாஷைகள் மற்றும் தேவைகளை' எப்படி தீர்க்கும் என அது விளக்குமா?
- தனது இத்தனைநாள் நடவடிக்கைகளை அது பகிரங்கப்படுத்துமா?

தான் செய்வது தனது மனச்சாட்சிக்கே சரியென்றுபட்டால் இக்கட்சி இவ்வளவுக்கும் பதில் சொல்லலாம். அல்லாவிட்டால், பொய், ஏமாற்று, வஞ்சகம் என்பன நிறைந்த திருட்டு வேலை ஒன்றுக்கு இவர்கள் தயாராகிறார்கள் என்று மக்கள் புரிந்து கொள்ள ஒருசில நாட்களே போதும்?

சோசமறுப்பான்

---

# மட்டக்களப்பு ஆடைத் தொழிற்சாலை: ஊதியமுமில்லை உத்தரவாதமுமில்லை



மட்டக்களப்பில் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலை பெயருக்குத்தான் ஆடைத் தொழிற்சாலையாக இருக்கின்றதே தவிர இதனால் எந்தவொரு பிரயோசனமும் மட்டக்களப்பிற்கு ஏற்படவில்லை. ஆனால் ஆடைத்தொழிற்சாலையை ஆரம்பித்ததன் மூலம் அதனுடைய உரிமையாளர்தான் ஏராளமாகச் சம்பாதித்து விட்டார். அரசாங்கத்தின் சலுகைகளைப் பயன்படுத்தி தன்னுடைய சொத்துக்களைப் பெருக்கியுள்ளார். ஆனால் இவருடைய ஆடைத் தொழிற்சாலையில் வேலை செய்யும் வறிய யுவதிகள் அனுபவிக்கும் துன்பங்களும், வேதனைகளும் எண்ணிலடங்கா.

இங்கு வேலை செய்யும் யுவதிகளுக்கு மாதம் ஒன்றிற்கு பத்து நாட்களுக்கு மேல் வேலை கொடுக்கப்படுவதில்லை. வேலை கொடுக்கப்படும் நாட்களில் மிகவும் மோசமான முறையில் வேலை வாங்கப்படுகின்றார்கள். தேனீர் இடைவேளை ஐந்து நிமிடங்களுக்கு மேல் கொடுக்கப்படுவதில்லை. காலை 7.30 தொடக்கம் மாலை 5.30வரை வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். தொழிலாளர் சட்டங்கள் எல்லாம் முற்றாக மீறப்படுகின்றன.

இதே சமயம் வேலை செய்பவர்களிடம் வெளிப்படையாக வேலை இல்லை அவர்கள் வேலைக்கு வந்த பின்பு அவர்களிடம் இன்று நூல் வரவில்லை, சீலை வரவில்லை என்ற நொண்டிக் காரணங்களைக்கூறி அடுத்தநாள் வேலைக்கு வரும்படி கூறி திருப்பி அனுப்பி வைக்கப்படுகின்றனர். அத்தோடு வேலை இல்லை என்று திருப்பி அனுப்பியதை வெளியில் கூற வேண்டாம் என்றும் அப்படிக் கூறினால் வேலையில் இருந்து நிற்பாட்டி விடுவதாகக் கூறியும் இந்த ஆடைத் தொழிற்சாலை நிர்வாகம் யுவதிகளைப் பயமுறுத்தியுள்ளது. இவ்வாறு வேலை செய்வதன் காரணமாக வேலை செய்பவர்கள் மாதம் ஒன்றிற்கு 500-750 ரூபா வரையுமே சம்பளம் பெறுகின்றனர். ஆனால் ஆடைத் தொழிற்சாலையில் வேலை செய்பவர்கள் அனைவரும் மாதம் ஒன்றிற்கு ரூபா 2000/= மாதச் சம்பளம் பெற வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை. இதை நிரூபிப்பதற்காக இவர்கள் அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கும் கணக்குகளில் வேலை செய்பவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூபா 2000 சம்பளம் கொடுத்ததாகக் கணக்குக் காட்டுகின்றனர். இதையும் மீறி யாராவது அதிகாரி வந்துவிட்டால் அவரை ''உரிய முறைப்படி'' கவனித்து அனுப்பி வைக்கின்றனர். இதனால் இங்கு நடைபெறும் விடயங்கள் வெளியுலகத்திற்கு வராமல் உள்ளுக்குள்ளேயே அமுக்கப்பட்டு வருகின்றன.

அத்தோடு இங்கு வேலை செய்பவர்கள் அனைவரும் ரூபா 2000 மாத வருமானமாகப் பெறுவதாகக் கருத்தில் கொண்டு அரசாங்கம் இவர்களுடைய குடும்பத்திற்கு வழங்கப்பட்ட உணவு முத்திரையை நீக்கியுள்ளது. இதனால் உணவு முத்திரையை நம்பியிருந்த இக்குடும்பங்கள் உணவு முத்திரையும் இல்லாமல், ரூபா 2000 வருமானமும் இல்லாமல் நடுத்தெருவிற்கு வரும் நிலையில் உள்ளன. இவ்வளவிற்கும் இந்த ஆடைத் தொழிற்சாலையை நடாத்துபவர் ஒரு தமிழரே.

உணவு முத்திரையுமில்லை, போதிய ஊதியமில்லை. தொழில் உத்தரவாதமில்லை. ஆடைத் தொழிற்சாலை என்ற பேரில் ஏய்ப்புத் தான் நடக்கிறது.

சத்தியேந்திரா

நன்றி - நூலகத்திட்டம்



## எதிலிருந்து தொடங்குவது? _ 8

# பனைகள் சுடத் தொடங்குகின்றன

## அ.டேவிட் நந்தகுமார்

நாலைந்து மாதங்களில் குணமண்ணை மீண்டு வந்தார். வருகிற போது முகம், மனம் சரியில்லை. கறுத்துத்தான் இருந்தார்; மெலிந்து தான் இருந்தார். உடலில் காயத்தின் வடுக்கள் தெரிந்தன. இமையின் நடுவில் வெட்டுத் தளும்பு கொஞ்சம் வீங்கித் தெரிந்தது.

வாசிகசாலைக் குந்துக்கு அவர் வரவில்லை. அம்மன் கோயில் வாசலை எட்டிக் கூடப் பார்க்கவில்லை.

குணமண்ணையின் வயதொத்த நண்பர்கள் அவரை வீட்டில் சென்று பார்த்தார்கள். கதை குறைந்து விட்டது. விரக்தியடைந்து இருந்தார் என்றுதான் ஊரில் பேசிக் கொண்டார்கள்.

''கலியாணம் முடிஞ்சு பிள்ளை குட்டி பெற வேண்டிய வயசிலை உவனுக்கேன் தேவையில்லாத வேலை....'' என்றுதான் நாகம்மா மாமியும் கூறினார்.

சைக்கிள் காற்றுப்போய் ஓட்டுவதற்காக வைத்தியண்ணையின் சைக்கிள் கடைக்கு சைக்கிளை உருட்டிக் கொண்டு சென்றேன்.

கடையின் குந்தில் குணமண்ணை இருந்தார். குணமண்ணை என்னைக் கவனிக்கவில்லை என்று நினைத்தேன்.

''என்ன குணமண்ணை? பேசாமல் இருக்கிறியள்....'' என்றேன்.

அவர் கால்களை அக்கறையுடன் கவனித்தேன். இரு கால்களிலும் காயம் பட்டு மாறிய வடு கறுத்துப் போய்க் கிடந்தது. சூடு பட்ட போது என்ன மாதிரி துடித்திருப்பாரோ?

விரக்தி தொனிக்க, ''பேசிப்பேசி என்னத்தைக் கண்டது?'' என்று கேட்டார்.

நான் பேசாதிருந்தேன்.

''வைத்தி...குலசேகரமண்ணை ஆக்கள் செய்த வேலைதான் இதுக்குச் சரி... '' என்றார்.

''குலசேகரமண்ணை என்ன செய்தவர்?''

''உது முந்தி நடந்த கதை.... கொய்யாவைக் கேட்டுப்பார் சொல்லுவார்...'' என்றார் குணமண்ணை.

சைக்கிளை ஒட்டி எடுத்துச் செல்கிற போது குணமண்ணை சேர்ந்து வந்தார்.

''நீ ஆற்றையேனும் வீட்டிலை துவக்குக் கண்டனியோ?'' என்று இரகசியமாகக் குணமண்ணை கேட்டார்.

நமக்கு ஆச்சரியம். இவருக்கு துவக்கு எதற்கு? நம்மூரில் காடு கிடையாது. வெடி வைத்துப் பிடிக்க வேண்டிய மிருகங்கள் இல்லை. பற்றைகள் தான் அதிகம். பற்றைக்குள் முயலும், உடும்பும் தான் பிடிப்பார்கள். அவற்றை வேட்டையாடுவதற்கு ஒரு போதும் துவக்குத் தேவைப்பட்டதில்லை. குறிதப்பாது எறிகிற ஒருவனும், பொல்லுகளும், நாய்களும் போதும். நாகன், வீட்டு வேலி பாய்ந்து, வேலியைப் பிடுங்கி, வேட்டையாடுகிற போது அம்மாவிடம் நிறையத் தரம் திட்டு வாங்கியிருக்கிறார். வேலிகளைப் பிடுங்குவதற்கு மாத்திரம் என்றல்ல; அப்பாவி மிருகங்களான முயல் உடும்பை வேட்டையாடுவதற்காகவும் தான்.

நாகனின் கையில் துவக்கை ஒரு போதும் கண்டதில்லை. நம்மூரில் துவக்கு வெடிச்சத்தம் கேட்டது மில்லை. சில சமயங்களில் நாய் ஒன்றுக்கு விசர் பிடித்தால் சோமண்ணர் தனது கட்டுத்துவக்கால் அதற்கு வெடி வைப்பதுண்டு. மற்றும் படி நம்மூரிற்கும் துவக்கு வெடிச்சத்தத்திற்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது.

கிணறு வெட்டுகிற போது வெடி வைத்து கல்லுத் தகர்ப்பார்கள். அம்மன் கோயில் திருவிழாவின் போது வெடிச்சத்தம் கேட்டும். அவ்வளவு தான்.

குணமண்ணைகு எதற்குத் துவக்கு? நமக்கு ஒரு இரகசியம் தெரியும். ஒருவர்க்கும் தெரியாது அது.

நம் வீட்டில் அயலில் சரவணமுத்தண்ணரின் வீடு. நம் தோட்டத்துடன் தான் சரவணமுத்தண்ணரின் தோட்டம். சரவணமுத்தண்ணர் திருமணம் செய்வதற்கு முன்னர் நேவியில் வேலை செய்தவர். பெரியதொரு போருக்குப் பிறகு (2ம் உலக மகாயுத்தம்) நேவியை விட்டு விலகி ஊருக்கு வந்து தோட்டம் செய்து சீவியம் நடாத்துகிறார்.

அவரின் வீட்டுக் கூரையில் நானும் நாதனும் (அவர் மகன்) ஒரு நாள் ஏறி விளையாடிய போது இரண்டு ஆச்சரியமான பொருட்களைக் கண்டோம். ஒன்று, நாக பாம்பு, தோல் பளபளக்க ஊர்ந்து கொண்டு சென்றது. மற்றது துவக்கு. கையால் பொத்திப் பிடிக்கக் கூடிய, இடுப்பில் கிறீஸ் கத்தியைப் போல் செருகக்கூடிய துவக்கு.

அந்த நேரத்தில் நாகபாம்பில் நம் கவனம் செல்லவில்லை. எப்பொழுதும் கண்டிராத ஒரு துவக்கு அது.

நாதன் ''பாம்பு'' என்று குழறிக் கொண்டு குதித்தான். பாம்பு கூரையால் விழுந்து பற்றைக்குள் ஓடியது. அவன் கற்பூரமும் நெருப்பெட்டியும் கொண்டு 'நாம்பிரான்' கோயிலுக்கு ஓடினான். ''இரவு எனக்கு நித்திரை வராது'' என்று சொல்லி கற்பூரம் கொளுத்தினான். எனக்குத் துவக்கின் ஆச்சரியம் நீங்கவில்லை.

''அது என்னடா ஒரு சின்னத் துவக்கு....''

''ஒருத்தருக்கும் சொல்லிப் போடாதை. தெரிஞ்சுதெண்டால் ஐயா கொண்டு போடுவார். அது ஐயாவின்ரை....''

நான் குணமண்ணையிடம் இரகசியமாகவே கூறினேன். சங்கக் கடை வந்த போது அவர் என்னை விட்டு விலகினார். சீரான நடையை அவர் கொண்டிருக்கவில்லை.

குணமண்ணைக்கு எதற்குத் துவக்கு? அவர் நல்ல காரியங்களைச் செய்பவராசவே தெரிகிறார். துவக்கு அவருக்கு ஏதோ ஒரு வகையில் பிரயோசனப்படும். நம்மூருக்குள் குணமண்ணைக்கு நல்ல பெயர். ஆதலினால் பாதகமில்லை.

ஆனால் நான்தான் சொன்னேனென்று சொல்லி விடுவாரோ? பிறகு நான் சரவணமுத்தண்ணர் வீட்டுப்பக்கம் போக ஏலாது. நாதனும் கதைக்க மாட்டான்.

ஆனால், ஏன் நான் தான் சொன்னேன் என்று சொல்லப் போகின்றார்?

அட, குலசேகரமண்ணை ஆக்கள் செய்த வேலையைக் கேட்காமல விட்டு விட்டேனே?

ஐயாவிடம் கேட்பம்.

கேட்டேன். சொன்னார்.


அப்போது நம்மூர் பற்றைகள் நிறைந்து அங்கொன்றும் இங்கொன்றுமாக குடிசை வீடுகள். சவாரிக்குப் பேர் போனது எங்களூர். ராசையாம்மான் சவாரி மாடு வளர்க்கிறதிலை விண்ணன். ஒரு சவாரிப் போட்டி கத்திக் குத்து, கொலையில் கூட முடிந்திருக்கிறது. எமது வீதியின் பெயர் சவாரி வீதி. வைரவர் கோவிலிலிருந்து அம்மாள் கோயில் வரை பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட வீதி சவாரி வீதி. நடுவில் நம் வீடு.

பகலில் சவாரிப் போட்டி அடிக்கடி நடைபெறும். இரவில், சாமத்தில் வைரவரும், அம்மனும் தஞ்சிட்டிச் சந்தி வரை வந்து காவல் புரிவார்கள். வைரவரையும் அம்மனையும் கந்தியாத்தை நிறையத்தரம் பார்த்திருக்கிறார். அம்மனின் காலில் வெள்ளிச் சலங்கை கட்டப்பட்டிருக்கும். ''கிலுங் கிலுங்'' என்ற சப்தமெழ அம்மன் நடப்பார். வைரவர் வெள்ளிப் பூண் போட்ட பிரம்பு வைத்திருப்பார். றோட்டில் ''டொக் டொக்' கென்று தட்டிக் கொண்டு அவர் நடப்பார். நிலவு காலத்தில் வெள்ளிச் சங்கிலியும், வெள்ளிப் பிரம்பும் மின்னும். கந்தியாத்தை கூறுகிற போது குலை நடுங்கும். ஆனால் ஏன் நடுங்க வேண்டும்? நமது தெய்வங்கள். நம்மை பேய், பிசாசுகளிடமிருந்து காப்பதற்காக உலா வருகிறார்கள். இப்படி ஒரு தெய்வம் கிடைக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். ஏனென்றால் சவாரி றோட்டின் கரையிலேயே சவங்களை எரிக்கிற சுடுகாடும், புதைக்கிற இடுகாடும் உண்டு. பேய், பிசாசுகள் வருவதற்கு எவ்வளவு சந்தர்ப்பங்கள் உள்ளன. ஏனென்றால் ஒரு முறை எரிந்து கொண்டிருந்த பிரேதமே நெருப்புத் துண்டுகள் பறக்க எழுந்து நின்றது. இதனை ஐயாத்துரையண்ணை கண்டிருக்கிறார்.

ஆகவே அம்மனும், வைரவரும் உலா வருவதில் அச்சப்பட ஒன்றுமில்லை.

பகலில் அமைதியாக இருக்கும் சவாரி வீதி. றோட்டின் பக்கத்தில் இலந்தை மரம், சூரை வீரை மரம். பனைமரங்கள் வரிசையாக அடுக்கி வைத்ததுபோல நெடுத்து நீண்டு றோட்டைக் காவல் செய்தன. பற்றைகளாகப் பொன்னாவரச மரங்கள். இடையிடை பனையோலை மணக்கிற குடிசைகள். குடிசைகளின் பின்னால் பெருந் தோட்டம். இரண்டு புறமும் விரிந்து பரந்திருக்கிற தோட்டம். மரவள்ளியும், வெங்காயமும், மிளகாயும், புகையிலையும், கருணைக்கிழங்கும், இராசவள்ளிக் கிழங்கும், வாழையும் என்று பரந்து விரிந்த தோட்டம். நம்மூரை வேற்றூரார் ''மஞ்சள் கிண்டிகள்'' என்று சொல்வார்கள்.

இத்தகைய சிறப்புகள் பெற்ற சவாரி வீதியில்தான் பனைகள் சுடத்தொடங்கின.



# நாலு வார்த்தை எழுதவிடு — சூரியா

## இரு கலைஞர்கள்

### கே.எஸ,பாலச்சந்திரன்

கலைஞர் **கே.எஸ்.பாலச்சந்திரன்** சூர்யாவுக்குக் கடிதம் எழுதியிருந்தார். கே.எஸ்.பாலச்சந்திரன் நாடறிந்த கலைஞர். நான் சிறுவனாயிருக்கிற போது ஒவ்வொரு ஞாயிறும் மாலை 4.30மணிக்கு இலங்கை வானொலியில் தணியாத தாகம் நாடகம் நடைபெறும். அதில் பாலாவின் அண்ணன் பாத்திரம் மறக்கவொண்ணாதது. குரலால் எங்களைக் கொன்று போட்டார். வாடைக் காற்று திரைப்படம் பாலாவின் நடிப்பில் மெருகு பெற்றது. இவரது **'அண்ணைறைற்'** தனி ஒருவரின் நடிப்பால் அப்போது சிறுவனாக இருந்த போது எங்களை மகிழ்வித்தது. இவருள் கலைஞன் ஒருவன் வாழ்ந்தான்.

இதே பத்தியில் சூர்யாவால் முன்னர் எழுதப்பட்ட **'நெஞ்சம் கிளர்ந்து'** எனும் தலைப்பில் வெளியான விடயம். அவர் நெஞ்சிலும் பழைய நினைவுகளைக் கிளரச் செய்தது. அதனால் சோகமுற்றது எனச் சில விடயங்களை கடிதத்தில் தொட்டுக் காட்டியிருந்தார்.

நான் பிறந்து வளர்ந்த மண். வளர்ந்து திரிந்த மண். திரிந்து ரசித்த மண். ரசித்துச் சிரித்த மண், அழுத மண். அம்மாவின் மடியில் விழுந்து புரண்ட மண். என்னென்னவோ காரணம் சொல்லி அம்மண்ணை விட்டு நீங்கி விட்டோம்.

**''நாமிருக்கும் நாடு நமதென்பதறிவோம்- அது**
**நமக்கே உரிமையாம் என்பதறிவோம்.''**

இப்போது வேற்று மண்ணில் அந்நியப்பட்டு வாழ்கிறோம். அவதிப்பட்டு வாழ்கிறோம். அடக்கப்பட்டு வாழ்கிறோம். அகதியாக வாழ்கிறோம். இதனையே பாலா கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

கொஞ்ச நஞ்சக் காலங்களல்ல; 13 மாதங்கள் அவர் சிறையில் காலத்தைக் கழித்தார். நாடறிந்த நல்ல கலைஞன். இவருக்கு இந்தக் கதி. தான் செய்த ஒரே ஒரு குற்றம் தமிழனாகப் பிறந்ததுதான் என்கிறார். **''தமிழைப் பேசுவதன்றித் தவறென்ன செய்தோம்?''**

பாலா கைது செய்யப்பட்டதை நாங்கள் அறிந்திருந்தோம். நண்பர் ஒருவர் பாலாவின் கைதினைக் கண்டிக்கச் சொல்லி அடிக்கடி குறிப்பிட்டார். சக கலைஞன் எனும் அளவிலாவது நாங்கள் கண்டனம் தெரிவித்திருக்க வேண்டும். ஆனால் பல காரணங்களால் அதனை எங்களால் செய்ய இயலாமல் போய் விட்டது. மேலும் எவ்வாறு இதனைப் புரிய வைக்க? பாலாவிற்காக ஒரு குரலாவது கொடுக்காததையிட்டு நாம் வேதனைப் படுகிறோம்; வெட்கப்படுகிறோம்.

வேறறென்ன பாலா? உங்கள் கடிதத்துக்கு என் மகிழ்ச்சி.

### றொஜர் செனிவிரத்தினா

பல நாடகங்களிலும் பல தொலைக்காட்சி நாடகங்களிலும் நடித்தவர், நாடக நெறியாளர். நாடகாசிரியர். சிங்கள சினிமாக்கள் சிலவற்றுக்கு கலை இயக்குனராக (Art Director) பணியாற்றியவர். **றொஜர் செனிவிரத்தினா.** தற்போது தர்மசேன பத்திராஜாவின் நெறியாள்கையில் உருவாகும் தொலைக் காட்சித் தொடர் ஒன்றில் கதாநாயகனாக கலாநிதி என்.எம். பெரேராவின் பாத்திரமேற்று நடிக்கிறார்.

அவரைச் சமீபத்தில் சந்தித்தேன். பல விடயங்கள் குறித்து அவருடன் உரையாட முடிந்தது. தமிழ்ச் சினிமாக்கள் பற்றியும் அவரிடம் காத்திரமான கருத்துக்கள் இருந்தன. **கமலஹாசன்** சிறந்த நடிகர் அல்ல என்று பேச்சுவழக்கில் குறிப்பிட்டார். **நஷ்ருதீன்ஷா, ஓம்பூரி, ஸ்மிதாபட்டீஸ், ஷபானஆஷ்மி** நடிப்பில் அவரது பிரேமை. தமிழ்த்திரைப்படங்கள் படப்பிடிப்பு (Filming) நன்றாக இருக்கிறது. ஆனால் சினிமா எனும் அளவில் மோசமானது என்றார் நாயகன் சினிமா உட்பட. அவர் அக்கருத்தில் உறுதியாக இருந்தார். **பாலுமகேந்திரா, இளையராஜா** முதலான ஒளித்தொகுப்பு, இசைக்கலைஞர்களின் திறமைகளை மிகவும் மெச்சுகிறார்.

அதற்குமப்பால் சிங்களச் சினிமாக்கள் பற்றிய உரையாடலின் போது, சிறிமதுர, குருகெதர முதலான எங்களுக்கு பிரமிப்பை ஏற்படுத்திய சினிமாக்களை அவர் முற்றாக நிராகரித்தார். **பலங்கெட்டியோ** அருமையான கலைப்படைப்பு என்பது அவர் தீர்மானம். ஒன்று புரிந்தது. அவர் உண்மையைப் பேசினார். தனக்கு எல்லாம் தெரியும் எனும் கர்வம் அவரிடம் இல்லை.

**'நொமியன மினிசுன்'** (இறவா மனிதர்கள்) திரைப்படம் பற்றிய பேச்சுவாக்கில் தான் அதனைப் பார்க்கவில்லை. பகிஷ்கரித்து விட்டேன் என்றார். எனக்கோ ஆச்சரியம். காரணம் கேட்டேன்.

சுமார் 20 திரைப்படங்கள் இரண்டு வருடமாகத் திரையிடுவதற்காகக் காத்து நிற்கின்றன. தயாரித்து முடிக்கப்பட்ட திகதியிலிருந்து அவை ஒவ்வொன்றாகத் திரையிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் இலங்கை அரசாங்கப் பாராளுமன்றத்தின் உப சபாநாயகரான காமினி பொன்சேகாவின் தயாரிப்பிலும், நெறியாள்கையிலும், நடிப்பிலும் உருவான **நொமியன மினிசுன்** தயாரித்து நான்கு மாதங்களுக்குள் திரையிடப்பட்டுவிட்டது. இது அத்துமீறிய செயல். இதனைக் கண்டித்து சிங்களக் கலைஞர் சிலர் (அல்லது பலர்) அச்சினிமாவைப் பார்வையிடுவதில்லை எனப் பகிஷ்கரிக்கிறார்கள்.

இதுவே றொஜர் சொன்ன காரணம்.

நம்கலைஞர்களையும் நான் நினைத்தேன்.

றொஜர் போன்ற பல சிங்களக் கலைஞர்கள் நம் கணிப்பில் எவ்வளவு உயர்ந்து நிற்கிறார்கள்.

நன்றி - நூலகத்திட்டம்





# தனியார் கம்பனிகள் என்ற பிணம் தின்னிப் பேய்கள்

## ஓர் பல்முனைப் பார்வை

நாட்டின் பொருளாதாரத்தின் ஜீவ ஊற்றாகவும், உழைக்கும் மக்கள் திறனின் பலமிக்க பகுதியாகவும் இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனமெனவும் அழைக்கப்படுவதுமான ஒரு பகைப்புலனைக் கொண்ட பெருந்தோட்டத் தொழிற்துறை இந்நாட்டின் வேண்டாத விருந்தாளிகளான வெள்ளையரால் அறிமுகம் செய்யப்பட்டதுடன் என்றென்றும் வெறுக்கப்படும் ஓர் மக்கள் கூட்டத்தை நிர்க்கதியாக விட்டுவிடவும் செய்துள்ளது.

இத்துறை விரும்பப்படாத ஒரு சக்தியால் வெறுக்கப்பட்ட ஒரு மக்கள் கூட்டத்தைக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட போதும் இந்நாட்டின் பொருளாதாரத்தின் ஜீவ கண்ணாக ஏறக்குறைய நூற்றிஐம்பது ஆண்டுகள் திகழ்ந்திருக்கின்றது.

பஞ்சப்பராரிகளாகவும், எலும்பும் தோலுமாக நடமாடும் பிணங்களாகவும் வந்த மக்களால் எழுப்பப்பட்ட பெருந்தோட்டத் தொழிற்துறை நாட்டின் 90 சதவீத பொருளாதாரத்தை ஈட்டிக் கொடுத்த நிலையில் இருந்து படிப்படியாக வீழ்ச்சியுற்று வந்திருக்கிறது. இருந்தும் இன்றும் கூட தனிப்பெரும் துறையாகத் திகழ்வதோடு நாட்டின் நம்பத்தக்க பொருளாதார களஞ்சியமாகவும் திகழ்ந்து வருகிறது என்பதை மறுத்துவிட முடியாது.

எனினும், அரசாங்கங்களின் திட்டமிட்ட பாராமுகம், பசுமையானதும், விளைச்சல் மிக்கதுமான காணிகள் திட்டமிட்ட குடியேற்றத்திற்குள்ளாக்கப்பட்டமை, தோட்ட முகாமைத்துவக் குளறுபடி, திறனற்ற நிர்வாகம், போட்டியிடும் ஆளுமை அதிகரிக்கப்பட்டமை போன்ற காரணங்களால் பெருந்தோட்டத்துறை வீழ்ச்சியுறும் ஒரு துறையாகக் காணப்படுகின்றது. விளைச்சலுக்குரிய நிலங்கள் அதிகரிக்கப்படாத வேலை ல அவை குறுக்கப்பட்டு குடியேற்ற நிலமாக மாற்றப்பட்டதுடன், விளைச்சலை அதிகரிக்கவும் வினைதிறனை, நிர்வாக அமைப்பை ஏற்படுத்தவும் முயற்சிக்கப்படவில்லை.

மிகமிக மோசமான சுரண்டல் பொறியாகவும் விரும்பத்தகாத மிகக்கொடிய வேலை கொள்வோராகவும் விளங்கிய பிரித்தானிய, சுதேசிய முதலாளிகளிடமிருந்து தோட்டங்கள் அரசுடமையாக்கப்பட்டமையுடன் அது ஒரு விடியலின் தொடக்கமாக, மீண்டும் ஒரு இருண்ட யுகத்தில் தள்ளவே பயன்படுத்தப்பட்டது.

அரசுடமையாக்கப்பட்ட தோட்டங்களில் முதலாளிகளிலும் கொடிய அடக்குமுறையாளராகத் தோட்ட நிர்வாகிகளும், அவர்களுக்கு சார்பான அரச நிறுவன அமைப்புகளும் தொழிற்பட்டன. பெரியகங்காணிகளின் காட்டுமிராண்டித்தனங்களை அவர்களிலும் கொடிய 'கண்டக்டர்களும்' கணக்கர்களும் மேற்கொண்டார்கள்.

சவுக்கடிகளுக்கு பதில், துப்பாக்கிச் சூடு நடந்தது. பாலியல் சுரண்டலும், வேலை நீக்கங்களும், வன்முறைகளும் பொலீஸ் அடக்கு முறைகளும் திட்டமிட்ட வடிவில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

கல்வி, சுகாதாரம், போசாக்கு நிலையில் நாடு வளர்ச்சியை காட்டிய போதும் தோட்டத் தொழிலாளர் மத்தியில் அவை மூன்றாம் உலகில் மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்பட்டது. இலட்சக்கணக்கான வீடுகள் அமைக்கப்பட்ட நாட்டில் ஒரு சமூகம், ஒரு வர்க்கம், ஒரு இனம் என்ற வகையில் திட்டமிட்டே புறக்கணிக்கப்பட்டது.

இந்நிலையில் தோட்டங்கள் நட்டத்தில். இயங்குவதாக காரணம் காட்டி தனியார் கம்பனிகளுக்கு மீண்டும் தோட்டங்களை கையளிக்கும் கைங்கரியம் ஆரம்பமான போது நாட்டின் சகல முற்போக்கு, சனநாயக சக்திகளும் எதிர்த்த போதும் சுயநலமிக்க முதலாளித்துவத் தலைமையான இ.தொ.கா.மட்டும் ஆதரித்தது. அதன் மாபெரும் தலைவர் "தோட்டங்களில் வர்த்தகபகுதிதான் தனியார் கம்பனிகளிடம் கையளிக்கப்படுகிறது. சமூகபகுதி எம்மிடமிருக்கும் கம்பனிகள் கையேற்றதும் தோட்டங்கள் சுபீட்சமிக்க எதிர்காலத்தைக் காண முடியும்" என்றார். இன்று தான் அவிழ்த்து விட்ட பிணம் தின்னும் பூதத்தை அடக்க முடியாமல் அவர்களே அரசாங்கத்துடன் மல்லுகட்டும் அவலக் காட்சியைக் காண்கின்றோம். இப் பின்னணியில் தான் இக்கட்டுரையில் கருப்பொருள் நோக்கப்பட வேண்டும்.

நிர்வாகம் கைமாறி ஒருவருட காலத்தில், எப்போதுமே போராட்டங்களின் விளைநிலமாக இருக்கும் தோட்டத்துறை பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியது.

புதிய நிர்வாக நடைமுறைகளை எதிர்த்து வேலை நிறுத்தங்களும், மறியல் போராட்டங்களும் நடந்தன. அப்புத்தளை, நீட்வூட் தோட்டத் தொழிலாளர் ஏழுமாதங்களுக்கு மேலாக போராடினார்கள். நூற்றுக்கணக்கான தொழிலாளர் போராட்டங்கள் இடம்பெற்ற போதும் வழமைபோல் அரச இயந்திரம் காவல் படையிடம் கண்காட்டியது. போராட்ட தலைவர்கள், இளைஞர்கள் அவசரகால சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டனர். வழக்கு தொடரப்பட்டது.

மிகக் கொடிய வேலைச் சூழல் ஏற்படுத்தப்பட்டது. கொழுந்து பறித்தல், கவாத்து, புல் பிடுங்குதல், கான் வெட்டுதல் போன்ற தொழில்கள் இரட்டிப்பாக்கப்பட்டன. செய்ய முடியாத போது அரைநாள் கூலியே கொடுத்தார்கள்.

வேலைநாடகள குறைககபபடடன. கமபனிகள் தம்முள் உடன்பாடு கண்டன. எந்தமாதம் எத்தனை நாள் வேலை எனப்பட்டியிலிடப்பட்டன.

மாடு வளர்க்கப் பயன்பட்ட புல் நிலங்கள், விளைச்சல் மிக்க பயிர்நிலங்களில் மரக்கறி பயிரிடப்பட்டது.

வாழையும், மரவள்ளியும், கிழங்கும், வட்டக்காயும் நாட்டப்பட்டது.

தோட்டங்களில் வளர்ந்திருந்த மரங்கள் தறிக்கப்பட்டன. அவை அவசர அவசரமாக விற்கப்பட்டன.

வீடுகள், வீதிகள், பழுதுபார்த்தல், திருத்துதல் கைவிடப்பட்டது.

சுகாதாரம் மிக மோசமான நிலைக்குள்ளாக்கப்பட்டது.

தோட்டங்களின் வளம் திட்டமிட்டு எவ்வளவு விரைவாக முடியுமோ, அவ்வளவு விரைவாக சுரண்டப் பட்டது.

புதியவர்கள் பேர் பதியப்படுவது தடுக்கப்பட்டது.

இந்நிலையில் தான், அரசாங்கத்தின் அமைச்சராகவும், மிகப்பெரிய தொழிற்சங்கத்தின் தலைவராகவும் சுற்றுலா, கிராமிய தொழிற்துறை அமைச்சருமாக இருக்கின்ற தொண்டமான் அவர்கள் தொழிலாளிக்கு தர்ம உபதேசம் செய்தார்கள். வேலை நிறுத்தக் காலக்கெடு விதித்து ஏமாற்றினார்கள். "பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டும்" அரசியல் பம்மாத்து காட்டினார்கள்.

தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யத் தேவையில்லை என்று சொன்ன இ.தொ.காவினர் வேலைநிறுத்தம் செய்து பலத்தை காட்டுமாறு கேட்டார்கள்.

புதிதாக நிர்வாகப் பொறுப்பேற்றுள்ள கம்பனிகள் சிறந்த முகாமைத் திறனுடையவை எனக்கூற முடியாது எனினும், சர்வதேச தரம்வாய்ந்த முகாமைத்துவ நுணுக்கங்களையும், தந்திரோபாயங்களையும் கொண்டிருக்கின்றன. இத்தோடு 22 தனியார் கம்பனிகள் 500 தோட்ட நிர்வாகத்தைப் பங்கு போட்டுக் கொண்டுள்ளன. அவர்களது வித்தியாசமான நிர்வாக அமைப்பையும், உபாயங்களையும் புரிந்து கொள்ளும் ஆற்றல் வாய்ந்த தொழிற்சங்கப் பொறியமைப்பு இல்லை, ஆனால் பலமிக்க ஓர் தொழிற்சங்க அமைப்பு இருக்கிறது. இம்முறையில் பயனில்லாது போக காரணம் இவர்களிடையே ஆளுக்கால் உயரத்திலும், தடிப்பத்திலும், நிறையிலும் முரண்பாடு இருப்பினும் கூட ஒன்றுபடும் சந்தர்ப்பம் மிக்க குறைவே!

எந்த மலையக தொழிற்சங்கமும் தத்துவார்த்த சித்தாந்த பிளவை கொண்டிருக்க வில்லை. மாறாக அவை தனிநபர் முரண்பாட்டையே பிரதானப்படுத்திக் கொண்டுள்ளதுடன், தொழிலாளர் வர்க்கப் போராட்டத்தை முன்னெடுக்கவோ, அவர்களது நலனைப் பேணவோ திராணியற்றுப் போயுள்ளன.

பெயர்ப்பலகையும், பதிவிலக்கமும் கொண்டு காணப்படும் சங்கக் கடைகளும் சரி, இராட்சத பலமும், பாராளுமன்ற மாகாணசபை உறுப்புரிமை கொண்ட சங்கங்களும் சரி, தமதும் தம் சகபாடிகளதும், சுகபோகங்கள் குறைந்துவிடக்கூடாதென்பதில் விடாப்பிடியான கெட்டிதனம் காட்டுகின்றனவேயன்றி வேறொன்றும் செய்வதில்லை. தமக்கு சந்தா கொடுத்து, வாக்குக் கொடுத்து வாழவைக்கும் மக்களைப் பற்றி எங்காவது தவிர்க்க முடியாமல் பேசுவதோடு, அறிக்கையிடுவதோடு திருப்திப்படும் துரோகிகளின் கும்பல்களாக மாறிப் போயுள்ளார்கள்.

எனவே தனியார் கம்பனி நிர்வாகங்களின் தான் தோன்றித்தனமான பேய் நடைக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஒன்றில் சரணாகதி அல்லது, வாழாவிருப்பது என்ற நிலைப்பாட்டில் இருக்கிறார்கள்.

பூஞசப்பராரிகளும், கடன்காரர்களுமான, ஏழைத் தொழிலாளர்களின் எழுச்சிமிக்க போராட்டங்கள் மலையகத்தில் ஏதோ ஒரு மூலையில் நடக்காத நாள் ஒன்றைப் பதிவு செய்ய முடியாது. ஆனால் அந்தப் போர்க்குணமிக்க மக்கள் உரிய தலைமைத்துவமும், வழி காட்டலுமின்றி, தோல்வியும் சோர்வுமாகப் பின்வாங்குகின்றார்கள்.

தோட்டங்களின் உயிர்வாழ்வுக்கான மிகமுக்கிய காரணி தொழிலாளர்கள் தான். எனினும், மாற்றுப் பயிர் செய்கையிலும், அமெரிக்க கோட்டாவுக்கு ஆடை தைக்கும் அவசரத்திலும் மறக்கப்பட்டுவரும் ஒரு எரிமலை இங்கே குமுறிக் கொண்டிருக்கிறது என்பது காலம் கடந்துதான் உறைப்படும் போல் தெரிகிறது.

கூலியைத் தவிர வேறு எந்த வருமான மார்க்கமும் அற்ற தோட்டத் தொழிலாளர்கள் கால்நடை வளர்ப்பதிலும் காய்கறி தோட்டச் செய்கையிலும் ஈடுபட வாய்ப்பினை வழங்கிய நிலை திட்டமிட்டு தனியார் கம்பனிகளால் பறிக்கப்படுகிறது. புல்நிலங்கள் வாழைமர தோட்டமாக மாறியபின், மாடுவளர்த்தவன் மண்ணை மிதித்தால் கூட களவாணியாகிப் போவான். வீட்டு தோட்ட செய்கைக்கு எல்லோருக்கும் நிலமில்லை. இருப்பவர்களும் 10 பேர்ச்சர்ஸ்சுக்கு அதிக நிலமுள்ளவர் நூறில் ஒருவராகக் கூட இருக்க மாட்டார்கள். இதில் கூட எவ்வித உரித்தும் இல்லை.

வங்கிக்கடன் பெறுவதற்கு. அடையாள அட்டை இல்லாதவர்கள் கனவு கூட காணமுடியாது. அப்படியே இல்லாத சிரமங்களை எதிர்கொண்டு வங்கிக் கடன் பெற்றால், தொழிலாளரது சம்பளத்தில் தவணைக் கட்டணத்தைப் பெற நடவடிக்கை எடுத்தபின் தோட்ட நிர்வாகம் பணம்பிடித்து அனுப்ப மறுக்கிறது.

தொழிலாளர்களுக்கான வேலையில் இருந்து விடுவிக்க காட்டப்படும் அவசரம் அபாயகரமான, சமூக சீரழிவுகளையும் நெருக்கடியையும் தோற்றுவிக்கக் கூடும். உதாரணமாக 2500 தொழிலாளர் உள்ள ஒரு தோட்டத்தில் கடந்த ஒரே வருடத்தில் 400 இளம் தொழிலாளர்கள் '14 நாள் சம்பளம்' எனும் சேவைக் காலப் பணம் பெற்று வேலையில் இருந்து நீங்கச் செய்யப்பட்டுள்ளனர். நிர்வாக கெடுபிடியும் கொடிய வேலைச் சூழலும் இந்நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும் பிரதான காரணிகள்.

மிகப் பெருமளவில், மாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு வீட்டுத் தோட்ட செய்கை ரு கடன் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்த மலையக இளைஞர்களான ஒரு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி ஊழியர்கள் போலிக் காரணம் கூறி இடமாற்றப்பட்டுள்ளார்கள். கம்பனி நிர்வாகங்களிடம் சிக்குண்ட, பல கோடி ரூபாய், கோவில் நிதி, மரண சகாய நிதி, மின்சார நிதி என்பன எவ்வித கணக்குமின்றி வங்கியில் வைப்பிலிடாமல் தோட்டங்களில் கிடப்பில் இருக்கிறது. மின்சார கடனுக்கு பணம் பிடிக்க மாதம் ஒரு ரூபா ஒவ்வொரு தொழிலாளரிடமும் அறவிடப்படுகின்றது.

மரண நிதியையோ, கோவில் கும்பாபிஷேக நிதியையோ வங்கியில் வைப்பிலிடக் கோரினால் அது மறுக்கப்படுகிறது. ஒரு தோட்டத்தில் புலமை பரிசில் நிதிக்காக ஒதுக்கப்பட்ட 25000/= தொழிலாளர் பணம், வங்கியில் வைப்பிலிடப்படாமையால் நிதியம் முடங்கிப் போயுள்ளது.

இவ்வாறு தனியார் கம்பனிகளின் நிர்வாகத்தின் கீழ் தோட்டத் தொழிலாளர்கள் படும் விவரிக்க வார்த்தைகள் இல்லாத அவதியை இனங்காணமுடியும். இம்மக்களது இன்றைய ஜீவனோபாயப் பிரச்சினை மூன்று வேளை சோறு தரக்கூடிய ஊதியத்தைப் பெறுவது தான் அதற்காகத்தான் அவர்களுக்கு ஊதிய உயர்வும், வேலை நாளும் பிரதான அம்சமாகி இருக்கிறது.

வருடம் 300 நாள் வேலை அல்லது மாதம் 25 நாள் வேலை சம்பளம் பெற்றுத் தருவோம் எனவும், வீட்டையும், வீட்டை சுற்றியுள்ள காணியையும் சொந்தமாக்குவோம் எனவும், மின்சாரம் வீடுதேடி வருகிறதெனவும், கிராம சேவகர் வருவார் எனவும் பொய்களைப் புலம்பி, ஹிட்லரின் பிரச்சார அமைச்சர், கொயபெல்சையே பின்தள்ளியவர்கள் இன்று கையைப் பிசைந்து கொண்டு மக்களிடம் ஏதோதோ சொல்லி சரடு விடுகிறார்கள்.

தனியார் கம்பனியென்ற 'பிணம் தின்னும் பேய்களிடம்' தள்ளியவர்களை மக்கள் இனங்காண இனியும் தாமதிக்கக்கூடாது.

பிரபா

நன்றி - நூலகத்திட்டம்



# இந்தியாவும் தமிழ்த் தேசியப் பிரச்சினையும் - 3

# றோ கையாண்ட இனச்சிக்கல்கள்

**டி.சிவராம்**

தென் ஆசியப் பிராந்தியத்தில் தன்னைச் சுற்றியுள்ள அனைத்து நாடுகளிலும் தன் கேந்திர, இராணுவ, பொருளாதார நலன்களிற்குக் குந்தகம் ஏற்படும் வகையில் சீனாவும், பாகிஸ்தானும் நேரிடையாகவும், மறைமுகமாகவும் ஈடுபட்ட காய் நகர்த்தல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய கட்டாயத் தேவை இந்தியாவிற்கு ஏற்பட்டது என்பதைப் போன தொடரில் கண்டோம். தன்னைச் சுற்றியுள்ள நாடுகளில் அரசியல், மற்றும் பொருளாதார இராஜதந்திர அழுத்தங்களை ஏற்படுத்தித் தன் செல்வாக்கை தென் ஆசியப் பிராந்தியத்தில் நிலை நிறுத்திக் கொள்ளவும், இயலுமான சந்தர்ப்பங்களில் அதை விஸ்தரிக்கவும் இந்தியா கையாண்ட பிரதான முறை இனப்பிரச்சினை ஆகும்.

சீனாவும், பாகிஸ்தானும் கூட்டாகவும், தனித்தனியாகவும் இந்தியாவின் சுற்று வட்டாரத்தில் வகுத்து வந்த வியூகங்களில் பாரதத்தை அண்டியிருந்த அநேகமான நாடுகள் சம்பந்தப்பட்டிருந்தன எனவே இந்நாடுகளின் மீது கணிசமான அழுத்தத்தைத் தொடர்ச்சியாகப் பேணுவதன் மூலமே சீன, பாகிஸ்தான் வியூகங்களை ஓரளவேனும் மட்டுப்படுத்த முடியும் என இந்தியா கருதிற்று. தனது அண்டை நாடுகள் பெரும்பாலானவற்றில் உள்நாட்டு அரசியல் சிக்கல்களுக்கு முக்கிய காரணியாக இனச்சிக்கல் காணப்பட்டதைக் கவனத்தில் எடுத்துக் கொண்டே இந்தியா 50களில் இருந்து தன்னுடைய தென் ஆசியப் பிராந்தியம் தொடர்பான நீண்ட காலக் கேந்திரத் திட்டமிடலையும் (Strategic planning) சீனா, பாகிஸ்தான் ஆகியவற்றிற்கு எதிரான மாற்று வியூகங்கள் வகுத்தலையும் மேற்கொள்ளலாயிற்று. இதில் உள்நாட்டு இனப்பிரச்சினையை மையமாகக் கொண்டு இந்தியா, தனக்கு வசதியாகக் கேந்திர, இராணுவ, இராஜதந்திர அழுத்தங்களையும், தளம்பலையும் ஏற்படுத்திய பிரதான தென் ஆசியப் பிராந்திய நாடான பாகிஸ்தானைப் பற்றி முதலில் பார்ப்போம்.

இந்திய உபகண்டத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பாகிஸ்தான் எனும் ஒரு நாட்டை உருவாக்கிய பொழுது அது மேற்குப் பாகிஸ்தான், கிழக்குப் பாகிஸ்தான் என புவியியல் ரீதியாக தொடர்ச்சியற்ற இரு பகுதிகளாக அமைந்திருந்தது. இக்காலகட்டத்தில் பாகிஸ்தானில் இஸ்லாமியப் பஞ்சாபியர், சிந்திகள், பஷ்டுன்கள், வங்காளிகள் ஆகிய இனங்கள் காணப்பட்டன. இவர்களுடன் பாகிஸ்தான் பிரிவினையின் போது இந்தியாவின் வட மாநிலங்களிலிருந்து பெரும் கலவரங்களின் காரணமாக லட்சக்கணக்கில் அகதிகளாகச் சென்று பாகிஸ்தானில் குடியமர்ந்த முஸ்லீம்கள் மேற்கூறிய இனங்களினின்றும் வேறுபட்டவர்களாக வாழ்ந்து வரலாயினர். அவர்கள் மொஹாஜிர்கள் (Mohajirs) என அறியப்படுவர். இந்த இனங்கள் மத்தியில் இஸ்லாமியப் பஞ்சாபியரே பெரும்பான்மையினராகவும், அரசியல் அதிகாரத்தைக் கையில் கொண்டோராயும் காணப்பட்டனர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமானது இந்திய உபகண்டத்தில் உருவாக்கிய மாபெரும் இராணுவத்தின் முதுகெலும்பாக ஒரு காலத்தில் இவர்கள் இருந்தமையால், இயல்பாகவே ஆங்கிலேயரின் ஆசிகளுடன் தனிநாடாகி விட்ட பாகிஸ்தானில் அவர்கள் தம் அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொண்டனர். பாகிஸ்தானின் இராணுவத்திலும் இவர்களே பெருந்தொகையாகக் காணப்பட்டனர். காலப்போக்கில் இந்த இராணுவம் பாகிஸ்தானின் அரசியல் அதிகாரத்தையும் தனதாக்கிக் கொண்டது. மேற்குப் பாகிஸ்தானில் சனத்தொகையின் 66% இஸ்லாமியப் பஞ்சாபியரும், 13% சிந்தி இனத்தவரும், 8.5% பஷ்டுன்களும் கிழக்குப் பாகிஸ்தானில் வங்காளிகளும் என காணப்பட்ட சமூக அமைப்பில் பஞ்சாபியரின் அளவுக்கு மீறிய அரசியல், இராணுவ மேலாதிக்கம் கடும் கசப்புணர்வுகளை ஏனைய இனங்களிடையே தோற்றுவிக்க ஏதுவாயிற்று. இதில் சிந்தி இனத்தவர்கள் கல்வியிலும், அரசியலிலும் கணிசமாக முன்னேறியவர்களாகவும், இந்து நதிப்பள்ளத்தாக்கைச் சுற்றிக் கணிசமான வளம் பொருந்திய நிலப்பரப்பைக் கொண்ட சிந்து மாகாணத்தில் பொருளாதார ஆதிக்கம் பெற்றவராயும் காணப்படுகின்றனர். மொழி, நிறம் போன்றவற்றில் பஞ்சாபியர்களிடமிருந்து வேறுபட்டுக் காணப்படும் இவர்கள் தம்மை மொகஞ்சதாரோ, ஹரப்பா, ஆகியவற்றின் பண்டைய நாகரீகத்தின் வாரிசுகளாகவும் கருதிக் கொள்கின்றனர். (திராவிடத் தாயகம் சிந்து நதிப் பள்ளத்தாக்கு எனத் தமிழரும் கருதுவது தெரிந்ததே.)



சுல்பிகார் அலி பூட்டோ அவருடைய மகளான தற்போதைய பாகிஸ்தான் பிரதமர் பெனாசீர் பூட்டோ ஆகியோர் சிந்தி இனத்தவரே. வளம் பொருந்திய சிந்து மாகாணத்தில் பஞ்சாபியரின் திட்டமிட்ட குடியேற்றங்கள் காணிப்பறிப்புகள், சிந்திகளுக்கு எதிராக வேலை வாய்ப்பு, கல்வி போன்ற விடயங்களில் காட்டப்பட்ட பாரபட்சம், தேசிய அரசியலில் அவர்களுடைய செல்வாக்கை முறியடிக்க பஞ்சாபியரைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்த பாகிஸ்தான் இராணுவம் மேற்கொண்ட முயற்சிகள் (சுல்பிகார் அலி பூட்டோ பஞ்சாபி இராணுவத் தளபதியான சியா உல் ஹக்கினால் தூக்கில் போடப்பட்டது இந்தப் பின்னணியில் தான்.) என்பன சிந்தி இனத்தவருக்கும் பஞ்சாபியருக்கும் கடும் முரண்பாடு தோன்ற ஏதுவாயின. இம்முரண்பாட்டை இந்தியா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி கொண்டது. பஞ்சாபியரின் அடக்குமுறைக்கு எதிராக ஆயுதக்கிளர்ச்சியில் ஈடுபட்டு சிந்து மாநிலத்தை அவர்களின் பிடியிலிருந்து விடுவிக்க போராட வேண்டுமென்று கிளம்பியவர்களுள் தனக்குச் சாதகமான சிலருக்கு றோவினூடாக இந்தியா ஆதரவு வழங்கலாயிற்று. இதனால் சிந்து இன மீட்சிப் போராட்டத்தில் குதித்த இளைய தலைமுறையினருள் இந்தியச் சார்பு, இந்திய சார்பற்றது என இரு அணிகள் தோன்றின. இந்தியா தொடர்பாக அவர்களுள் தோன்றிய முரண்பாட்டிற்கு முதற்காரணம், றோ அவர்களை மட்டுப்படுத்தப்பட்ட, பாகிஸ்தான் இராணுவத்தின் மீதும் அரசியல் அதிகாரபீடங்களின் மீதும் அழுத்தம் கொடுத்தலை மட்டுமே நோக்காகக் கொண்ட பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுத்த முற்பட்டமையே ஆகும்.

வளம் பொருந்திய சிந்துமாகாணத்தில் கலவரங்களையும் குண்டு வெடிப்புகளையும் தூண்டி அம்மாகாணத்தின் பொருளாதார பலத்தை சின்னாபின்னப்படுத்தவும், பாகிஸ்தான் இராணுவத்தின் கனிசமான சக்தியை அங்கு திசை திருப்பி வைத்திருக்கவும் இந்தியா சிந்தி விடுதலை இயக்கங்களைப் பயன்படுத்த முனைந்தது. அதில் கனிசமான வெற்றியும் கண்டது.

சிந்தி தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக றோவின் முழு ஆதரவோடு தற்சமயம் ஒரு ஆயுதக் குழுவே செயல்பட்டு வருகிறது. எனினும் பாகிஸ்தான் மீது கடும் அழுத்தங்களைக் கொடுக்க வேண்டிய தேவை இந்தியாவிற்கு ஏற்படும் போதெல்லாம், இக்குழுவின் ஊடாக சிந்து மாநிலத்தில் நெருக்கடியைத் தோற்றுவிக்கக் கூடிய சக்தி றோவிற்கு உண்டு.




பாகிஸ்தான் மீது அழுத்தங்களை ஏற்படுத்திப் பேரம்பேச இந்தியாவிற்குச் சாதகமாக இன்றுவரை உள்ள இன்னொரு பெரும்பிரச்சினை மொஹாஜிர் இனத்தவர்களுடையதாகும். இவர்கள் பிரிவினையின் போது இந்தியாவிலிருந்து இடம்பெயர்ந்து வந்து பாகிஸ்தானின் தென் கோடியில், கேந்திரரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் முக்கியத்துவம் பெற்றுள்ள கராச்சி நகர்ப்பகுதியிலும் அதைச்சுற்றியும் குடியேறிவர்களாவர். மிகச் சிறுபான்மையினராகிய இவர்கள் பொருளாதாரத்திலும் கல்வியிலும் பெரும் முன்னேற்றம் பெற்றவர்களாய் வளர்ச்சியடைந்தமை ஆரம்ப காலத்திலிருந்தே சச்சரவுகளுக்கும், கலவரங்களுக்கும் காரணமாயிற்று. அத்துடன் இவர்கள் புலம் பெயர்ந்து வரும் போது இவர்கள் மத்தியில் இந்தியா பல உளவாளிகளை விதைத்து விட்டிருக்கலாம் என்ற சந்தேகமும், இந்தியாவில் அவர்களுக்குத் தொடர்ந்து இருந்து வந்த உறவுகளும், பாகிஸ்தான் அரசு அவர்களைச் சந்தேகக் கண் கொண்டு நோக்க ஏதுவாயின. இவர்களுடைய மனக்கசப்புகளைப் பயன்படுத்தி றோ இம் மொஹாஜிர்கள் மத்தியில் M.Q.M. என்னும் ஓர் இயக்கத்தை உருவாக்கிற்று. ஆரம்பத்தில் மொஹாஜிர்களின் நலன்களை முன்னெடுக்கவும் போராடவும் எனத் தோன்றிய இவ்வமைப்பு காலப்போக்கில் றோவினால் இந்தியாவின் அரசியல், இராஜதந்திரத் தேவைகளுக்கு ஏற்ப கராச்சியில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடவும், கலவரங்களைத் தூண்டிவிடவும் பயன்படலாயிற்று. பாகிஸ்தான் மீது இராஜதந்திர மற்றும் பொருளாதார அழுத்தங்களை தேவைப்பேறபடும் போது ஏற்படுத்த இன்று மட்டும் இந்த M.Q.M இயக்கம் இந்தியாவிற்கு மிகவும் பயன்பட்டு வருகிறது. பாகிஸ்தானைப் பொறுத்தவரை கராச்சி அதன் பொருளாதார மையம். அத்துடன் இந்தியாவுடன் ஒரு யுத்தம் ஏற்படும் பட்சத்தில் பாரதத்தின் பொருளாதார மையமான பம்பாய் நகரம் அமைந்துள்ள வட மேற்குக்கரைப் பிரதேசத்தை தாக்குவதற்கான கடற்படை வியூகங்களுக்கும், படை நகர்வுகளுக்கும் கராச்சி நகரம் பாகிஸ்தானைப் பொறுத்தவரை கேந்திரரீதியாக இன்றியமையாததாகும். மொஹாஜிர்களின் பிரச்சினை ஊடாகக் கராச்சி நகரத்தை அரசியல் ரீதியாகவும், இராணுவரீதியாகவும் தேவைக்கேற்றபடி குழப்பி பாகிஸ்தானின் இராணுவ, பொருளாதார வியூகங்களை சிதற வைப்பதில் றோ வெற்றி கண்டுள்ளது எனக் கூறலாம். இதில் கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவெனில் M.Q.M இயக்கமானது றோவின் ஆணைகளுக்கேற்ப குண்டு வைப்பதிலும், கலவரங்களைத் தூண்டி விடுவதிலும், நாசகார வேலைகளில் ஈடுபடுவதிலும் காலத்தைப் போக்கி வருகிற அதேவேளை மொஹாஜிர்களின் பிரச்சினைகளும், துன்பங்களும் எந்த வகையிலும் தீர்ந்தபாடில்லை. அவற்றைத் தீர்ப்பதற்கு வழிவகைகள் தேடிய M.Q.M தலைவர்கள் ஓரங்கட்டப்பட்டனர். அல்லது காணாமற் போயினர். பாகிஸ்தான் மீது அழுத்தம் கொடுப்பதற்குக் கேந்திரரீதியாக மொஹாஜிர்களின் பிரச்சினை இந்தியாவிற்குத் தேவைப்படும் வரை றோ தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும். எந்தவொரு M.Q.M இயக்கத் தலைவரையும் தன் மக்களின் இன்னல்களுக்குச் சரியான தீர்வுகளை ஆராய அனுமதிக்காது என்பதே உண்மை. இடைநடுவில் பாகிஸ்தான் பஞ்சாபிப் பேரினவாதிகளினுடைய அடக்குமுறை ஒரு புறம், மறுபுறம் றோவினுடைய சதுரங்கம் என மொஹாஜிர்கள் அல்லலுற்றுக் கிடக்கின்றனர்.

அடுத்து பாகிஸ்தானிலும், ஆப்கானிஸ்தானிலும் வாழும் பஷ்டூன் இனத்தவரின் சிக்கலைப் பார்ப்போம். இவர்கள் நீண்டகாலமாகவே (ஆங்கிலேயரின் காலமிருந்து) தமக்குப் 'பஷ்டூன் தான்' எனும் ஒரு தனிநாடு வேண்டுமெனக் கோரிப் போராடி வந்துள்ளனர். இவர்களுடைய சிக்கல் இன்று ஓரளவு மறைந்து போயுள்ளது எனலாம். ஆயினும் 50 களிலும் 60 களிலும் பஷ்டூன்களின் தனிநாட்டுப் போராட்டத்திற்கு இந்தியா கனிசமான ஆதரவு கொடுத்து வந்தது. றோ உருவாக்கப்படும் முன்னர் எல்லைப்புற பாதுகாப்பு உளவு வேலைகளைக் கவனித்து வந்த Northwestern Frontier Agency எனும் அமைப்பினூடாக நேருவின் காலத்தில் பஷ்டூன்களின் போராட்டத்தினை இந்தியா தனக்குச் சாதகமான வகையில் தூண்டி வரலாயிற்று. ஆனால் ஆப்கானிஸ்தானில் இந்தியாவின் நட்புநாடான ரஷ்யா தன் செல்வாக்கை நிலைநிறுத்திக் கொண்ட பின் டெல்லி 'பஷ்டூனிஸ்தான்' கோரிப் போராடியவர்களை ரஷ்யாவின் நலன் கருதி நட்டாற்றில் விட்டுவிட்டது. இதனைப் பயன்படுத்தி பாகிஸ்தானும் பஷ்டூன்களின் பிரச்சினையை இலகுவாக அமுக்கிற்று.

சுதந்திர இந்தியாவின் வரலாற்றிலேயே அது இராணுவரீதியாகவும், சர்வதேசரீதியாகவும் பெற்ற ஒரு மாபெரும் வெற்றியாக பங்களாதேஷ் தனிநாடாவதற்கு வழி வகுத்த கிழக்குப் பாகிஸ்தான் யுத்தத்தைக் கூறலாம். இவ் வெற்றிக்கு அன்றைய பாகிஸ்தானினுள் காணப்பட்ட இன முரண்பாட்டை எங்ஙனம் இந்தியா பயன்படுத்திற்று என்பதையும், தனிநாடாகிவிட்ட பங்களாதேஷிற்கு அழுத்தம் கொடுக்க இந்தியா எவ்வாறு இன்னுமொரு இனப்பிரச்சினையைப் பயன்படுத்தி வருகிறது என்பதையும் அடுத்த இதழில் காணலாம்.


(வரும்)

நன்றி - நூலகத்திட்டம்




# கதை விடுகிற கனவான்கள்

## தமிழ்சினிமா ரசிகர் காதில் சுற்றுகிறார்கள் பூக்கள்



கடந்த காலங்களில் வெற்றி பெற்ற சினிமாக்களான ஜென்டில்மேன், தேவர் மகன், சின்னக் கவுண்டர் போன்ற சினிமாக்களை ஆராய்கிறது இக் கட்டுரை. இவற்றின் வெற்றி பெரும்பான்மை மக்களின் தோல்வியாக எப்படி மாறுகிறது என்றும் ஆராய்கிறார் இக்கட்டுரையாளர்.

**அ. ராமசாமி**



'திறமைகளை மதிக்காத சமூகம் கிரிமினல்களை உருவாக்குகிறது'

தத்துவார்த்தச் சொல்லாடல்களில் ஒன்று இது.

மாவட்ட அளவில் முதலிரண்டு இடங்களைப் பெற்ற மாணவர்கள் விரும்பிய துறையில் ஈடுபட முடியாத நிலையில் (இன்றைய சூழ்நிலையில் கூட மாவட்ட அளவில் முதல் இரண்டு இடங்களுக்கு உரிய இடம் மறுக்கப்படுவதில்லை), ஒருவன் தற்கொலை செய்து கொள்கிறான். தாய் தன் உயிரைப் பணயம் வைத்து லஞ்சம் கொடுத்தும், மெடிகல் காலேஜில் இடம் கிடைக்காத போது இன்னொருவன் கிரிமினலாகிறான், கிரிமினலானது எல்லாருக்குமான கல்விச்சாலையை உருவாக்கத் தான் (திறமையானவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க அல்ல) இது 'ஜென்டில் மேன்' படத்தின் கதை.

கொள்ளை -பொலிஸிடமிருந்து தப்பித்தல் -அப்பாவி- கிச்சாவாக மாறி அப்பளக்கடை நடத்துதல் -அப்பளக் கடையில் வேலை பார்க்கும் பெண் நினைத்து ஏங்கும் ஆணாக இருத்தல்.

திரும்பவும் அதே வரிசை- கொள்ளை -தப்பித்தல் -அப்பாவி -கனவு இன்னொரு முறை வரிசையில் சில மாற்றங்கள். ஆட்டம் பாட்டு -ஈடுபடுபவர்கள் ரயில்பயணிகள் -அப்பாவி பிம்பம் கேள்விக்குளாதல்.

அடுத்தமுறை -அவனே இன்னொரு பெண்ணுக்கு (சுபாஸ்ரீ) ஏங்கும் ஆணாக இருக்கும்படி வரிசை.

கடைசியில் ஃபிளாஸ்பேக். தியாகம் செய்யும்(இந்தியத்) தாய் பிம்பம் முன்னிறுப்படுதல். கிரிமினலானதை நியாயப்படுத்தி விட்டுத் தண்டனையை ஏற்றுக் கொள்ளும் முடிவு. இது 'ஜென்டில் மேனின்' திரைக்கதை.

இனி இன்னொரு திரைக்கதை - சின்னக்கவுண்டர். நீதிமான் சின்னக்கவுண்டர் நீதி சொல்லுதல், அதனால் பாதிக்கப்படும் குடும்பம் கோபம் கொள்ளுதல்.

சின்னக்கவுண்டரின் குணங்களை வெளிப்படுத்துதல். தாய் சொல் தட்டாதவர், ஏழைகளுக்கு இரங்குபவர். உடல் உழைப்பை நேசிப்பவர்- பெண்களை ஏறிட்டுப் பார்க்காதவர் - வம்பிழுக்கும் பெண்ணை வாயடைக்கச் செய்யும் ஆண்மையுடையவர்.

எதிர்க்குடும்பத்தின் குணங்களைச் சொல்லுதல்: ஊர்ச்சொத்தை கொள்ளை அடிப்பவர்- கூத்தியாள் வைத்துள்ளவர் - அவள் சொல் கேட்டு மகளை அடக்கி வைப்பவர்- திமிர் பிடித்தவர் -சூழ்ச்சிகள் செய்து கொண்டே இருப்பவர். அவரது சூழ்ச்சிக்கு விதைபோடுபவள், அவரது. வைப்பாட்டி.

சின்னக்கவுண்டரின் ஆண்மையை வம்புக்கிழுத்த பெண் மீது, அவருக்கு காதல் இருந்த போதும், கல்யாணம் செய்து கொண்டது அவளின் ஏழ்மையையும் நிர்க்கதியையும் போக்கத் தான்.

உடல் உழைப்பை நேசிக்காத படித்த ஒருவனுக்கு உதவுதல் - அவனே சின்னக்கவுண்டருக்கு எதிராக எதிரிகளுடன் சேர்ந்து (பணம் வாங்கிக் கொண்டு) சதியில் ஈடுபடுதல் -அவன் சின்னக் கவுண்டரின் கொளுந்தியாளை ஏமாற்றிக் கர்ப்பமுறச் செய்தவனும் கூட .

எதிரிகளின் சதியில் சிக்கிய சின்னக்கவுண்டரின் உயிரை அவரது மனைவி, கொலை செய்து காப்பாற்றி விட்டு ஜெயிலுக்குப் போதல் கொளுந்தியாள் மானம் காக்கத்தான் மானத்தை இழக்கத் தயாராகி, கருவிலுள்ள குழந்தைக்குக் காரணம் தானே ஏனச் சொல்லுதல்.

சதிகளின் பின்னணி விளங்கத் தொடங்கும் போது சின்னக் கவுண்டரின் உதவியைப் பெற்றவன் மனம் மாறுகிறான். எதிர்நிலைக் குடும்பம் தண்டனை பெறுகிறது.

இந்தச் சின்னக்கவுண்டரின் திரைக்கதையை 'பதினெட்டுப்பட்டிக்கும் நீதி மானாகிய பெரிய கவுண்டரின் மகன் சின்னக்கவுண்டர், தன் குடும்பப் பெருமையை -மரியாதையைக் காப்பாற்றுவதற்காக நடுநிலை தவறாமல் நீதி வழங்கினார். அதனால் பல இன்னல்களைச் சந்தித்தார். அதில் அவரது மானம் கூடப் பறிபோனது. ஆனாலும் நீதி வழுவ்வில்லை' என்று 'கதை'யாக சொல்லலாம். அதன் தத்துவார்த்தச் சொல்லாடல். 'கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே. சங்கு சுட்டாலும் வெண்மை தரும்' என்பது.

நிகழ்காலம் உடல்வலிமையின் காலம் அல்ல.; புத்தி உபயோகத்தின் காலம்' என்ற தத்துவார்த்தச் சொல்லாடல்:

'தென் தமிழ்நாட்டில் உடல் வலிமையிலும் மூர்க்கத் தனத்திலும் பெருமை பெற்ற தேவர் இனத்தைச் சேர்ந்த சக்தி வேல், வெளிநாடு சென்று கல்வி அறிவுப் பெற்றுத்திரும்பினான். ஆனால் சாதிப் பெருமையைக் காக்க வேண்டும் என்ற நிலைக்குத் தன்னை உட்படுத்திக் கொண்டதால், வன்முறை, மூர்க்கத்தனம் ஆகியவற்றின் வழியிலேயே செல்ல வேண்டியதாகி விட்டது. ஆனாலும் முடிவில், தன் சாதிக்கு அறிவு- கல்வியறிவும் சட்டத்துக்குக் கட்டுப்படும் ஒழுக்கமும் அவசியம் என்பதை உணர்த்திவிட்டுச் சிறைக்குச் செல்கிறான்' என்று தேவர்மகனின் கதையாக விரிந்துள்ளது.

இன்னும் சில வெற்றிப்படங்களின் பின்னிருக்கும் ஒருவரித்தத்துவச் சொல்லாடல்கள் இதோ:

'புதுப்பணக்காரர்கள் சூழ்ச்சி நிரம்பியவர்கள்;பழைய பணக்காரர்கள் மனிதநேயம் நிரம்பியவர்கள்' -எஜமான்

'கடுமையான உழைப்பு,சமூகத்தின் உச்சிக்கே இட்டுச் செல்லும்' -அண்ணாமலை.

நட்புக்காக உயிரையும்-உறவையும் விட்டுவிடத் தயாராவது சத்திரிய குணம்' -தளபதி

'நாட்டிற்காற்றும் கடமை உயிரினும் மேலானது'- சூரியன்

'நகரத்தவர்கள் பெண்களை மதிப்பதில்லை, நம்பிக்கையில்லை கிராமத்தவர்கள் படிப்பில்லா விட்டாலும் நேர்மையும் ஒழுக்கமும் உடையவர்கள்'- வள்ளி -பொன்னுமணி

இப்படியான ஒருவரித் தத்துவச் சொல்லாடல்கள், கதையாகும் பொழுது நாயகனின் நாயகியின் சூழல்களை உருவாக்கிக் கொள்கிறது. அவன்/ அவளுக்கெதிரான, ஆதரவான நபர்கள், நிறுவனங்கள் முன்னிறுத்தப்படுகின்றன. தத்துவச் சொல்லாடலை மட்டும் கதையாகவும், திரைக்கதையாகவும் மாற்றுவதுமட்டும் போதுமா? என்றால், அந்தப் படம் கலைப்படம் என ஒதுக்கப்பட்டுவிடும் என்கின்றனர் சினிமாக்காரர்கள். இத்தனைக்கும் இந்த ஒருவரிச் சொல்லாடல்கள் சரியான அர்த்தத்தில் தத்துவார்த்த அம்சங்களும் நிலைப்பாடுகளும் கொண்டவைதானா என்றால் அதுவும் இல்லை. அவை பொதுப் புத்தி சார்ந்த தத்துவார்த்தச் சொல்லாடல்கள்தான். நிரூபணம் அற்ற வெகுமக்கள் மனதில் நின்றுவிட்ட நம்பிக்கைதான். எனவே திரைக் கதையாக மாற்றப்படுமானால் கலைப் படம் எனத் தள்ளப்படும் என்பதும் உண்மையில்லை.

ஒரு சினிமா வெற்றியடைய வேறு சில அம்சங்கள் வேண்டும் என்கின்றனர்.

✱ நாயகன்/நாயகியை நினைத்துக் கொண்டிருக்கிற நாயகி/நாயகன் வேண்டும். அவர்களோடு இன்னொரு நபரும் இருந்தால் நல்லது.

ஜென்டில்மேன் -மதுபாலா, சுபாஸ்ரீ.

தேவர் மகன்- கவுதமி, ரேவதி.சின்னக் கவுண்டர் -சுகன்யா, அவரது தங்கையாக நடிக்கும் நடிகை, பொன்னுமணி- பலாத்காரம் புரிந்தவன், கார்த்திக், வள்ளி- உடல் சுகத்திற்காகக் காதலிப்பதாக நடித்தவன், மாமன் மகன்.

இப்படி இரண்டு நபர்கள் இருப்பதன் மூலம் குறைந்தது இரண்டு பாடல்கள் வைக்கமுடியும்.

✱ இவர்களோடு சேர்ந்து ஆட குழுவினர் வேண்டும். குழுவினர்க்குத் தனியான ஆடைகள். (70 எம்.எம்.திரையில் இரண்டு பேர் மட்டும் ஆடுவது போதாது என்ற நிர்ப்பந்தமும் குழுவினரின் தேவையை உணர்த்தியுள்ளது.)

✱ அடுத்து காமெடி டிராக் -அதன் மூலம் இரட்டை அர்த்த வசனங்கள். இதற்கு பெரும்பாலும் உடல் உழைப்பில் ஈடுபடும் பாத்திரங்களே பயன்படுகின்றனர். அப்பாவிகளாகவும் புத்தியற்றவர்களாகவும் படைக்கப்படும் பெண்களும் வேலைக்காரர்களும் அவர்களது உடல் குறைகளும், பேசசுத் தொனிகளும் (சில நேரங்களில் வட்டார மொழியும்) காமெடிக்கும் இரட்டை அர்த்த பாலியல் கிளர்ச்சிக்கும் பயன்படுகின்றன.

✱ கனவுப் பிரதேசமாகப் பெண்களின் உடலை மாற்றுதல், நடிகைகளின் பிம்பங்கள், நடிகனின் கனவுப் பிரதேசமாகக் காமிரா மூலம் காட்டப்படும் பொழுது, பார்வையாள ஆணும், அவளின் உடலைத் தனது கனவுப் பிரதேசமாக மாற்றிக் கொள்கிறான். பார்வையாளப் பெண், தன் உடம்பைக் கனவுப் பிரதேசம் போல் மாற்றிக் கொள்ளும்படி தூண்டப்படுகிறாள். ஆண்களின் விருப்பப் பதுமையாக மாறத் தயாராக்கப்படுகிறாள். இவையெல்லாம் வியாபார சினிமா அல்லது வெகுமக்கள் சினிமா வகுத்துக் கொண்டுள்ள விதிகள். இவையெல்லாம் நிச்சயம் இருக்கும். இவை போன்ற வேறுபலவும் இருக்கக்கூடும். இவ்விதிகளே ஜனரஞ்சகமாகப் படத்தை மாற்றும் காரணிகளாகக் கருதப்படுகின்றன.

இதைச் சுருக்கமாக இப்படி புரிந்து கொள்ளலாம். ஒரு வரிச் சொல்லாடல் கதையாகும் பொழுது தத்துவத்தை -பொதுப்புத்திசார்ந்த தத்துவத்தைப் பிரதானப்படுத்துகிறது. திரைக்கதையாகும் பொழுது பொதுப் புத்திக்கு -பொதுப்புத்தி சார்ந்த உணர்வுகளுக்கு -முக்கியத்துவம் கொடுக்கிறது. தத்துவத் தலைமையை விரும்புகிறவர்களும் நம்புகிறவர்களும் கேள்விக்குள்ளாக்குபவர்களும் அடையாளமற்ற கதாபாத்திரங்களையோ கிண்டலுக்குள்ளாக்கும் பாத்திரங்களையோ படைக்காமல், எல்லாக் கதாபாத்திரங்களையும் அதனதன் சூழலில் வைத்துப் படைப்பர். அதன் வாழ்க்கைக்கான தத்துவமும் தர்க்கமும் தவறாமல் தரப்படும். ஆனால் நபர்களால் வழி நடத்தப் பட வேண்டிய அல்லது அடிமைப் படுத்தப் படவேண்டிய சமூகத்தை உருவாக்க விரும்புகிறவர்களும் நம்புகிறவர்களும் கேள்விக்குள்ளாக்கப்படுவதை விரும்பாதவர்களும் தனிநபர்களை மட்டும் தத்துவார்த்தம் கொண்டவர்களாகப் படைக்கிறார்கள். மற்றவர்கள் எல்லாம் அந்தப் படைப்பில் அவரவர் அளவில் கூட கதாபாத்திரங்களாக இருப்பதில்லை. தத்துவம் சார்ந்த தலைமைப் பாத்திரங்களுக்குத் துணை செய்வதே அவர்களின் வாழ்க்கை லட்சியம்.

திறமைகளை மதிக்காத சமூகத்தை அதன் காரணிகளை கிரிமினல் தனமான காரியங்களைச் செய்து பழிவாங்கும் லட்சியம் கிச்சாவிற்கு உண்டு (ஜென்டில் மேனில் அர்ஜுன்) கிரிமினலை அடக்கிச் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் லட்சியம் அழகர் நம்பிக்கு (போலீஸ் அதிகாரி சரண்ராஜ்) உண்டு. ஜென்டில்மேனில் இவர்கள் இருவருமே லட்சியவாதிகள். இருவரைத் தவிர மற்றவர்கள் லட்சியங்கள் எதுவும் இல்லாதவர்கள். இந்தியத்தாய் (லட்சியத் தாய்) பிம்பம் தரும் மனோரமாவிற்கு உள்ள லட்சியம் கூடத் தன்மகனின் லட்சியத்தோடு சேர்ந்ததுதான் (விதவை அம்மா பாத்திரத்திற்குரிய நடிகையாக மனோரமாவைத் தேர்ந்தெடுக்கும் போக்கு சின்னத்தம்பியிலிருந்து ஆரம்பம். படத்திற்கு வெளியேயும் அவர் விதவை; மகனை வளர்க்க சிரமப்பட்டவர் என்ற புனைவுகள் உண்டு); தனித்து அல்ல. நாயகிக்கு லட்சியம் இல்லை. டெல்லியிலிருந்து விடுமுறைக்கு வரும் பெண்ணுக்கு லட்சியம் இல்லை. அப்படியிருந்தாலும் அது, ஆண்மை ததும்பும் கண்நிறைந்த ஆடவனை -லட்சியத்தோடு வாழ்பவனை -கணவனாக அடைய வேண்டும் என்கிற சுயநலம் சார்ந்ததுதான். சமூகம் சார்ந்தது அல்ல.

தேவர்மகனில் சக்திவேலுக்கும் (கமல்) அவனது காதலியாக வருபவளுக்கும் (கௌதமி) லட்சியங்கள் உண்டு. படிப்பறிவு- முதலாளிய அறிவு சார்ந்த -வெற்றி என்பது எது என்பதைப் பற்றி -தெளிவாக இருப்பவர்கள். தீர்மானம் செய்யக் கூடியவர்கள்.

பெரிய தேவருக்கும், அவரது பங்காளியின் மகனுக்கும் (நாசர்) லட்சியம் உண்டு. ஆனால் அது நிலப்பிரபுத்துவம் சார்ந்தது. அவை இன்றைக்குத் தேவையில்லை (செத்துப் போகிறார்கள்). மற்றவர்கள் யாருக்கும் லட்சியங்கள் கிடையாது. இசக்கி (வடிவேல்) கூட பெரிய தேவரின் லட்சியத்தோடு சார்ந்தவன் தான். சக்தி வேலனின் மனைவி, அண்ணன், அண்ணன் மனைவி, பங்காளிகள் என யாருக்கும்

→

நன்றி - நூலகத்திட்டம்



லட்சியங்கள் -தத்துவங்கள் கிடையாது.

அண்ணன் -குடிகாரன், உதவாக்கரை.
அண்ணி-அன்பும்,பரிவும் அடக்கம் நிறைந்தவள்.
மனைவி (ரேவதி)- அண்ணியின் மறு உருவம்.

குடும்பமும் அதன் ஒழுக்கமும் காப்பாற்றப்படுகிறது. (வேற்று சாதிக்காரியான -படித்த- தீர்மானம் செய்யக் கூடிய லட்சியங்கள் கொண்டபெண் (கௌதமி) மனைவியாக வந்திருந்தால் குடும்ப ஒழுங்கு சிதைந்து போயிருக்கும்) ஊர் மக்களுக்கோ சாதீய சமூகப் பொருளாதார அடையாளங்களே கிடையாது.

சின்னக்கவுண்டரிலும் அப்படியே. எஜமான், அண்ணாமலை போன்ற படங்களும், கதாநாயகர்களைச் சரியான தத்துவார்த்தம் கொண்டவர்களாகவும், அவர்களுக்கெதிரான கதாபாத்திரங்களை வெல்லப்பட வேண்டிய தத்துவார்த்தம் உடையவர்களாகவும் காட்டுகின்றன.

வள்ளியும், பொன்னுமணியும் நாயகிகளை லட்சியங்கள் கொண்டவர்களாகக் காட்டுகின்றன. வள்ளி படித்தவள். நகரநாகரிகம், கலையார்வம் ஆகியவற்றில் மனம் செலுத்தியவள். ஆனால் அவளை ஏமாற்றுவது நகரத்தைச் சேர்ந்தவன். கலையில் வல்லவன். எனவே பெண்ணுக்கு அதுவெல்லாம் தேவையில்லாதது எனச் சொல்வதற்காப் பெண்ணா, அவளை முரட்டுத் தனமான போலீஸ் அதிகாரிக்கு மனைவியாக்கு எச்சரிக்கை).

ஆனால் அவளது உடம்பைப் பொதுப் புத்திக்கான தீனியாக்கி, புதுப்புது விளையாட்டுக்களை (கப்ளிங். டிக்கனோ) யும் விளையாடுகிறார்கள். காமிராவின் கோணங்களும், அதன் பின்னணியில் சொல்லப்படும் இரட்டை அர்த்த வசனங்களும் கூடுதல் பரிமாணங்களைத் தருகின்றன. இந்த விளையாட்டு பாமரர்களுக்கு. இந்தப் பொதுப்புத்தி விளையாட்டை கிச்சா விளையாடுவதில்லை. (ஆண்மைக்குச் சவால் விடப்பட்டால் மட்டும் விளையாடுவான்.)

அப்பளக் கடையில் உடல் உழைப்பில் ஈடுபடும் வேலைக்காரர்கள் (கவுண்டமணி, செந்தில் -லட்சியமற்றவர்கள்) தான் விளையாடுவார்கள், கிச்சா - முதலாளி; மற்றவர்கள் தொழிலாளர்கள்.

சின்னக்கவுண்டர் சவாலில் வெற்றி பெற்று, பெண்ணின் தொப்புளில் (தான்) பம்பரம் விடுவார். அவளும் சின்னக் கவுண்டரின் மோட்டருக்குத் தான் குளிக்கவருவாள். தேவர் மகன் சக்திவேல் காதலியை ஊர்சுற்றிக் காட்டுவான். சகதியில் தள்ளிவிடுவான். ஆற்றில் முக்கித் தூக்கவான். விதம் விதமான 'போஸ்'களில் புகைப்படம் எடுப்பான். வள்ளியில் 'பால்காரியிடம் (பல்லவி) எல்லோரும் சேர்ந்து 'ஜொள்ளு' வடிப்பார்கள். இடையிடையே வந்து அர்சியல் விமர்சனங்களை உதிர்த்து விட்டுப் போகும் கதா பாத்திரம் (ரஜனிகாந்த்), அல்லது வள்ளிக்காக வாழும் நாயகன் ஏறிட்டுப்பார்ப்பதில்லை. கிச்சா- சின்னக்கவுண்டர்- எஜமான் -அண்ணாமலை - தத்துவார்த்தம் கொண்டவர்கள்- லட்சியவாதிகள் -முதலாளிகள். மற்றவர்கள் தொழிலாளர்கள் - லட்சியங்களற்றவர்கள் -பாமரர்கள் .




கப் படிப்பறிவற்ற, மனிதாபிமானம் நிரம்பிய கிராமத்தானை முன்னிறுத்துகிறது வள்ளி திரைப்படம். 'பொன்னுமணி' சொல்லும் பாடமும் அதுதான்.

'ஜென்டில்மேன்' சமீபத்திய வெற்றிப்படம். அதன் தயாரிப்பாளரும், இயக்குநரும் 'கதை' அதன் சமூகப் பொருத்தம், நிலவும் சமூகச் சூழல் போன்ற காரணங்களைப் பேட்டிகளில் சொல்கிறார்கள். ஆனால் விளம்பரத்தில் 'somthing special' என்று விளம்பரம் செய்கிறார்கள். அந்தச் 'சம்திங் ஸ்பெஷல்' என்ன என்று அலைபாயும் மக்கள் திரளுக்குக்கு சரிவிகித உணவு திகட்டத் திகட்டத் தரப்படுகிறது படத்தில். பாலகுமாரன், ஷங்கர், ரகுமான், குஞ்சுமோன் முதலானவர்கள் 'கனவான்களுக்கானதைக் கனவான்களுக்கும் பாமரர்களுக்கானதைப் பாமரர்களுக்கும் வழங்கும் வித்தை கூடி வந்த மனிதர்கள்.

பொதுப் புத்திக்கான தீனி (சம்திங் ஸ்பெஷல்) யாக அவர்கள் புதுப்புது உத்திகளையும், தொழில் நுட்பத்தையும் பயன்படுத்திருக்கிறார்கள். கட்டுப் பெட்டித்தனமாக மறைத்து வைத்துப் பேசப்பட்டு வந்த பெண்ணின் உடல் பற்றிய பிரதி அதில் வேறு விதமாக வாசிக்கப்பட்டுள்ளது. சில மீறல்கள் நிகழ்த்தப்படுகிறது. அதன் மூலம் 'கட்டுப் பெட்டித்தனம்' சிதைக்கப்படுகிறதா என்றால் இல்லை. இன்பமூட்டுவதை (pleasure)ச் செய்துவிட்டு ஒழுங்குக்குள் முடக்கப்படுகிறது. உடல் பற்றி வெளிப்படையாகப் பேசும் பெண் வெகுளி; அர்த்தம் தெரியாத நாகரீகத்தில் திளைப்பவள் என்று சொல்லி, கட்டுப் பெட்டியான மனைவியாக்கி, சேலையைச் சுற்றிவிட்டுப் பொறுப்பும் வாய்ந்த(!) குடும்பத் தலைவி பிம்பம் உருவாக்கப்படுகிறது. அதன் மூலம் சொல்லப்படும் தத்துவம் கனவான்களுக்கும் கனவான்களின் சீமாட்டிகளுக்கும் (சுதந்திரமான எண்ணம் கொண்ட

கனவான்கள் -லஞ்சம் வாங்கினாலும், கூத்தியாள் வைத்துக் கொண்டாலும், கொள்ளை அடித்தாலும் - லட்சியவாதிகள். தொண்டர்கள் அல்ப சந்தோசங்களுக்காக அலைபவர்கள். பெண்களோ எதுவும் தெரியாத உடல் சுகத்தையே பிரதானமாகக் கருதி ஏங்குபவர்கள்; ஆணுக்கு அடங்கிப் போக வேண்டியவர்கள்.

இப்படி ஒரு சிலரைப் பொதுப்புத்தி சார்ந்த தத்துவம் கொண்டவர்களாகவும், மற்றவர்களையெல்லாம் பொதுப் புத்தி சார்ந்த உணர்வுகள் கொண்டவர்களாகவும் காட்டும் படைப்புகளின் நோக்கம் என்னவாக இருக்க முடியும்? இவை மக்கள் திரளின் மனதில் என்ன வகையான் கருத்தமைவுகளை உருவாக்கும்? இந்த மாதிரியான சிந்தனைகள் இந்தப் படங்களின் பின்னணியில் இருக்கின்ற கலைஞர்களுக்கு- தொழினுட்ப பயிற்சியாளர்களுக்கு -உண்டா என்ற கேள்விகள் எழக்கூடும்.

இந்த படங்களின் மையமான நோக்கம் தனிநபர் தலைமையை முன்னிறுத்துவதும், தக்கவைப்பதும்தான். எந்தவிதமான 'தனிநபர்' தலைமையையும் கேள்விக்குள்ளாக்கி நிறைகுறையை ஆய்வுச் செய்து மாற்றிப் பார்ப்பதும் கூட அவர்களுக்கு விருப்பமானது அல்ல. அந்தத் தத்துவத்தின் இடத்தில் இந்த தத்துவம் என்பதாக இல்லாமல் அவன் இடத்தில் இவன் என்கிற மாதிரியான மாற்றம் பற்றி இவை யோசிக்கின்றன.

வலியக் கிணிக்கப்பட்ட சண்டை. கவர்ச்சி நடனம், பாலியல் பலாத்காரம் வாகனத்துரத்தல் போன்ற தர்க்கத்திற் குட்படாத அம்சங்களைத் தவிர்த்துக் கதையின் போக்கிலேயே அவற்றின் அம்சங்களைத் தாங்கி வந்துள்ள இந்தப் படங்களை நடுவாந்திரப் -படங்கள் (Middle cinema) என்றும் கெடுதல் விளைவிக்காதவை (Harmless) என்றும் பத்திரிகைகள் பாராட்டுகின்றன. பார்வையாளர்களும் திரும்பித் திரும்பிப் பார்ப்பதால் அதன் தயாரிப்பாளர்களும் மற்றவர்களும் பணத்தை வாரிச் சுருட்டுகின்றனர். அதற்கு காரணம், பொதுப்புத்தியைத் தங்கள் 'தத்துவங்களின்' விளையாட்டுகளனாக மாற்றி, தனிநபர் தலைமையைத் தக்க வைக்கும் மந்திரவித்தையைச் சரிவரச் செய்வதுதான். தனிநபர்களை முன்னிறுத்தும் இப்படங்கள். ஒரே மாதிரியான நபர்களையே முன்னிறுத்துகின்றன என்றும் சொல்லிவிட முடியாது. படத் தயாரிப்பாளர்கள் அல்லது இயக்குனரின் சாதி! வர்க்கப் பின்னணிக்கேற்ப முன்னிறுத்தப்படும் நபர்களின் சாதி வர்க்கக் குணாம்சங்களும் மாறுபடுகின்றன என்பதும் வெளிப்படையாக இருக்கின்றன.

தேவர்மகன் தொடங்கி ஜென்டில்மேன் வரையிலான படங்களுக்கோ நிலவுகின்ற முதலாளிய -ஜனநாயக அரசுகளின் நடைமுறைகள் முக்கியம். அதற்குத் தகவான மனிதர்கள் உருவாக வேண்டும். கல்வியறிவு பெற்ற 'தேவர் மகன்' களுக்காக அவை வாதாடும். சத்திரிய குணம் கொண்ட 'தளபதி' சட்டத்திற்குட்பட்டாக வேண்டும் என்று கூறும். கடமையைச் செய்யும் போலீஸ் அதிகாரி சூர்யவம்சத்தைச் சேர்ந்தவன். (ராமனின் வம்சம்) என்றும் பாராட்டும், சட்டத்தை மதிப்பவனாகக் 'கிரிமினல்' மாறிவிட்டால் அப்புறம் அவன் 'ஜென்டில் மேன்' (கனவான்) தான். இந்தப் படங்களில் பல மௌனங்கள் உண்டு. சட்டமும் அவை சார்ந்த நடைமுறைகளும் சாதாரண மனிதர்களுக்கெதிராக இருப்பதையோ, அதிகாரம் கைவரப் பெற்ற கனவான்கள், அதனை சாதுர்யமாக வளைத்துக் கொண்டு முதலாளிகளாவதையோ இந்தப் படங்கள் பேசுவதில்லை; காட்டுவதில்லை. ஜனநாயக நடைமுறைகளுக்கு வக்காலத்து வாங்கும் இதன் பின்னணியில், முதலாளிய நடைமுறைகளுக்கு மாறிவிட்ட; நகரப்புற- உயர்வகுப்பு. உயர்சாதி -பிராமணிய அறிவாளிகள் இருப்பதுதான் காரணம்.

சின்னக்கவுண்டர், எஜமான் வகையறாப் படங்களுக்கோ நிலவுடமைத் தலைமையும் நிலச்சுவான்தார்களின் நல்லியல்புகளும் ஒழுக்கங்களும் முக்கியம். இந்த நிலச் சுவான்தார்கள் காட்டும் சாதீய ஒடுக்கு முறைகளோ, கூலி விவசாயிகளுக்கு இழைக்கும் அநீதிகளோ, பெண்களை அடக்கியொடுக்குவதோ முக்கியமில்லை.

அரசு நிறுவனங்களையும் அதிகாரத்துவ மையங்களையும் தங்களுக்கு சாதகமாக மாற்றிக் கொள்ளும் கிராமீய நாட்டாண்மைகளின் இன்னொரு பக்கத்தைப்பற்றி இந்தப் படங்கள் பேசாமல் மௌனம் சாதிக்கும். அதற்குக் காரணம், இந்த வகைப் படங்களின் கதாசிரியர்களும் இயக்குனர்களும் கிராமீய நாட்டாண்மைகளின் குடும்பங்களிலிருந்து வந்தவர்கள். நிலவுடமை வர்க்கத்தினர் சாதிப்பட்டியலில் பிற்பட்ட வகுப்பில் இருப்பவர்கள்.

சாதியாலும், கடைப்பிடிக்கும் விழுமியங்களாலும் (values) இவ்விருவகைப் படங்களின் காரணகர்த்தாக்கள் வேறுபட்டாலும், வர்க்கத்தால் அவர்கள் செல்வந்தர்கள் -கனவான்கள். கனவான்களின் நலன் தனிநபர் தலைமையில் உள்ள அமைப்பில்தான் பாதுகாப்பானது.

ஆக-
கனவான்களின் நோக்கம் புரிகிறது.
அப்படியானால்
பாமரர்களின் செயல்..?

**நன்றி: ஊடகம் 94**

## வளரும் கனாக்களும் துயிலாத நாளும்

(முதலாம் கனா)
இறந்துபடும் சூரியன்
அலை அடங்கும் தொலைகடலில்

வெளிறிவரும் ஆழ்நிலம்
தேங்கும் குட்டையின் பாசிப்பச்சையாய்.

நிரை குலைந்து இரையும் அலை
அறுபட்ட சேவலின் செட்டையடிப்பென.

சுரைநக்கும் நுரையின் நுனியில் குருதி
குருதிக்குள் துருத்தும் முலைக்காம்பு.

மிதக்கும் துடுப்பை பற்றிய பாதிக்கை
எரிந்தபாய் மரத்தண்டில் கருகிய மயிர்.

இறுக்கிக்கவ்வும் சிவப்பாடையில் சடலம்
கடலூதிப்பருத்த முண்டத்தில் வடியும் ஊனம்.

பிளபட்ட கபாலத்துள் வட்டெழுத்துக்கள்
நரம்புகளின் பின்னலில் சாதிப் பெயர்.

மாமிசத்தை உண்டு செரிக்கும் அரசமரம்
ஒடிந்த கிளையிலும் வெட்டுப் பல்.

தந்தப்பிடியிட்ட வாள்தனைச் சுழற்றி
சிங்கத்தின் முதுகில் மதயானைச் சவாரி

மனிதம் மேவாத விலங்கின ஆடலில்
கோட்டுக்கு வெளியேயும் ஆடுபுலி ஆட்டம்.

கதை கதையாம் காரணம் காரணத்திலொரு பூரணமாமென
நாட்டு வளப்பம் கூறும் கிணற்றுத் தவளைகள்.

பாம்பின் நாக்கென முன்முனை ஆட
மீன்வாலுடன் நீச்சலடிக்கும் பேனா.

கள்ளியும் நாகதாளியும் கற்றாளையும்
மடல் விரித்து பரப்பும் நிழலில்....

சிறு நண்டு மணல்மீது
படமொன்று கீறும்....1

எழுவான் கரையில்
தனியனாய் நான்.

(இரண்டாம் கனா)

விழுந்து விடும் வானம்
புல்வெளி மடங்கும் மலையிடையில்.

மங்கிவரும் பயிர்ப்பச்சை
காய்ந்த கதிரின் செம்மஞ்சளாய்.

தேவதச்சர்கள் தேவதைகளுடன் புணர்ந்துலவ
கொட்டிக்கிடக்கும் கடவுளரின் கடைக்கண்கள்.

தங்கத்தால் வார்த்ததெருக்களில் பிளாட்டின் தூண்கள்
தூண்களில் தூங்கும் வானத்து தாரகைகள்.

காவித்துகில் போர்த்தபடி அலையும் உரு
திரையிடும் மயிருள் முகம் புதைய ஜீசஸ்

நேரகாலம் அழிந்தழிந்து கொழிக்கும் பணம்
உருகி ஒழுகும் கடிகாரம்.

ஊர்கின்ற கட்டிடங்களில் முளைத்தகால்
கால் எலும்புகளில் பொறித்திருக்கும் பூர்வீகம்.

பொழியும் அமிலமழையில் கரையும் இலைகள்
மொட்டைக் கொப்புடன் மூளியாய் மரங்கள்.

அச்சில் பதிந்துவரும் குறைவீதக் கறுப்பாய்
வெண்ணொளிப் பரப்பில் படரும் குருட்டுநிலவு.

ஒலிவ் இலை காவி 'நேரவா'வுக்கு அமைதிசொன்னபுறா
குண்டடிபட்டு பனிப்பரப்பில் தலைகுப்புற.

ஒலிவ் இலைக்காம்புகள் ஒவ்வொன்றிலும் சீறும் அணு
கந்தகப் புகையில் உயிரின சுத்திகரிப்பு.

அகோரப்பசியில் அலைகின்ற டைனோசர்கள்
சப்பித்துப்பிய எச்சங்கள் சகதியிலும் வைனிலும்.

வகை தொகையற்று மொய்க்கின்றன எறும்புகள்
எறும்புகளின் ஆவியை அரித்துண்ணும் இனிப்பு.

மெல்லெனக்கசியும் குளிர்காற்றிலும் பாடல்
நசிபட்ட சிற்றெறும்பொன்றின் ஈனக்குரல்.

ஊரான ஊர் இழந்தேன்
ஒத்தப்பனைத் தோப்பிழந்தேன்.....2

உறையும் பனியில்
இளகி உருகும் நான்.

அரக்கப்பரக்க எழாத எந்தக் காலையிலும் கூட
கிளர்த்தும் ஆழ்மனம்.
கலையும் துயில்.
அம்மாவும் சொல்வதுண்டு
விடிகாலைக்கனாக்கள் பலிக்குமாம்.
இவை என்ன நிகழ்வற்ற கனாக்களா
நான் துயில...?

கி.பி.அரவிந்தன்.

17.03.1994- பாரிஸ்.

1. மகாகவி அவர்களின் கவிதைவரி

2. மலையக நாட்டுப்பாடல் வரி

நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கையின் அரசியலமைப்புக்களும் இனப்பிரச்சினையும் -10

## இலங்கை தேசிய காங்கிரஸ்

# உளிப்பிடியான கதை

1920ம் ஆண்டு மானிங் அரசியல் திட்டத்தினூடாகப் பௌத்த சிங்கள பேரினவாதம் அரசியல் திட்ட அரங்கில் காலடிவைத்து தமிழ்த் தேசிய இனத்திற்கு எதிராகத் திரும்பும் வரை தமிழர்கள் தாம் இந்த நாட்டின் சிறுபான்மையினர் என்பதை உணரவில்லை. பெரும்பான்மை இனம் என்றே எண்ணினார்கள். இதுபற்றி கே.எம்.டி சில்வா குறிப்பிடுகையில் ''அப்போதைய இலங்கையின் அரசியற் பரிபாஷையில் நாட்டில் இரு பெரும்பான்மை இனங்களாக சிங்கள இனமும் தமிழ் இனமும் காணப்பட்டன. சிறுபான்மையினர் என்பது ஏனைய சிறிய இனக்குழுக்களைக் குறிப்பதற்குத் தான் பயன்படுத்தப்பட்டது'' என்றார். இராமநாதன், அருணாசலம் என்போரின் தலைமையை சிங்கள சமூகத்தவரும் ஏற்றுக் கொண்டமையும் பௌத்த சிங்கள பேரினவாதம், தமிழ்த் தேசிய இனத்திற்கு எதிராகத் திரும்பாமையுமே இதற்கு காரணமாக அமைந்திருந்தது.

பொன்னம்பலம் அருணாசலம் 1917 இல் இலங்கைச் சீர்திருத்தச் சங்கத்தை உருவாக்கிய போதும் சரி 1919 இல் இலங்கைத் தேசிய காங்கிரஸை உருவாக்கிய போதும் சரி பிரச்சினைகளை இனரீதியில் சிந்திக்கவில்லை. எல்லா இனங்களையும் ஒற்றுமைப்படுத்தி இலங்கையின் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதே அவரது நோக்கமாக இருந்தது. இதனால் இலங்கைத் தேசிய காங்கிரஸை உருவாக்கிய போது இன, பிரதேசரீதியான அமைப்புகளையும் தேசிய காங்கிரஸுடன் இணைத்துக் கொண்டார். அவ்வாறு இணைக்கும் போதே யாழ்ப்பாணச் சங்கம் மேல் மாகாணத் தமிழருக்கு சட்டசபையில் ஒரு பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தது. இக்கோரிக்கை தொடர்பாக சிங்களத் தலைவர்களுடன் பேசி அவர்களுடைய சம்மதத்தையும் எழுத்துமூலமாக அருணாசலம் கொடுத்தார். இது தொடர்பாக தமது சம்மதத்தினை இலங்கைத் தேசிய சங்கத்தின் தலைவர் என்ற முறையில் ஜேம்ஸ் பீரிஸ், இலங்கைச் சீர்திருத்தச் சங்கத்தின் தலைவரென்ற முறையில் ஈ.ஜே.சமரவிக்கிரமா ஆகியோர் யாழ்ப்பாணச் சங்கத்திற்கு 1918 டிசம்பரில் எழுத்து மூலம் வழங்கியிருந்தனர். ஆனால் பிற்காலத்தில் இரு சிங்களத் தலைவர்களும் அதனை வாபஸ் பெற்றுக் கொண்டனர்.

### இலங்கைத் தேசிய காங்கிரஸும் அரசியற் சீர்திருத்தக் கோரிக்கையும்:

1919 டிசம்பரில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டதும் உடனடியாகவே அரசியற் சீர்திருத்தக் கோரிக்கையை முன்வைத்தது. இக்கோரிக்கையின் பிரதான அம்சமாக பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை முன்வைக்கப்பட்டது. அருணாசலம் அப்போது தேசிய காங்கிரஸின் தலைவராக இருந்த போதும் பிரதேசவாரி பிரதிநிதித்துவக் கோரிக்கையின் பேரினவாதத் தன்மையை அறியாதிருந்தார். இதனால் அவரது அங்கீகாரமும் அக்கோரிக்கைக்கு கிடைத்தது.

இவர்களது கோரிக்கை பின்வருமாறு அமைந்திருந்தது. 50 பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு சட்ட சபை உருவாக்கப்பட வேண்டும். அதில் 4/5 பகுதியினர் பிரதேச வாரிப் பிரதிநிதித்துவ முறை மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும். 1/4 பங்கினர் சிறுபான்மை இனத்தவர்களிடமிருந்தும் உத்தியோக அங்கத்தவர்களிடமிருந்தும் தெரிவு செய்யப்படல் வேண்டும். இங்கு சிறுபான்மை இனம் என்ற வகைக்குள் தமிழ்த் தேசிய இனம் உள்ளடக்கப்படவில்லை. ஏனைய தேசிய இனங்களே உள்ளடக்கப்பட்டிருந்தன. அத்தோடு சட்ட நிர்வாக சபையில் அரைப்பங்கினராவது சட்ட சபையிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். உள்ளூர் விடயங்களில் இலங்கையருக்கு பரிபூரண சுதந்திரப் போக்கு வழங்கப்படல் வேண்டும்.

அருணாசலமும் சேர்ந்து தயாரித்த இச் சீர்திருத்தக் கோரிக்கையின் அடிப்படை பேரினவாத அரசியலுக்கு வழிகோலும் தன்மையைக் கொண்டிருந்தது. குறிப்பாக சட்டநிர்வாகத்துறைகளில் பேரினவாத அடிப்படைக்கு இது வழிகோலக்கூடியதாக இருந்தது. சட்டசபையின் 4/5 பங்கினர் பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறையினூடாகத் தெரிவு செய்யப்படுகின்ற போது 75% சிங்கள மக்களைக் கொண்ட நாட்டில் சிங்களப் பிரதிநிதிகளே பெரும்பான்மையாக தெரிவு செய்யப்படும் வாய்ப்பைக் கொண்டிருந்தது. இந்நிலை சட்டசபையின் தீர்மானம் எடுக்கும் செய்முறையில் பேரிவாத அம்சம் ஓங்குவதற்கு இயல்பாகவே வழிவகுக்கக் கூடியதாக இருந்தது.

சட்ட நிர்வாக சபையிலும் 1/2 பங்கிற்கு குறையாதோர் சட்டசபையில் இருந்து தெரிவு செய்யப்படுவர் எனக் கோரிக்கையில் கூறப்பட்டிருந்தது. சட்டசபையில் பெரும்பான்மையாக சிங்கள பிரதிநிதிகள் இருக்கும் போது சட்டநிர்வாக சபையிலும் அவர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவே இது வழி செய்யும். இந்நிலை சட்டநிர்வாக சபையின் தீர்மானம் எடுக்கும் செயல் முறையிலும் பேரினவாதம் ஓங்குவதற்கு வழிவகுக்கக் கூடியதாக இருந்தது.

பௌத்த சிங்கள பேரினவாதத்தின் நிலை ஓங்கியிருந்த ஒரு காலகட்டத்தில் அதுவும் இலங்கைத் தேசிய காங்கிரஸ் பேரினவாதிகளையும் சேர்த்து உள்வாங்கிய நிலையில் தமிழ்த் தலைவர்களும், அருணாசலமும் இச்சீர்திருத்தக் கோரிக்கையின் உள்ளடக்கத்தை விளங்கிக் கொள்ளாமை அவர்கள் இழைத்த மிகப் பெரிய அரசியல் தவறு என்றே கூற வேண்டும். எதையும் அனுபவரீதியிலேயே பூரணமாகப் புரிந்து கொள்ள முடியும் என்பதற்கிணங்க இவர்களும் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் நடைமுறைக்கு வந்ததன் பின்னரே அதன் கோர முகத்தைக் கண்டு கொண்டனர். உண்மையில் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத் தெரிவு என்பது இலங்கையைப் பொறுத்தவரை ஆட்சி அதிகாரங்களை பெரும்பான்மை இனத்திடம் ஒப்படைக்கின்ற ஓர் செயல்முறையாகும். இந்த அடிப்படையில் தேசிய காங்கிரசின் சீர்திருத்த கோரிக்கையில் இறுதியாக கூறப்பட்ட உள்ளூர் அலுவலகங்களில் இலங்கையருக்கு பரிபூரண சுதந்திரப் போக்கு வழங்கப்பட வசதி செய்தல் வேண்டும் என்பது சாராம்சத்தில் உள்ளூர் அலுவலகங்களில் பெரும்பான்மையினத்துக்கு பரிபூரண சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்பதாகும்.

தேசிய காங்கிரஸின் சீர்திருத்தக் கோரிக்கை தொடர்பாக பிரித்தானிய ஆட்சியாளரின் நிலைப்பாடு வேறாக இருந்தது. அவர்கள் இலங்கையர்களுக்கு அதிகாரங்களை அதிகளவில் கொடுக்க விரும்பியிருக்கவில்லை. அத்தோடு அவர்கள் இலங்கை மக்களின் ஐக்கியத்தின் சின்னமாக விளங்கிய இலங்கைத் தேசிய காங்கிரஸைக் கண்டும் அஞ்சியிருந்தனர். இதனால் அவர்கள் தேசிய காங்கிரசினர் கேட்ட அளவில் அல்லாது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அரசியல் சீர்திருத்தம் செய்ய முன்வந்ததோடு கூடிய வரை தேசிய காங்கிரஸை சிதைப்பதிலும் அக்கறை கொண்டிருந்தனர். அப்போது தேசாதிபதியாக இருந்த ''மானிங்'' இது விடயத்தில் மிகுந்த அக்கறையுடையவராக இருந்தார். ஆனால் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் முன் வைக்கப்பட்ட சீர்திருத்தம் கூட பேரினவாத ஆதிக்கத்திற்கு போதுமானதாக இருந்தது. அது எந்த வகையில் அமைந்திருந்தது என்பதைப் பார்ப்போம்.

### ''மானிங்'' அரசியற் சீர்திருத்தம் (1920)

1920இல் தேசாதிபதியாக இருந்த ''மானிங்'' என்பவரினால் முன்வைக்கப்பட்டமையினாலேயே இச்சீர்திருத்தம் ''மானிங்'' அரசியற் சீர்திருத்தம் என அழைக்கப்பட்டது. இது 23-9-1920 இல் பிரகடனப்படுத்தப்பட்டது.

இச்சீர்திருத்தத்தின்படி சட்டசபையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு அதன் எண்ணிக்கை 37 ஆக அதிகரிக்கப்பட்டது. அதில் 23 பேர் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்களாகவும் 14பேர் உத்தியோகப்பற்றுள்ள அங்கத்தவர்களாகவும் இருப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது. உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்களில் 11 பேர் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை மூலம் தெரிவு செய்யப்படுவார்கள் எனக் கூறப்பட்டது. ஒவ்வோர் மாகாணத்திலிருந்து ஒவ்வொருவரும் மேல்மாகாணத்திலிருந்து மூவருமாக 11 பேர் இவ்வாறு தெரிவு செய்யப்படுவார்கள் எனக் கூறப்பட்டது. இனரீதியாக மூவர் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் ஐரோப்பியர் -2, பறங்கியர் -1 என்ற வகையில் அவை இருக்கும் என்றும் சங்கங்கள் தெரிந்து அனுப்பும் பிரதிநிதியாக இருவர் இருப்பார்கள் என்றும் கரை நாட்டு விளைபொருள் உற்பத்தியாளர் சங்கம்-1 இலங்கை வர்த்தகர் சங்கம் -1 என்ற வகையில் அவை இருக்கும் என்றும் கூறப்பட்டது.

நியமன அங்கத்தவர்களாக 7 பேர் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் கண்டியர்-3, இந்தியர்-1, முஸ்லீம்கள்-1, விசேட அங்கத்தவர்-3 என்ற வகையில் அவை இருக்குமெனவும் கூறப்பட்டது.

இச்சீர்திருத்தம் தேசிய காங்கிரஸ் எதிர்பார்த்ததுபோல முழுமையான பிரதேச வாரிப் பிரதிநிதித்துவத்தை இது கொடுக்காத போதும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அறிமுகப்படுத்தப்பட்ட பிரதேசவாரிப் பிரதிநிதித்துவமே பேரினவாதம் காலூன்றுவதற்கு போதுமானதாக இருந்தது. இச்சீர்திருத்தத்தின் படி நடைபெற்ற (1921) தேர்தலில் சிங்கள சமூகத்திலிருந்து 9 பேர் தெரிவு செய்யப்பட தமிழர்களிலிருந்து இருவரே தெரிவு செய்யப்பட்டனர். வடமாகாணத்திலிருந்து வைத்திலிங்கம் துரைசுவாமியும் கிழக்கு மாகாணத்திலிருந்து இ.ஆர்.தம்பிமுத்துவுமே இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட தமிழர்களாவர். மேல் மாகாணத்தில் மூன்று இனத்தவர்களும் தெரிவு செய்யப்படுவார்கள் என எதிர்பார்த்த போதும் மூவரும் சிங்கள சமூகத்தவர்களிலிருந்தே தெரிவு செய்யப்பட்டனர். தமிழர்களின் தொகை மிகக் குறைவாக காணப்பட்டமையால் நியமன விசேட அங்கத்தவர்களில் ஒரு அங்கத்துவம் தமிழராகிய பொன்னம்பலம் இராமநாதனுக்கு வழங்கப்பட்டது. அதன் பின்னர் சட்டசபையில் தமிழர்களின் எண்ணிக்கை 3 ஆக இருக்க கண்டிச் சிங்களவருக்கான நியமன அங்கத்துவத்தையும் சேர்த்து சிங்களவர்களின் எண்ணிக்கை 13 ஆகக் காணப்பட்டது.

### சீர்திருத்தத்தின் விளைவுகள்:

தேர்தலின் பின்னரே தமிழர் தமது உண்மை நிலையை உணர்ந்தனர். தாங்கள் பெரும்பான்மையினர் அல்ல சிறுபான்மையினரே என்பதை உணர்ந்தனர். அதுவரை காலமும் சிங்களவரோடு சம அங்கத்துவத்தை பெற்று சமத்துவமாக வாழ்ந்தவர்கள் இன்று இரண்டாம் தர நிலைக்கு தள்ளப்பட்டதை உணர்ந்தனர். இவ் உணர்வின் உந்துதலினால் 1920க்கு முன்னர் சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையே காணப்பட்ட சமத்துவ வீதாசாரம் தொடர்ந்தும் பேணப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.


இதன் பின்னணியில் மேல் மாகாணத் தமிழருக்கென தனியான ஒரு தொகுதியை அமைத்துத் தருவதாக 1918 ம் ஆண்டில் யாழ்ப்பாணச் சங்கத்திற்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றும்படியும் கோரிக்கையை விடுத்தனர். ஆச்சரியப்படத்தக்க வகையில் வாக்குறுதி அளித்த இருவரும் கோரிக்கையை நிராகரித்தபோதே அருணாசலம் விழித்துக் கொண்டார். அருணாசலம் முன்னிலையில் எழுத்தில் கொடுக்கப்பட்ட உத்தரவாதம் நிராகரிக்கப்பட்டது. அவருக்கு ஒரு கௌரவ பிரச்சினையாகவும் இருந்தது. அவர் சிங்களத் தலைவர்களோடு பலத்த வாக்குவாதத்தில் இறங்கினார். ''அருணாசலம் அகந்தையும் ஆணவமும் கொண்ட அரசியல் தீவிரவாதி'' என்று டி.எஸ். சேனநாயக்காவின் சகோதரரான எவ். ஆர். சேனநாயக்கா கூறும் அளவுக்கு அவரது எதிர்ப்பு கடுமையானதாக இருந்தது. இறுதியில் தேசிய காங்கிரஸில் முழுமையாக நம்பிக்கையிழந்து 1921 ஆகஸ்டில் அதிலிருந்து வெளியேறி தமிழர் மகாஜன சபையை உருவாக்கினார்.

அருணாசலத்தின் வெளியேற்றத்தின் பின்னர் தேசிய காங்கிரஸ் இலங்கையிலிருந்த எல்லாச் சமூகங்களுக்கும் குரல் கொடுக்கும் ஒரு அமைப்பு என்ற தனது தகைமையை முற்றாக இழந்துவிட்டிருந்தது. இதன் பின்னர் தேசிய காங்கிரஸ் வெறுமனவே சிங்களவர்களின் அமைப்பாக மட்டும் இருந்தது. 192[illegible] ஆண்டு கண்டிய சிங்கள மக்களின பிரதிநிதிகளும் தேசிய காங்கிரஸை விட்டு வெளியேறிய பின்னர் கரையோர சிங்கள மக்களின் அமைப்பாக மட்டும் அது தொழிற்பட்டது. தமிழ் மக்களின் போராட்ட வரலாறும் இவ் அரசியற் சீர்திருத்தத்திலிருந்தே ஆரம்பமாகின்றது. ஆரம்பத்தில் சம அங்கத்தவ கோரிக்கையோடு உருவாகிய தமிழர் போராட்டம் பின்னர் சமஷ்டிக் கோரிக்கையாக பரிணமித்து இன்று தனிநாட்டுக் கோரிக்கையாக வளர்ச்சி அடைந்துள்ளது.

### செம்பாட்டான்

---

## இனி ஒரு தாலாட்டு



இருள் கவிந்த இரவுப் பறவையொன்று
முடியுடை மன்னர்கள் மதுவருந்தி
சல்லாபித்துக் கொண்டிருந்த...
முன்னொரு முழு நிலவுப் பொழுதில்
கோரத்தனமாக பற்களைக் காட்டி,
இறக்கைகளை விரித்து மூடியது.
இன்று நான் பிறந்த போதிலும்...
இருளையே பார்த்தேன்!
மற்றவான் எல்லாம் எப்போதும் போல்
வெளிச்சமாய்த் தோன்றிற்று.
ஏன், என் கையகலப் பூமி மேல்
கறை காவு கொண்டது?
"நளாயினியின்" நாயன்மார் காலத்துக் கதை
அன்னை உரைத்தாள்.
"இங்கு என்ன நடந்தது"?
என்னைப் போல் இருளுக்குள் பிறந்தவர்
எல்லாம் கேட்கத் தொடங்கியாயிற்று.
தாயின் வாயில் துப்பாக்கிப் பூட்டு
வாசல்படி தாண்டினால்...
மிதி வெடி வெடிக்கும்.
உ(பெ)ண்மை சொல்லாதே என்று.
எருமை வரும் என்ற பயம்
என் பிறப்புடன் போயிற்று!
தாயே நீ பாடு
இருள் கவிந்த காரணமும் சேர்த்து
"இனியொரு தீலாட்டு"!
நான் தூங்கு வதற்கல்ல.
நாங்கள் எல்லாம் கோழைகளாக எப்படி?
இவ்வளவு காலமும் தூங்கிக்
கொண்டிருந்தோம் என்று.

—செல்வமதீந்திரன்—

நன்றி - நூலகத்திட்டம்



# குமாரபுரம் ஸ்டேஷன்



(சென்ற இதழ் தொடர்ச்சி)

இரண்டு மூன்று பேர் பிளாட்பாரத்துக்கு வந்து கைகாட்டி மரத்தை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்து விட்டு அங்கேயே ஒரு பக்கத்தில் ஒதுங்கி நின்றார்கள். எப்போதோ மாடு வாங்கிய செய்தியை ஓர் ஆசாமி கதையாகச் சொல்ல, மற்றவர்கள் கவனமாக 'உம்' போட்டுக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

சுப்பராம ஐயர் அவர்கள் பேச்சை உற்றுக்கேட்டார். அந்தப் பேச்சில் உண்மை மட்டுமல்ல, அர்த்தமும் சுவாரஸ்யமுமே இருப்பது போல் அவருக்குத் தோன்றியது. அவர்களை அழைத்து வைத்துக கொண்டு அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகளையெல்லாம் ஆதியோடு அந்தமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளக்கூட அவர் ஆசைப்பட்டார்!

அரைமைல் தூரத்தில் வெள்ளை வேஷ்டிகளாகக் காட்சியளித்துக் கொண்டு ஓடிவந்தவர்கள், நான்கு சிறுவர்களும் ஒரு பெரியவருமாக இனம் காட்டிக் கொண்டு ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தார்கள். வந்ததும் வராததுமாக, 'டிக்கட் குடுத்தாச்சா?' என்று கேட்டார் ஓடி வந்த பெரியவர்.

பேசிக் கொண்டு நின்றவர்களில் ஒருவர், 'இல்லை, இல்லை' என்றார்.

எல்லோரும் ஒரு மூச்சு விட்டுக் கொண்டார்கள். அந்த நான்கு சிறுவர்களின் கண்களும் ஏககாலத்தில் வேப்பமரத்தடியில் பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டிருந்த சுப்பராம ஐயரைத்தான் பார்த்தன. பார்த்த மாத்திரத்தில் மிகுந்த மரியாதை கொடுத்து, மூச்சு விடுவதைக் கூட கொஞ்சம் மட்டுப்படுத்தினார்கள். இப்படிப்பட்ட ஒருவரை அவர்கள் வருஷத்தில் ஒரு தடவை காண்பதே அபூர்வம். அவர்களுடைய பள்ளிக்கூடத்துக்கு எப்போதாவது வரும் பெரிய இன்ஸ்பெக்டரைப் போல் காலில் பூட்ஸ் போட்டுக் கொண்டு குளோஸ் கோட்டும் ஜரிகை அங்கவஸ்திரமுமாகக் காட்சி அளித்தார் ஐயர். தலையில் விழுந்திருந்த வழுக்கையும் அவருடைய கௌரவத்தை உயர்த்திக் காட்டியது. இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்ற சிறுவர்களை ஐயரும் பார்த்துக் கொண்டார். நான்கு சிறுவர்களும் ஏறக்குறைய ஒரே பிராயமுடையவர்களாக இருந்தார்கள். பன்னிரண்டிலிருந்து பதினைந்து வயது வரையிலும் மதிக்கலாம். ஒவ்வொருவனுடைய கையிலும் இரண்டொரு புத்தகங்களும், சில வெள்ளைக் காகிதங்களும் இருந்தன. சட்டைப் பைகளில் சீவித் தயாராக வைத்திருந்த பென்ஸில்கள், பள்ளி மாணவர்கள் என்பதை சொல்லாமலே தெரிவித்தன.

சிறுவர்களோ, ஐயரோ பரஸ்பரம் பார்த்துக் கொண்டிருந்தாலும் பேசுவதற்கு முயற்சிசெய்யவில்லை. இந்தச் சமயத்தில் கை இறக்கப்பட்டது. ஸ்டேஷன் மாஸ்டரும் ஐயரிடம் டிக்கெட்டோடு வந்தார்.

'இந்த இடம் உங்களுக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது போலிருக்கிறதே; இங்கேயே உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்!'

'நல்ல காற்று!' என்றார் ஐயர். டிக்கெட்டையும் வாங்கிக் கொண்டார்.

'அப்படியானால் அடுத்த லீவுக்கு வந்து விடுங்கள். இந்த மாதிரி மூன்று நாட்களில் புறப்பட்டு விடாமல் சேர்ந்தாற்போல் ஒரு பத்து நாட்களாவது இருந்து விட்டுப் போகலாம்....

'அப்படியே செய்யலாம்! பத்துநாட்கள்தானே? ராமன் பதினாலு வருஷம் வனவாசம் செய்திருக்கிற போது நாம் பத்து நாட்கள் இங்கே இருக்க முடியாமலா போய்விடப் போகிறது?'

'அந்த வனவாசத்தில்தான், ராமன் தன் உயிர்த்துணைவர்களையெல்லாம் சம்பாதித்துக் கொண்டான். அவனை ராமனாக்கியதே அந்த வனவாசம் தான்' என்று சொன்னார் ஸ்டேஷன் மாஸ்டர்.

'பள்ளிக்கூடத்தை விட்ட பிறகு புராணங்களையெல்லாம் நன்றாக ஆராய்ச்சி செய்திருக்கிறீர்கள் போலிருக்கிறது!' என்று சுப்பராமையர் தமாஷாகச் சொன்னார். ஆனாலும் நண்பரின் வார்த்தைகளில் ஏதோ ஒரு சுகமும் உண்மையும் இருப்பது போலவே அவருக்குத் தோன்றியது.

மேற்கொண்டு சாவகாசமாகப் பேசும் சந்தர்ப்பம் இல்லை. வண்டி வரும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்ததால், காரியார்த்தமாக ஸ்டேசனுக்குள் போய் விட்டார் ஸ்டேஷன் மாஸ்டர். சிறுவர்களை நிறுத்தி விட்டுப் பெரியவர் போய் டிக்கெட் வாங்கிக் கொண்டு வந்தார். எல்லாப் பிரயாணிகளுமே டிக்கெட்டோடு பிளாட்பாரத்துக்கு வந்து தயாராக நின்றார்கள்.

உரிய காலத்தில் வண்டியும் வந்து விட்டது. ஐயர் ஏறிய பெட்டியிலேயே கிராமத்துப் பெரியவரும், அவரோடு வந்த சிறுவர்களும் ஒருவருக்குப் பின் ஒருவராக ஏறினார்கள். வண்டியில் நிறையக் காலியிடம் இருந்தது. ஒரு ஜன்னலோரத்தில் போய் உட்கார்ந்தார் ஐயர். அவருக்கு எதிர்வரிசைப் பெஞ்சியில் நிறைய இடம் இருந்தபடியால் சிறுவர்கள் அங்கேயே உட்கார்ந்து விட்டார்கள். பெரியவர் ஐயருக்கு வலதுகைப் பக்கத்தில் வந்து அமர்ந்தார். பெரியவருக்கு வலதுபுறத்தில் பூதாகாரமான ஆகிருதி படைத்த ஒருவர் ஏராளமான சாமான்களோடு உட்கார்ந்திருந்தார். அவருக்கு எதிரே ஜன்னலை ஒட்டி அவருடைய கனத்தில் முக்கால்வாசியாவது இருக்கும், ஒரு அம்மாள் இருந்தாள். அம்மாளின் பக்கத்திலும் என்னென்னவோ மூட்டை முடிச்சுக்கள், பண்ட பாத்திரங்கள்...

குமாரபுரம் ஸ்டேஷனை விட்டு வண்டி நகர்ந்து விட்டது.

பையன்கள் இரண்டு பக்கத்து ஜன்னல்கள் வழியாகவும், மரம் மட்டைகள் எதிர்த்திசையில் ஓடத் தொடங்கியதை ரஸித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் முகத்தில் தோன்றிய ஆச்சரியத்தையும், அங்கே தாண்டவமாடிய ஆனந்தத்தையும் பார்த்த சுப்பராம ஐயருக்கு, அந்தப் பையன்கள் வாழ்க்கையிலேயே அன்றுதான் முதன்முதலாக ரயில் பிரயாணம் செய்கிறார்களோ என்று நினைக்கத் தோன்றியது. அவர்களோடு ஏதாவது பேச வேண்டுமென்று ஆசை; அப்படியெல்லாம் அவரைப் போன்றவர்களால் சுலபமாகப் பேசிவிட முடிகிறதா? அவருக்கு அது கொஞ்சம் கஷ்டமாகவே இருந்தது.

சில நிமிஷங்கள் கழிந்தபின், பையன்களைப் பார்த்து முதலில் பேச ஆரம்பித்தவர், மேற்குப்புற ஜன்னல் பக்கம் இருந்த பூதாகாரமான மனிதர்தான். எடுத்த எடுப்பிலேயே சௌஜன்யமாகப் பேச ஆரம்பித்தார்.

'ஏண்டா, எங்கே பிரயாணம்?' என்று கேட்டார். அவருடைய குரல் அவருடைய உருவத்தை விடக் கனமாக இருந்தது.

பையன்களுக்கு அதற்குப் பதில் சொல்லவே தோன்றவில்லை. அவர்கள் சார்பில் பெரியவர்தான் பேசினார்.

'கோவில்பட்டிக்கு பெரியபள்ளிக் கூடத்திலே சேரப் போறாக.'

பையன்கள் அவரை மேலும் கீழும் பார்த்தார்கள். அவருடைய வைரக் கடுக்கன், வைர மோதிரம், தங்கப் பொத்தான்கள், உள்ளங்கை அகலக் கடிகாரம்- இத்தனையும் மாறிமாறி அவர்களுடைய கவனத்தைக் கவர்ந்து கொண்டிருந்தன.

'எந்தக் கிளாஸில் சேரப் போறாங்க?'

'நம்ம ஊரிலே ஆறு பாஸ் பண்ணியிருக்கிறாக. அங்கே ஏழிலே கொண்டு போய்ச் சேர்க்கணும்.'

'எந்த ஊர்ப் பையன்கள்?'

'இடைசெவல் கிராமம்'

'இடைசெவலா? அங்கே ஏழாம் வகுப்பு இல்லையோ?'

'இல்லை; 'சர்க்கார் சாங்ஸ'னுக்கு எழுதிப் போட்டிருக்காக.'

'பாஸ் பண்ணினதுக்குச் சர்டிபிகேட் இருக்கா?'

'இருக்கு'

'இருந்தாலும் பரீஷை வெச்சுத்தான் சேர்ப்பாங்க.'

'அதுக்காகத்தான் பெரிய வாத்தியாரு ஒரு மாசமா வீட்டிலே வச்சிப் பாடம் சொல்லிக் குடுத்தாரு' என்றார் பெரியவர்.

பூதாகாரமான ஆசாமி ஒரு பையனைப் பார்த்து, 'டேய், நான் மூணு கேள்வி கேட்கிறேன். நீ பதில் சொல்லிவிட்டா உன்னை ஏழிலே எடுத்துக்குவான்' என்றார். உடனடியாக, 'வாட்டீஸ் யுவர் நேம்?' என்று கேட்டார்.

'மை நேம் இஸ் ஸ்ரீனிவாசன்' என்றான் ஒரு பையன்.

'வாட்டீஸ் யுவர் பாதர் நேம்? இது அவருடைய அடுத்த கேள்வி.

'மை பாதர்ஸ் நேம் இஸ் ராமசாமி நாயுடு'.

'வாட் கிளாஸ் யூ பாஸ்? என்று அவர் மூன்றாவது கேள்வியைக் கேட்டார்.

அவர் தப்பும் தவறுமாக ஆங்கிலம் பேசுவதைப் பார்த்துச் சுப்பராம ஐயர் வாய்க்குள்ளே சிரித்தார்.

'ஸிக்ஸ்த் கிளாஸ்' என்று அடக்கமாகப் பதில் சொன்னான் ஸ்ரீனிவாசன்.

'போதும்டா! கெட்டிக்காரப் பையனாய் இருக்கே. இப்படித்தான் 'டக் டக்'னு பதில் சொல்லணும். நிச்சயம் நீ ஏழாம் வகுப்புத்தான்.'

பையனுக்கு ஒரே சந்தோஷம்.

பெரியவர், அந்த ஆசாமியைப் பார்த்து, 'மத்தப் பையன்களையும் ஏதாவது கேளுங்க' என்று கேட்டுக் கொண்டார்.

'நம்ப இங்கிலீஷ் அவ்வளவுதான்! அதுக்குமேலே எங்க வாத்தியார் கத்துக் குடுக்கலே!' என்று சொல்லி விட்டுத் தொப்பை வயிறு குலுங்கக் 'கடகட'வென்று சிரித்தார்.

எதிரே உட்கார்ந்திருந்த அவருடைய மனைவியும் சுப்பராமையரும் இலேசாகச் சிரித்தார்கள்.

'நமக்கு எந்த ஊரோ?' என்று அவரை விசாரித்தார் கிராமத்துப் பெரியவர்.

'திருநெல்வேலி ஜங்ஷனிலே பங்கஜ விலாஸ் காபி கிளப் இருக்கல்லே, அது நம்ப கடைதான். பார்த்திருப்பாளே?'

'திருநெல்வேலிக்குச் சின்னப் பிள்ளையிலே ஒரு தரம் வந்தது தான்...'

கு.அழகிரிசாமி

'அது நம்ப கடைதான். இந்தப் பையன்களைப்போல் ஆயிரம் பையன்பகள் நம்ப கடையிலே சாப்பிட்டுக் கொண்டு படிச்சிருக்கான்கள். ஜங்கஷனிலே நம்ப கடையை விட்டுக் காலேஜ் பையன்கள் வேறே எங்கேயும் போக மாட்டான்கள். இருபத்தஞ்சு வருஷமாய் பார்த்துண்டு வர்ரேன்.'

'நல்ல கடையை விட்டு யார்தான் போவாக!'

அவர் பையன்களைப் பார்த்துத் திரும்பி, 'டேய் நீங்களும் காலேஜுக்கு வரப்போ நம்ம கடைக்குத் தாண்டா சாப்பாட்டுக்கு வரணும்....' என்றார்.

பையன்களுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. ஒரு நகரவாசி தங்களிடம் இவ்வளவு அன்பாகப் பேசுவது அவர்களுக்கு ராஜோபசாரமாக இருந்தது.

'நமக்குப் பிள்ளைகள் எத்தனையோ?' என்று நாட்டுப்புறப் பாங்கில் விசாரித்தார் பெரியவர்.

'நம்ப கடையிலே சாப்பிட்டவன்களும், சாப்பிடப் போறவன்களும் நம்ப பிள்ளைகள்தான்' என்றார் அவர்.

பெரியவருக்கு அது விளங்கவில்லை. இதை ஹோட்டல்காரர் கவனித்துக் கொண்டார். இருந்தாலும் அவருடைய திகைப்பைப் போக்க முயற்சி செய்யாமல், 'சொந்தப் பிள்ளைகளுக்கு பணம் வாங்கிண்டா சாப்பாடு போடுவான்னு நீங்க நினைக்கலாம், என்ன செய்யிறது! ஹோடல்காரன் தாமம் பண்ணமுடியாது. ஆனால், என்னாலே முடிஞ்ச தர்மத்தை பண்ணாமல் இல்லை. எத்தனையோ பேருக்கு ஸ்கூல் பீஸ் கட்டப் பணம் கொடுத்திருக்கிறேன். அதிலே திருப்பி வாங்கினதும் உண்டு; வாங்காததும் உண்டு' என்று திருப்தியோடு சொன்னார். அடுத்த நிமிஷம் மனைவியைப் பார்த்துப் பலகாரங்களை எடுத்து வைக்கச் சொன்னார் - அவர் சாப்பிடுவதற்குத் தான்.

'ரொம்பத் தூரப் பிரயாணமோ?' என்று கிராமத்துப் பெரியவர் கேட்டார்.

'மதுரை வரைக்கும் போகிறோம். ஒரு கல்யாணம்.'

திரும்பவும் அந்தப் பெரியவர், 'நமக்கு எத்தனை குழந்தைகளோ?' என்று அதே கேள்வியைக் கேட்டார்.

'நான்தான் சொன்னேனே, எல்லாக் குழந்தைகளும் நம்ப குழந்தைகள்தான்னு. பெத்தால்தான் குழந்தையா? இந்த நாலு பையன்களும் என் குழந்தைகள் தான். என்ன சொல்றீங்க?'

பெரியவருக்கு ஒருவாறு புரிந்துவிட்டது. அதைக் காட்டிக் கொள்ளும் முறையில், 'குழந்தைகள் இல்லப்போலிருக்கு! அதுக்கென்ன, ஐயா சொன்னாப் போலே உலகத்திலே உள்ள குழந்தைகளெல்லாம் நம்ம குழந்தைகள்தான். இப்போ பாருங்க, இதிலே ஒருத்தன்தான் என் பேரன். மத்த மூணுபேரும் கூடப் படிக்கிற பையன்கள்தான். எல்லாரையும் சொந்தப் பிள்ளைகள் மாதிரி நான்தான் கோவில் பட்டிக்குக் கூட்டிப் போகிறேன். அந்தக் கடைசிப் பையன் குடும்பம் கொஞ்சம் ஏழைக்குடும்பம். எப்படிப் படிக்கவைக்கிறதுன்னு அவனோட அப்பன் கொஞ்சம் யோசனை பண்ணினான். பையன்களோட பையன்களாக படிக்கட்டும், அப்போ ஆகிற செலவை நான்தாறன், பின்னாலே பார்த்துக்கிடலாம்னு நான்தான் தைரியம் சொல்லிக் கூட்டியாறேன். அவனுக்குப் படிப்பிலே அக்கறை. மேலே படிக்கப் போகணும்னு மூனு நாளாச் சாப்பிடாம அழுதிருக்கான்...' என்று கூறிக் கொண்டே போனார்.

ஹோட்டல் முதலாளியின் மனைவி பலகாரப் பாத்திரத்தைத் திறந்தாள். அதனுள் இருந்த பக்ஷணங்கள் ஒரு கல்யாணத்துக்கே போதும்போல் இருந்தன. இவர் சொல்லாமலே அந்த அம்மாள் ஒரு பெரிய இலையை ஐந்தாறு துண்டுகளாகக் கிளித்துப் பையன்களுக்கும் பெரியவருககும் சோத்து என்னன்னவோ பலகாரங்களை எடுத்து வைத்துக் கொடுத்தாள். பையன்கள் வாங்கிக் கொள்ளத் தயங்கினார்கள்.

'டேய்! வயத்துக்கு வஞ்சகம் பண்ணாதீங்கடா. வாங்கிச் சாப்பிடுங்க' என்றார் ஹோட்டல் முதலாளி

'உம், வாங்கிக்கோங்கோ' என்று பெரியவரும் சொன்னார்.

பையன்கள் கை நீட்டி வாங்கிக் கொண்டார்கள்.

ஹோட்டல்காரர் மற்றொரு இலையைச் சுப்பராம ஐயர் பக்கம் நீட்டினார். அவர் நாசூக்காக, 'இப்போதான் காபி சாப்பிட்டேன். வேண்டாம், நீங்க சாப்பிடுங்கோ' என்று சொல்லிவிட்டுக் கோட்டுப் பையிலிருந்து புத்தகத்தை வெளியே எடுத்தார்

ஹோட்டல் முதலாளி விடவில்லை. கட்டாயப்படுத்தி ஒரு டம்ளர் காபியைக் குடிக்கவைத்துவிட்டார்.

எல்லோரும் பலகாரம் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது, வண்டி நாலாட்டின் புத்தூர் ஸ்டேஷனில் வந்து நின்று அதையும் விட்டுப் புறப்பட்டுவிட்டது.

சுப்பராம ஐயர் புத்தகத்தை விரித்துப் படித்துக் கொண்டிருந்தார். பையன்களும் எழுந்துபோய்க் கையைக் கழுவிவிட்டு வந்து உட்கார்ந்தார்கள். சுப்பராமையரின் கையிலிருந்த புத்தகத்தின் பெயரை எழுத்துக் கூட்டி, 'அன்னா கரேனினா, லியோ டோல்ஸ்டோய்' என்று மெல்லிய குரலில் வாசித்தான் ஒரு பையன். அது ஐயர் காதில் விழுந்தது.

டோல்ஸ்டோய்! அதுவும் சரிதான்! சொல்லிக் கொடுக்காத வரையில் யாருக்கும் டோல்ஸ்டோய் தானே ஒழிய டால்ஸ்டாய் எப்படி ஆகமுடியும்' என்று நினைத்துக் கொண்டார்.

(வரும்)

## பத்திரிகைக்கான நடத்தை நெறிகளைக் கடைப்பிடியுங்கள்

நான் ஆசிரியருககு எழுதிய கடிதத்தை (சரிநிகர் இதழ் 44) சூர்யா தனது பத்தியில் பிரசுரித்துப் பதிலளித்தது பற்றி மிகவும் ஆட்சேபிக்கிறேன். எனது கடிதம் அவரது பத்தி பற்றியது மட்டுமல்ல என்பதோடு, கடிதம் அவருக்கு எழுதப்பட்டதல்ல என்பது முக்கியமானது. ஒரு பத்திரிகைக்கான சில நடத்தை நெறிகளைச் சரிநிகர் கடைப்பிடிப்பது நல்லது. நான் எதைப்பற்றி முறைப்பட்டேன் என்று கூட ''சூர்யா'' சரியாக விளங்கிக் கொள்ளவில்லை. விடுபட்டுப் போன விஷயங்களை மட்டுமல்ல, சில விஷயங்களைத் தவறாகவும் தருகிறார் என்பது தான் என் ஆட்சேபனை. 1970களுக்குள்ளும் முன்பும் இருந்த இலக்கியம் பற்றிய அதிக நாட்டமில்லாது எழுதுகிற ஒரு புதிய பரம்பரை நம்முன் உள்ளது. எனவே தான், விமர்சகர்கள், பத்தி எழுத்தாளர்கள் தகவல்கள் பற்றிக் கூடிய கவனம் எடுப்பது நல்லது. பலஸ்தீனக் கவிதைகள் பற்றிய என்குறிப்பு, முற்றிலும் கவித்துவத்தின் சார்பானதே. உள்ளடக்கம் பற்றியன அல்ல. கடிதத்தை ஒழுங்காக வாசித்துவிட்டுப் பதில் எழுதுவது உத்தமம்.


முன்னரும், வ.ஐ.ச.ஜெயபாலனைப் பற்றித் தனிப்பட்ட முறையில் தனக்கு நன்கு தெரியும் என்பதை வைத்து, அவர் பற்றிய தனது தனிப்பட்ட தாக்குதல்களைச் சூர்யா நியாயப்படுத்த முற்பட்டிருந்தார். இது போலவே, மஞ்சட் பத்திரிகைக்காரர்களும் தமது தூற்றுதல்களை நியாயப்படுத்தினார்கள். கீழ்த்தரமாக எழுதுவது எளிது. எழுதப் பேனாவும் பிரசுரிக்கப் பத்திரிகையும் இருந்தால் கைக்கு வந்தபடியெல்லாம் கிறுக்கி விடலாம் என்பது எனக்கு நியாயமாகப்படவில்லை.

'கழுதைகளும் புல்லுக்கட்டும்' (அருண்) கோமல் சுவாமிநாதன் வருகையின் போது நிகழ்ந்த பிசகுகளை விமர்சித்தது நியாயமானது. ஆயினும் விமர்சனத்தில் தொனி கூட நிதானமாக இருந்திருக்கலாம். தேசிய கலை இலக்கியப் பேரவை, கோமல் சுவாமிநாதனைத் தன் கைக்குள் பிடித்து வைத்திருக்க அவர் என்ன சின்னக் குழந்தையா? அவரது ஊசாட்டத்தை அவர்கள் மிக இறுக்கமாகக் கட்டுப்படுத்த முற்பட்டிருந்தால், விமர்சனம் மறுபுறமாகத் திரும்பிக், 'கூண்டுக்கிளி'' என்று எழுதியிருப்பார்கள். யாரை எதற்காக எவ்வாறு விமர்சிப்பது என்பதில் கூடிய பண்பு வேணுவது நல்லது.

சரிநிகர் 43ம் இதழில் நித்தியானந்தனின் தினகரன் வாரமலர் கட்டுரை பற்றிய ஒரு குறிப்ப வெளிவந்திருந்தது. நித்தியானந்தன், சிவரமணி பற்றி எழுதியது முதலில் அஆஇ எனும் ஒல்லாந்து நாட்டுச் சஞ்சிகையில் வந்தது. தினகரன் அதை மறுபிரசுரம் செய்ததாகவே நம்புகிறேன். சிவரமணியை ஒரு கோழை என்று தூற்றி ஒரு கீழ்த்தரமான ஐரோப்பிய ஏடும் வேறு சிலரும் தாக்கிய சூழலிலேயே, சிவரமணியின் தற்கொலையை வைத்து அவரது தகைமையை மதிப்பிடுவது தவறு என்ற விதமாகச் சுருக்கமாக நான் நோர்வேயின் சுவடுகளுக்கு எழுதினேன். பின்பு அஆஇ யில் நித்தியானந்தன் விரிவாக எழுதினார். ஒரு தற்கொலைக்குரிய சூழ்நிலையை விமர்சியாமற் தற்கொலையைக் கண்டிப்பது தகாது என்பதே எனது நிலைப்பாடு. நித்தியானந்தனும் பெருமளவும் அந்த நோக்கிலேயே எழுதினார். சித்திரலேகாவும், சிவரமணியின் தற்கொலையை அனுதாபத்துடன் தான் அணுகுகிறார். சிவரமணியின் தற்கொலை தொடர்பாக அவர் எதைக் கடுமையாக விமர்சிக்க முனைகிறார் என்பதை ஊகிப்பதில் எனக்கு அதிக சிரமம் இருக்கவில்லை.

அவநம்பிக்கையாக எழுதும் நிர்ப்பந்தமோ வாய்ப்போ மஹாகவிக்கும் நீலாவணனுக்கும் ஏற்படமுன் அவர்கள் போய்விட்டார்கள். சேரனும், ஜெயபாலனும் 1980 களின் முற்பகுதியில் எழுதியது போல பிற்பகுதியில் எழுதினார்களா? நு.ஃமான் அண்மையில் எழுதிய கவிதையென எதையுமே நான் காணவில்லை. ஒரு வேளை எனது எழுத்து எனது சமுதாயப்பார்வையால் வழிநடத்தப்படுவதாலோ என்னவோ எனக்குத் தீமையிலும் நன்மை தெரிகிறது. எல்லாருக்கும் அப்படியே இருந்து தீர வேண்டுமா? சிவரமணி தனது உடனடியான சமுதாயச் சூழலின் உணர்வு நிலையைப் பிரதிபலித்து எழுதினார். அதற்கும் அப்பால் அவர் அதிகம் நோக்காமைக்கு அவரை மட்டுமே கண்டிப்பது நியாயமானதாகத் தெரியவில்லை. அவரது தற்கொலை அவரது சூழல் பற்றிய ஒரு ஆட்சேபனைப் பிரகடனம் என்றே நான் கருதுகிறேன்.

சிவசேகரம்
லண்டன்




## குருவை மிஞ்சிய சிஷ்யன் சந்திரசேகரன்

சரிநிகரின் 44ம் இதழில் சந்திரசேகரின் விடுதலையும் அதன் பின்னணி பற்றியும் மிக விரிவாக எழுதியமைக்கு நன்றி. ஏனெனில் எங்களை ஆண்டாண்டு காலமாக கூலியாகவும், படிக்காதவனாகவும் நினைத்துக் கொண்டு தாங்கள் பண்ணும் அட்டகாசங்களை மூடிமறைத்து ஒரு சந்ததியின் உரிமைகளில் உயிர் வாழும் கூட்டங்கள் இந்த தொழிற் சங்கங்கள்.

தொண்டமான் தனது பாரிய பிரச்சார தந்திரத்தில் தொழிலாளர்களை தன் பக்கம் வாருங்கள் எனக் கூறி ஏமாத்தி வாழ்கிறார். அவர் எப்பொழுதுமே தனது அரசியல் ஆசனத்தை சுற்றிச் சுற்றியே வருவார். அவரால் மலையக மக்களுக்கு எதுவித நன்மையும் கிடைத்ததாகத் தெரியவில்லை. வாக்குரிமையை பெற்றுக் கொடுத்ததாகச் சொல்கிறார். அதனைத் தனது சுய தேவைக்காகவே செய்தார். பிற்காலத்தில் அவ்வுரிமை பறிக்கப்படாது என்பதை அவரால் உறுதிப்படுத்த முடியுமா?

இனவாதம் பேசி அப்பாவி இளைஞர்களின் உயிருக்கு உலைவைத்த பயங்கரவாத ஐ.தே.கவுடன் ஜனநாயகம் பேசுகிறாராம் தொண்டமான்? தனது சுயதேவைகளுக்காக பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களைப் பலிக்கடாவாக்குகிறார். அவர் கடந்த காலங்களில் ஐ.தே.கவின் விருந்தாளியாக அவர்கள் ஆட்சி நடத்துவதற்கு முட்டுக் கொடுத்துக் கொண்டே வந்தார்.

சோபாவில் உறங்கி வந்த நாய் எஜமான் வீட்டுத் தாழ்வாரத்திற்கு விரட்டப்பட்டுள்ளது. அது மீண்டும் சந்தர்ப்பம் வரும் போது சோபாவிற்குப் பாயவே காத்திருக்கும். தொண்டமானின் நிலையும் இது தான்.

தொண்டமானை மக்கள் தொண்டனாகப் பேசும் தமிழ் நாளிதழ் ஒன்று ''கிங் மேக்கர்'' ஆகவும் தனிக்காட்டு ராஜாவாகவும் தொண்டமானே சங்கடப்படும்படி புகழ்ந்துள்ளது. தாங்கள் ஒரு ஜனநாயகமான நடுநிலையான பத்திரிகை எனவும் மார்தட்டுகிறது.

தொழிலதிபர் ஞானத்திற்கு தேசமானி விருது என்று இரண்டு தடவை படத்துடன் புகழ்ந்துள்ளது. தேசமானி விருது கொடுத்தவர்கள் யார் என்பதுதான் சற்றுப் பிரச்சினைக்குரியது. நாங்கள் போட்ட வாக்கு பயங்கரவாத ஐ.தே.க வாழத்தான் பயன்பட்டது.

அடக்கப்பட்ட ஒரு சிறுபான்மை இனத்தின் பூரண விடுதலைக்காய் கொதித்தெழுந்த சந்திரசேகரன் தனது குருவை பின்பற்றி அரசியல் நடத்த வெளிக்கிட்டு விட்டார். உலக அரசியல் வரலாற்றைப் பார்த்தால் மகாத்மா காந்தி, நேரு போன்றோர் பல வருடங்களாக தங்களை நம்பிய மக்களிற்காக சிறையில் வாடினார்கள். நெல்சன் மண்டேலா 20 வருடம் சிறையில் இருந்தார். சந்திசேகரனின் நிலைப்பாடு யாதெனில் சும்மா கூட்டங் கூடி மெய்சிலிர்க்கப் பேசினால் மக்கள் வாக்குப் போடுவார்கள். வாக்குப் பலத்தைக் கொண்ட தொண்டமானைப் போன்று ராஜாவாக வாழலாம் என்பதே.

சந்திரசேகரன் தனக்குச் சிறை வாழ்க்கை வரும் என்று எதிர்பார்த்ததில்லை. சிறைக்குப் போன பின்பும் கால் பிடித்து வெளி வந்தார். அதுவும் தன்னை சிறைக்கனுப்பிய தொண்டமான் & கொம்பனி செயலாளரின் வேட்டியைப் பிடித்து தாவிப்பாய்ந்தார்.

நாளைய கூட்டங்களில் சந்திரசேகரன் ஜனநாயகம் பேசுவார் சாமியுடன் சேர்ந்து கூச்சலிடுவார். எதுவுமே அறியாத அப்பாவித் தோட்ட மக்கள் தங்கள் உரிமைகளையும் தங்கள் சந்ததியின் உரிமைகளையும் முள்ளந்தண்டற்ற மனிதர்களிடம் எழுதிக் கொடுப்பார்கள். என்னதான் இருந்தாலும் சந்திரசேகரன் தான் ஒரு அரசியல்வாதி என்பதை நிரூபித்து விட்டார். தனது குருவை மிஞ்சிய சிஷ்யனாவார் என்பதில் சந்தேகமில்லை.

தில்லை
பம்பலப்பிட்டி

## மனித உரிமை மீறல்களுக்கு காரணம் என்ன?

சரிநிகர் பத்திரிகையின் பங்குனி மாதம் 24ம் தேதிய இதழின் பக்கம் -5இல் விமர்சகர் திரு.எஸ்.சுந்தரலிங்கம் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக:

முதலில் தலைப்பு உங்களுக்கு விளங்கவில்லை போலும்; ''இலங்கையின் அரசியல் யாப்பு சட்ட சீர்திருத்தம்'' என்பதே தலைப்பு.

ஆகவே இங்கு அலசப்பட வேண்டிய விடயம் சட்ட சம்பந்தமானது என்பதை முதலில் நீங்கள் அறிய வேண்டும். அதில் சீர்திருத்தம் எப்படி அரசியலமைப்பு சட்டத்தில் கொண்டு வரப்படலாம் என்பது தான் விவாதம்.

எனது கருத்து அவசரகாலச்சட்டம், பயங்கரவாதச்சட்டம் என்பன அரசியலமைப்பு சட்டதினும் வேறுபட்டவை என்பதாகும். நாட்டின் பாதுகாப்புக்கு அபாயம் ஏற்படும் போது அவசரகாலச்சட்டம் பிரகடனப்படுத்தப்படலாம். பயங்கரவாதச்சட்டம் நாட்டில் போர் சூழல் ஏற்படும் போது ஏ ந்படுத்தப்படலாம். இந்த இரண்டு சட்டமும் இருந்த காலகட்டங்களில் தான் மனித உரிமைகள் 90% மீறப்பட்டுள்ளன. எனவே தான் இந்த இரண்டு சட்டமும் இல்லாது போனால்தான் மனித உரிமையை பாதுகாக்க முடியும். யுத்தம் இல்லாது இருக்கின்ற சூழ்நிலையில் அரசியலமைப்பின் 3ம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட உரிமைகள் மீறப்படின் பிரிவு, 126ன் கீழ் உயர்நீதிமன்றம் சென்று நிவாரணம் பெறலாம். இன்றைய மனித உரிமை மீறல்கள் யாவை? இனப்படுகொலை மயிலந்தனை, கொக்கட்டிச்சோலை சம்பவங்கள்; அடாவடித்தனமான கைது, நீதி விசாரணையற்ற தடுப்புக்காவல் போர்க்கால சிறைக்கூட சித்திரவதை என்பனவாகும். இவற்றை அரசியலமைப்பு சட்டத்தின் முன் நிறுத்த கடினமாக அல்லது நிரூபிக்க கடினமாக உள்ளதற்கு காரணம் அவசரகால சட்டங்களும், பயங்கரவாதச்சட்டங்களும் என்பதை நீங்கள் அறிய வேண்டும். அதனால் தான் இந்த இரண்டு சட்டங்களும் எடுக்கப்பட்டால் மனித உரிமை மீறல் குறையும்; அரசியலமைப்பு சட்ட சீர்திருத்தம் அடிப்படை உரிமை என்ற நிலையில் மட்டும் விவாதத்தில் இருக்கும் என்று குறிப்பிட்டேன்.

ஆனால் நீங்கள் கூட அரசியலமைப்பு சட்டத்தில் அடிப்படை உரிமை ஏற்பாட்டில் கவனம் செலுத்த வேண்டும்; அதிகார அலகு மட்டத்தில் கவனம் செலுத்த வேண்டும் என கூறியுள்ளீர்கள். ஆனால் குறிப்பாக என்ன செய்ய வேண்டும் எனக் குறிப்பிடாது இது செய்ய வேண்டும் அது செய்ய வேண்டும் என அலசி உள்ளீர்கள். கருத்து விமர்சனம் செய்யும் போது நீங்கள் குறிப்பாக சுட்டிக்காட்ட வேண்டும் இல்லாதுவிடின் விமர்சனம் செய்தல் அழகல்ல.

அடுத்த விடயம் நீங்கள் அரசியலைப் பற்றி சட்டத்தரணிகள் ஆராயவில்லை என எழுதியுள்ளீர்கள். நான் அரசியல்வாதியல்ல அரசியல் பேசுவதற்கு; நான் சட்டத்தரணி. நீதிமன்றத்தில் குறிப்பிட்ட வழக்கில் குறிப்பிட்ட சட்ட வரையறைக்குள் நின்று பேசுபவன். என் முன் கொடுக்கப்பட்ட தலைப்பு அரசியலமைப்பு சட்ட சீர்திருத்தம். அதை சட்டரீதியாக அணுகுவது தான் எனது கடமை. 87 89ம் ஆண்டு 60,000 சிங்கள மக்கள் தென்னிலங்கையில் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என பேசியிருந்தேன். நான் இனரீதியாக, அரசியல் ரீதியாக அணுகவில்லை. 87-89 மனித உரிமை மீறலுக்கும் இனப்பிரச்சினை தான் காரணமா?

அடுத்ததாக 5 வது நிரலில் இரண்டாவது பந்தியில் என்து கருத்தை கொப்பியடித்திருப்பதாக கருதுகிறேன். மோர்ஜ் செயலாளர் திருவாளர் எஸ்.பாலகிருஷ்ணன் கேட்ட கேள்வியொன்றுக்கு 87-89 ஆம் ஆண்டு 60,000 சிங்கள மக்கள் கொலைகள், மட்டக்களப்பில் காணாமல் போனோர் என்பவற்றை மனித உரிமை குழுக்களின் செயல்களால் தடுக்க முடிந்ததா? காரணம் கடினமான அவசரகால, பயங்கரவாத சட்டங்களின் அடக்குமுறைகளே எனக் கூறி புண் வந்தவுடன் மருந்து கட்டும் நடவடிக்கையையே மனித உரிமை குழுக்கள் செய்கின்றனவேயொழிய புண் வராமல் தடுக்க முடியுமா? என்ற கேள்வியை எழுப்பியிருந்தேன். அதை நீங்கள் நச்சு மரத்துடன் ஒப்பிட்டு எனது கருத்தை பிரதிபலித்துள்ளீர்கள்.

மனித உரிமை மீறல்கள் அவசரகால, பயங்கரவாத சட்டத்தின் அடக்குமுறைகளின் பிரதிபலிப்புக்கள். இவை நீக்கப்படும் வரை அரசியலமைப்புச் சட்டத்தில் எந்த சீர்திருத்தமும் பலனில்லை. ஏனெனில் இன்றைய மனித உரிமை மீறல்களுக்கு அரசியலமைப்புச்சட்டம் காரணமல்ல. அவசரகால பயங்கரவாத சட்டங்களே காரணம்.

விமர்சகரே; கருத்தரங்குக்கு வந்தவர்கள் கிளிப்பிள்ளைகள் அல்லவே சொல்லிக் கொடுப்பதை கேட்பதற்கு. படித்த புத்திஜீவிகளே வந்திருந்தார்கள். 87-89 ஜே.வி.பி அரசியல் பிரச்சினை இனப்பிரச்சினை என்பன அரசியல் பிரச்சினைகள், இவை தீர்க்கப்பட்டால் மனித உரிமைப்பிரச்சினை தீரும். அதைத்தானே நான் மறைமுகமாக சட்டத்துடன் சுட்டிக்காட்டியுள்ளேன். அதாவது இந்த போர்க்கால சூழ்நிலை இருக்கும் வரை அவசரகால, பயங்கரவாத சட்டங்கள் இருக்கும். இந்த சட்டங்கள் இல்லாமல் போனால் மனித உரிமை மீறல் குறைவாக இருக்கும். இந்தச் சட்டங்கள் எப்பொழுது இல்லாமல் போகும்? போர்க்கால சூழ்நிலையில்லாது போகும் போது; போர்க்கால சூழ்நிலை எப்பொழுது இல்லாமல் போகும்? நாட்டில் பிரச்சினை தீர்க்கப்படும் போது; இவைகளை ஆணிவேறாக அக்கு வேறாக பிரித்து விளங்கப்படுத்த தேவையில்லையே. நீங்கள் என்னிடம் இனப்பிரச்சினைக்குத் தீர்வா எதிர்பார்த்தீர்கள்?

இலங்கையில் அவசரகாலச் சட்டம், பயங்கரவாதச்சட்டம் என்பவற்றை ஏன் அமுல்படுத்தினார்கள். பிரச்சினை ஒன்று இல்லாது அமுல்படுத்துவார்களா? அந்தப் பிரச்சினை என்ன பிரச்சினை என ''புரிந்து கொள்ள முடியாத நிலையில் நீங்கள் சுட்டிக்காட்டும் அளவுக்கு கருத்தரங்கில் பங்கு கொண்டேனா?'' அவசரகாலச்சட்டம், பயங்கரவாதச்சட்டம் என்பவற்றை ஏன் அமுல் படுத்தினார்கள் எனச் சற்று சிந்தித்திருப்பீர்களேயானால் எனது கருத்து உங்களுக்கு விளங்கியிருக்கும். உங்கள் கருத்தைப் பார்த்தால் ஏதோ புதுக்கருத்து, புதுக்காரணம் கூறியிருப்பீர்கள் எனத் தேடினேன். 40 வருட புற்றுநோயை நீங்கள் கூறி யாருக்கும் விளங்க வேண்டியதில்லையே. ஏனெனில் நாட்டில் உள்ள அனைத்து பெரும்பான்மை சிறுபான்மை மக்களுக்கு இலங்கையில் என்ன பிரச்சினை உண்டு எனத் தெரியும். அதைப் போய் விளங்கப்படுத்த தேவையில்லை. அதன் விளைவால் வந்த சட்ட அடக்குமுறைகளை விளங்கப்படுத்தினேன். அதற்கு முடிவும் கொடுத்தேன் அதாவது அவசரகால, பயங்கரவாத சட்டங்கள் இருக்கும் வரையும் மனித உரிமை மீறல் அதிகரித்துக் கொண்டே இருக்கும். அதை எந்த நீதித்துறையாலும் கட்டுப்படுத்த முடியாது என்றேன். இது விளங்கவில்லையா? சட்டம் நீக்கப்பட வேண்டும். எப்பொழுது......? புரிந்து கொள்ளுங்கள்.

இளஞ்செழியன், தெகிவளை.

நன்றி - நூலகத்திட்டம்



# தென்னாபிரிக்கா:

# முந்நூறு வருட முகில் கலைந்தது?

**சிசைரோ**

வெள்ளைத் தோல்களின் வேட்டைக் காடாகவும் கொள்ளை போவதற்கென்றே கொட்டி வைத்த திரவியமாகவும் திகழ்ந்த தென்னாபிரிக்காவில் முந்நூறு வருட இனத்துவேச இருள் கலைந்து ஜனநாயகத் தண்ணொளி தடம் பதித்து விட்டது. ஆம், இந்த வாரம் ஆபிரிக்கக் கண்டம் மட்டுமல்ல முழு உலகுமே நீண்டதொரு நிம்மதிப் பெருமூச்சு விடும்படிக்காக நிகழ்வுகள் அங்கே தொடர்கின்றன. எமது இனப் பிரச்சினைத் தீர்வு ஆய்வுக் கட்டுரைகளில், தென்னாபிரிக்கா முற்றிலும் வேறான பரிமாணத்துடன் அணுகப் பட வேண்டியது. ஏனெனில் இதுவரை நாம் பார்த்த பிரச்சினைகள் யாவும் சிறுபான்மையினர் அச்சங்களும் அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளும் அவற்றின் விளைவாகத் தோன்றிய போராட்டங்களும், ஆனால் தென்னாபிரிக்கப் போராட்டம் பெரும்பான்மையினருக்கு விளைவிக்கப்பட்ட அநீதி, அக்கிரமம் என்பவற்றின் நேரடிப் பிறப்பாகும். அதுவும் மிகவும் கீழ்த்தரமான அடிப்படையில் செய்யப்பட்ட பிரிப்பின் மீதமைந்த பெரும்பான்மை சிறுபான்மை வகுப்பாக்கமும் அதன் உடன்பிறப்பான அமைதியின்மையும்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் ஏதோ புதிய ஞானம் பெற்று விட்டதைப் போல மேற்கு நாடுகள் இனவாதம் சட்ட முரணானதென்றும், இந்த அடிப்படை, உலகின் எல்லாப்பகுதிகளிலுஞ் சட்டப்படி ஒழிக்கப்பட வேண்டும் என்றும் பெரிதாகப் பிரச்சாரப் புயல் கிளப்பி நின்றன. ஆனால் இதே நாடுகள் தென்னாபிரிக்கா விடயத்தில் பயங்கர மெளனஞ் சாதித்ததுடன் இனவாத ஆட்சிக்கு எல்லாவித ஒத்துழைப்பையும் மறைமுகமாக வழங்கி வந்தன. குடியேற்றவாதம் குலைந்த போது சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கத் துடித்த மக்களுக்கு லண்டன் அலுவலகங்களிலுள்ள மேசைகளின் மீது விரித்து வைக்கப்பட்ட வரைபடங்களிலிருந்து எல்லைக் கோடுகள் வகுக்கப்பட்டுச் சுதந்திரம் வழங்கினர் ஐரோப்பியர். மக்களினுடைய அபிலாசைகள் இன, மொழி, மத, கலாசார உறவுகளுக்கு மேலாக எல்லைக் கோடுகள் ஐரோப்பியரது வசதி கருதியே வரையப்பட்டன. இதன் விளைவுகளால் ஆபிரிக்க நாடுகள் இன்றும் தாம் பெற்றதை அனுபவிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில் தவிப்பதும் இத்தவிப்பிலே மேற்கு நாடுகள் குளிர்காய்வதும் சர்வதேச அரசியலாகும். இந்த அரசியலின் உச்சக்கட்ட உருவ வெளிப்பாடுதான் நேற்றுவரை இருந்த தென்னாபிரிக்கா.

## யாருக்கு யார் காவல்?

தென்னாபிரிக்காவின் இன்றைய சனத்தொகை 24 மில்லியன். இதில் 19 மில்லியன் கறுப்பினத்தவர். மிகுதி வெள்ளையர்களும் வேறு சிறுபான்மையினரும். ஆனால் உலகிலேயே இந்த ஒரு நாடு தான் வெவ்வேறு இனத்தவருக்கு வெவ்வேறு சட்டங்கள் என ஆக்கியது வேறானவர்களை வேறாக வளர்த்தலே நியாயம் என இதுவே வாதிட்டது. இங்ஙனம் கறுப்பினத்தவர்களுக்குத் தனியான பிரதேசத்தைக் கொடுத்து அவர்களைத் திறந்த வெளிச்சிறையில் வாழ வைத்து 'அபிவிருத்தி' மேற்கொள்ள தென்னாபிரிக்க முயன்றமை தான் இனவொதுக்கல் (Apartheid) எனப் பெயர் பெற்றது. அகராதியில் இதன் பொருள் தென்னாபிரிக்கா என்றாகி விட்டது. அதுமட்டுமன்றி இனப் பாராபட்சம், ஒதுக்கல் அடிப்படை உரிமை மறுப்பு, அடக்குமுறை ஆட்சி, ஜனநாயக விரோதம் என்பவற்றுக்கெல்லாம் ஒப்புமை கூறுவதற்கும் தென்னாபிரிக்கா என்ற நாடு எப்போதும் கைவசமிருந்தது.

19 மில்லியன் மக்களையும் நான்கு மில்லியன் வெள்ளையர்கள் விசேடமாகக் 'கவனித்து' வந்த ஆட்சிமுறை நேற்றுவரை அங்கிருந்து வந்த ஜனநாயகம். இது முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கிய அடிமைச் சாசனம். கறுப்பினத் தலைவர்கள் ஏன் என்றால் சிறைவாசம், அதுவும் விபரிக்க முடியாத வகையில் -தனித்தனியான தீவுகளில் அடைக்கப்பட்டனர். வெள்ளையர் பிரதேசங்களுக்குள் கறுப்பர் நுழைந்துவிட்டால் பொலிஸ் நாய்கள் மோப்பம் பிடித்து அவர்களைக் கண்டுபிடித்துவிடும். எந்த ஒரு தனி நபரையும், இயக்கத்தையும் 'தடைசெய்யும்' சட்ட ஏற்பாடுகள் அங்கு ஏராளம். உதாரணமாக 'நெல்சன் மண்டேலா' என்பவர் தடை செய்யப்பட்டால் அதன் பின்பு அவரது பெயரை யாரும் உச்சரிக்க முடியாது. அவருக்குக் கடிதம் எழுத முடியாது. எழுதுபவர் குற்றவாளியாகக் காணப்பட்டுத் தண்டிக்கப்படுவார்.

இப்படியும் இருந்ததா? என நாம் மூக்கின் மேல் விரலை வைக்கும் அளவுக்கு விபரீதமான சட்டங்களின் விளைவிடம் தென்னாபிரிக்கா. மொத்தமாகப் 13 தாயகங்கள் கறுப்பர்களுக்கென ஒதுக்கப்பட்டன. அவற்றுக்கு 'பண்டுஸ்தான்' என்று பெயர். ''நாளடைவில் இவை சுயாட்சி பெற்றுவிடும். இங்கே கறுப்பர்களுக்கு எல்லாம் கிடைக்கும். அடிப்படை உரிமைகள் சுயநிர்ணய உரிமை என்றெல்லாம் வெளியார் கூக்குரல் இடமுடியாது. எல்லாமும் இங்கே இவர்களுக்கு உண்டு. எல்லாவகையிலும் சுதந்திர நாடாக இவை மிளிரத்தான் போகின்றன. ஆகவே எம்மைக் குறை கூற வேண்டாம்.'' இதுதான் வெள்ளையர்கள் சொல்லி வந்த வேதாந்தம். பொன் விளையும் பூமியான தென்னாபிரிக்கவின் 13% நிலப்பகுதி மட்டுமே இந்த 13பண்டுஸ்தான்களுக்கும் ஒதுக்கப்பட்டன. இந்த நிலப்பகுதியை அவர்கள் ஒதுக்கிய விதமே அலாதியானது. நாட்டின் எந்த மூலை இயற்கை வளத்தினால் வரண்டு கிடக்கின்றதோ, அங்கே தான் ஒரு பண்டுஸ்தான் உருவாகும். அதை அபிவிருத்தி செய்ய நாம் ஒத்துழைப்போம் என வெள்ளையர்கள் கூறுவார்கள். ஆனால், பாவம் கறுப்பர்கள் தமது வயிற்றுப் பிழைப்புககாக கூலி வேலை தேடி வெள்ளையர்கள் வாழும் பகுதிகளுக்குப் போயேயாக வேண்டும். ஆனால் அங்கு அவர்கள் அந்நியர்கள். எல்லாவகைப் பாதுகாப்பு ஆவணங்களையும் மிகப்பத்திரமாக வைத்திருக்க வேண்டும்.

இந்த ஆவணம் ஞாபகம் வரும் போதெல்லாம் கொழும்புக் கெடுபிகள் மனதில் உதைக்கவே செய்யும். வெள்ளையர்கள் பகுதியில் வெள்ளையரின் அடையாளம் பற்றி அரசாங்கம் அங்கு அதிகம் அலட்டிக் கொள்ளாது. கறுப்பரின் அடையாளம் பற்றித்தான் அங்கு கவலை. அதாவது தனது சொந்த நாட்டிலேயே தனக்கு நடமாட அடையாளப் பத்திரங்கள் தேவை. கொழும்பு நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் எவ்வளவு தூரம் ஜனநாயகப் பாதையில் ''முன்னேறிவிட்டோம்'' என்பது ஆச்சரியமாகவே இருக்கும். தென்னாபிரிக்கச் சட்டத்திலிருந்து சில




பிரிவுகள் எமது பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் இடம் பிடித்துள்ளன.

1946 இலிருந்து ஐ.நா.வில் தனது நிலைமையை நியாயப்படுத்தத் தென்னாபிரிக்கா எப்படியெல்லாமோ முயன்று பார்த்தது. அமெரிக்கர், பிரிட்டன், போர்த்துகல், இஸ்ரேல், போன்றவற்றின் ஒத்துழைப்புடன் தலைகீழாக நின்று முயன்றும் மூன்றாம் உலக நாடுகள் சில காட்டிய மூர்க்கத்தனமான எதிர்ப்புக்கு முகங் கொடுக்க முடியாத நிலையில் ஒதுக்கப்பட்டது தென்னாபிரிக்கா. உலக அரங்கில் அது தீண்டத்தகாத நாடாக கணிக்கப்பிடப்படுவதைத் தவிர்க்க முடியவில்லை. இங்ஙனம் தீண்டத்தகாத நாடாகப் பட்டம் பெற்ற இன்னொன்று இஸ்ரேல், ஆனாலும் ஞானதீட்சை பெறுவதில் தென்னாபிரிக்கா முந்திக் கொண்டது. இஸ்ரேல் பாதிப் பயணத்தில் நிற்கிறது. இனவொதுக்கல் சாம்ராஜ்யத்தைத் தவிர்த்து ஜனநாயகத்தை மலர வைப்போம் எனக் கறுப்பின மக்கள் செய்த திடசங்கற்பம் குருதி மழையிலும் கொடூர சித்திரவதையிலும் குலைந்து போகாமல் நிமிர்ந்து நின்றது.

## இனவொதுக்கல் சட்டவாதம்

''சமமற்றவர்கள் சமமாக நடாத்தப்பட முடியாது. கறுப்பர்களும் வெள்ளையர்களும் சமமானவர்கள் அல்ல. காரணம் பிறப்பு. எனவே இவ்விரு பிரிவினரும் சமமாக நடாத்தப்பட முடியாது. கறுப்பர்களுக்கு பண்டுஸ்தான் என்ற தனிப் பகுதி. வெள்ளையர்களுக்கு மிகுதியாக உள்ள தென்னாபிரிக்கா, இதில் சட்ட முரண் எதுவுமேயில்லை.'' இவ்வாறாக ஐ.நா.வில் நீண்ட காலம் வாதிட்டது. இந்த வாதத்தை எதிர்த்துத் தமது வல்லமையைக் காட்டிய நாடுகள் வட ஆபிரிக்க நாடுகளும் இந்தியாவுமே. தென்னாபிரிக்க விடுதலைப் போரில் இந்தியாவின் பங்களிப்பைக் குறைத்து மதிப்பிட முடியாது. சுதந்திர தென்னாபிரிக்கா நன்றி செலுத்த வேண்டிய நாடுகளில் முதலிடத்தை இந்தியாவுக்கு வழங்கினும் அது தவறில்லை எனலாம். ஆனால் இது வரலாற்றை ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது மட்டுமே பொருத்தமானது. இந்தியாவின் பங்களிப்பு மகாத்மா காந்தி காலத்திலேயே ஆரம்பித்து விட்டது.

13பண்டுஸ்தான்களில் பூரண வளர்ச்சி பெற்றுவிட்டதாகப் பறைசாற்றித் தன்னைச் சுதந்திரநாடாகப் பிரகடனஞ் செய்தது றிரான்ஸ் கெய் என்ற பண்டுஸ்தான். இது எக்ஸ்கோசா மொழி பேசுவோரின் தாயகம், மக்கள் தொகை 3 மில்லியன். முழுவதும் பழங்குடிகளும் ஆதிவாசிகளும். 1976 ஒக்டோபர் 20இல் சுதந்திரப் பிரகடனஞ் செய்யப்பட்டது. இதற்கு வழங்கப்பட்ட பிரதேச அளவுபற்றிப் பேசுகையில் ஐ.நா.விலுள்ள 22 உறுப்பினர்களிலும் பார்க்க இது பெரியது. ஐ.நா.விலுள்ள நாடுகளில் 34% நாடுகளைவிட இதன் சனத்தொகை கூடியது. எனவே இது சுதந்திர நாடாக இருக்க முடியும் என



வாதிட்டது தென்னாபிரிக்கா. ஆனால் ஐ.நா.இந்தச் சுதந்திரப் பிரகடனம் வெற்று வெறிதானது. (Null and void) எனப் பிரகடனப்படுத்தியது. வாக்களிப்பில் கலந்து கொள்ளாத ஒரேயொரு நாடு அமெரிக்காவே தான். ஏனைய யாவரும் தீர்மானத்தினை ஆதரித்தனர்.

இன ஒதுக்கல் கொள்கைக்கும் 'பண்டுஸ்தான்' அமைப்பு முறைக்கும் சட்டரீதியாக முதலில் கிடைத்த அடி இதுவேயாகும். இதன் பின்னர் ஏனைய பண்டுஸ்தான்களின் எதிர்காலம் என்ன என்பதை கறுப்பர்கள் உணரக்கூடியதாக இருந்தது. நாட்டையே கூறுகளாக்கி அவற்றைச் சிறைக்கூடமாக மாற்றும் இனவெறி நடவடிக்கைக்குப் பலியாகத் தாம் தயாராக இல்லை என்பதைக் கறுப்பின மக்கள் தெளிவாக வெளிக்காட்டினர். ஆனால் அரசாங்கமும் சளைக்கவில்லை.

இங்ஙனம் உருவாக்கப்படும் புதிய நாடுகள் மிகப் பலவீனமானவையாகவும் தென்னாபிரிக்காவிலேயே முற்றிலும் தங்கியிருக்க வேண்டியவையாகவும் இருக்கும். ஆனால் பலவீனமும் இன்னொரு நாட்டில் தங்கியிருப்பதும் இறைமைக்குத் தடையாக அமையமாட்டா என்பதைக் கவனிக்க வேண்டும். இன்று உலக அரங்கில் எத்தனையோ நாடுகள் இங்ஙனம் பலவீனமுற்றிருந்தாலும் அவற்றின் இறைமை பற்றி எவருமே கேள்வி எழுப்புவதில்லை. 'றிரான்ஸ் கெய்' அரசை அங்கீகரிக்க மறுத்த பிரிட்டன் தனது ஐரோப்பிய சகாக்களோடு அங்கீகரிக்கப்படுவதற்கு அவசியமென நாம் கருதும் நன்கு ஸ்தாபிதமான எமது உரைகல்லினை ''றிரான்ஸ் கெய் பூர்த்தி செய்யவில்லை'' என்று கூறி நழுவி விட்டது.

இனவொதுக்கலை அடிப்படையாக வைத்து இந்நாடு பிறந்திருக்காவிட்டால் இது சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றிருக்க முடியும். இது ஏனைய பண்டுஸ்தான்களுக்கும் பொருந்தும். சர்வதேசரீதியில் இனவொதுக்கல் கொள்கையும் சம உரிமைப் பம்மாத்தும் தோல்வி கண்ட பின்னர் வெறுமனே அடக்குமுறைச் சட்டங்களை மட்டும் நம்பியே தென்னாபிரிக்கா காலங் கடத்தி வந்தது. சுற்றிவரப் பகையாளிகள், அவர்கள் பலவீனமானவர்களாக இருந்தாலும் ஐ.நா.விதித்த தடைகளால் தென்னாபிரிக்கா பாதிக்கப்படுவதற்கு அயலவர்களும் முக்கிய காரணமே. அண்மையில் நமீபியா சுதந்திரம் பெற்றதும் நாடு யதார்த்தத்தை எடை போட்டது. என்றோ ஒரு நாள் தமது சுதந்திரக்கனவு பலிக்கும் என்பதைக் கறுப்பின மக்கள் கைவிட மாட்டார்கள் என்பதை வெள்ளையர் உணரத் தலைப்பட்டனர். ஆயினும் பிரித்தாளும் சூழ்ச்சியை வைத்து சுதந்திரப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் உத்தியைத் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தது.

## நெல்சன் மண்டெலா -சுதந்திரத்தின் சுயசரிதை

தென்னாபிரிக்காவின் சுதந்திரம் அல்லது ஜனநாயக மலர்வு என்பதே நெல்சன் மண்டேலாவின் சுயசரிதை என்று கூறிவிடலாம் அந்தளவுக்குப் போராட்டத்தையே வாழக்கையாக மாற்றியவர் மண்டேலா இந்திய சுதந்திரத்தைக் காந்தியுடன் சம்பந்தப்படுத்துவது போலத் தென்னாபிரிக்கச் சுதந்திரத்தை மண்டேலாவுடன் தொடர்புபடுத்துவதே வழமை. ஆனால் நடைமுறையில் இரண்டு தலைவர்களுக்கும் இடையில் நிறையவே வேறுபாடு. காந்தி வன்முறைப் பாதையை அடியோடு விலக்கியவர். ஆனால் மண்டேலா எதியோப்பியாவிலும் அல்ஜீரியாவிலும் ஆயுதப் பயிற்சி பெற்றவர். தனது கட்சித் தொண்டர்கள் இராணுவப் பயிற்சி பெறுவதையும் ஆதரித்தவர். அத்துடன் காந்தியை நடாத்திய விதத்தில் மண்டேலாவை வெள்ளையர் அரசு நடாத்தவில்லை. இந்தியாவில் காங்கிரஸ் தொண்டர்கள் பயங்கரவாதிகள் அல்லது கம்யூனிஸ்டுகள் என்று முத்திரை குத்தப்படவில்லை. ஆனால் தென்னாபிரிக்காவில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ANC) பயங்கரவாத இயக்கமெனத் தடை செய்யப்பட்டது. இதன் உறுப்பினர்கள் கம்யூனிஸ்டுகள் எனக் கருதிச் சிறையிலடைக்கப்பட்டனர். ANC வன்முறைக்குப் பதில் வன்முறையே எனச் செயற்பட்ட சந்தர்ப்பங்களுமுண்டு. ஆனாலும் இந்தியப் போராட்டத்தின் செல்வாக்கினைத் தன்னிலிருந்து ஒருபோதும் அகற்றிவிட முடியாது என மண்டேலா அடிக்கடி குறிப்பிடுவதுண்டு.

நெல்சன் மண்டேலாவுக்குத் தற்போது 76 வயது. கூட்டிக் கழித்துப் பார்த்தால் இதில் அரைப்பகுதி வாழ்வை அவர் சிறையிலேயே கழித்துவிட்டார். கடைசியாக 1962 இல் சிறைப்பட்ட போது ஆயுள் தண்டனை இவருக்கு விதிக்கப்

→ 15

நன்றி - நூலகத்திட்டம்



வட்டவளை -கரலினா:

# தோட்டக் காணியில் வெளியார் ஆக்கிரமிப்பு

## அரச அதிபர் தோட்ட நிர்வாகம்- காவலர் மௌனம்

கடந்தமாதம் திடீரென வட்டவளை முதல் கினிதத்தேன வடவளை வரையுள்ள பிரதான வீதிக்கு கீழ் அமைந்த கரலினா தோட்டக் காணியில் வெளியார் குடியேறி கொட்டகைகளும் சிலர் சீமெந்து வீடுகளும் அமைத்துள்ளனர்.

மேற்படித் தோட்டத்தில் தொழிலாளர்கள் சிறுதுண்டு மரக்கறித் தோட்டமும் இன்றி அல்லற்படும் போது, 8 1/8 அடி காம்பராவில் நூறாண்டுகட்கும் மேலாக சீவியம் பண்ணும் போது அவர்களுக்கு இக்காணி பகிர்ந்தளிக்கப்படவோ, பயன்படுத்தப்படவோ இல்லை.

அண்மைக் காலமாக புல் நிலமாக இருந்த மேற்படி காணியை வெளியார் ஆக்கிரமித்து வீடுகட்டி வரும் போது அரசாங்கமோ, தோட்ட நிர்வாகமோ, சம்பந்தப்பட்ட எவருமோ இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இக்காணியை இவ்வாறாக ஆக்கிரமித்தவர்களின் பின்னால் ஏதோ அரசியல் பின்னணி இருப்பதாகக் கருதப்படுகின்றது. இல்லாவிடில் இத்துணிவு ஆக்கிரமிப்பு நிகழ்ந்துள்ளதை எப்படி விளங்கிக் கொள்வது?

சில வருடங்களுக்கு முன் நோர்வூட் தோட்டத்தில் உள்ள புல் நிலங்களை தொழிலாளர்கள் பெருமளவு தமிழர்கள் ஆக்கிரமித்து விவசாயம் பண்ண முயன்ற போது, அரச அதிபரும், தோட்ட நிர்வாகமும் பொலீஸ் துணையுடன் அவர்களை விரட்டியதோடு பலர் மீது வழக்கும் தொடர்ந்திருந்தது. ஆனால் இப்போது நடந்துள்ள இந்தக் குடியேற்றம் பற்றி யாரும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இவ்விரு தோட்டங்களுமே இ.தொ.காவின் நிர்வாகத்தின் கீழ் உள்ள அம்பகமுவ பிரதேச சபையின் கீழ் இருக்கின்றன. ஆனால் இவர்களே அரசாங்கத்துடனும் அரசாங்க ஏஜென்டுகளுடனும் ஒத்தூதி, தொழிலாளர்களைப் பலவகையில் ஒடுக்கி வருவது யாவரும் அறிந்ததேயாகும். இந்நிலையில் இப்பிரதேச சபையின் கீழ் உள்ள பல தோட்டங்களில் காடுவளர்ப்பு, கல்லுக்காடு, சரிவு எனக் காரணம் கூறி பல நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகள் செய்கை பண்ணப்படாமல் மரம் வளர்க்கப்படுவதோடு தரிசு நிலமாகவும் விடப்படுகின்றன. இவற்றில் காலப்போக்கில் தரிசு நிலக் குடியேற்றம் நடக்கும் என்பது யாவரும் அறிந்ததாகும். இவ்விடங்களை தொழிலாளருக்குப் பகிர்ந்தளிக்க யாரும் கேட்கவில்லை.

இவ்வாறு நோர்வூட் வெஞ்சர் தோட்டம் நோர்வூட் தோட்டம், அயூபி தோட்டம் ஆகியவற்றின் தேயிலை காணிகளும் கைவிடப்பட்ட நிலையில் இருக்கின்றன.

மேலும் கண்டி, பள்ளேகல, மல்வாரி தோட்டத்தின் 250 ஏக்கர் காணியில் சுதந்திர வர்த்தக வலயம் அமைக்க அடிககல் நாடடப்பட்டுள்ளது. அத்தோட்டத் தொழிலாளரின் எதிர்காலம் தெருவில் தான் போலும்.

இவ்வாறு விக்டோரியா, ரத்தனிகல, கொத்மலை போன்ற மகாவலி திட்டங்களால் பல்லாயிரம் ஏக்கர் காணிகள் பாதிக்கப்பட்டு தொழிலாளர் நடுத்தெருவில் விடப்பட்டனர். இவற்றையெல்லாம் மலையகத்தின் அரசியல் தொழிற்சங்க அமைப்புகள் தம் பட்டம், பதவி என்பனவற்றின் பேரம் பேசலுக்காகப் ப்யன்படுத்தி வருவது தான் வேதனையானது.

இந்நிலை தொடருமாயின் தொடர்ச்சியான இனவாத குடியேற்றங்கள் முழு மலையகத் தோட்டங்களையும் ஏப்பம் விட்டு விடும்.

மத்தியமாகாண முதல்வர் தனது பதவியேற்பு உரையிலேயே "மத்திய மாகாணத்தின் காணிகள் சிங்கள மக்களுக்குரியவை. அவற்றை சிங்கள மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கவே நான் மத்திய அரசாங்கத்தில் இருந்து மாகாண அரசாங்கத்திற்கு வந்தேன்" எனக் குறிப்பிட்டமை, ஈண்டு கவனிக்கத் தக்கது.

ஆக ஒரு சமுதாயம் மௌனமாக கரைக்கப்படும் போது அதற்கான குரல்களும் மௌனம் சாதிப்பது தான் அருவருக்கத்தக்கதாகும்.

# புலியும் புலி ஆதரவாளரும்

"வெற்றிப்பாதை" எனப்பெயர் சூட்டப்பட்ட இராணுவ நடவடிக்கையின் மூலம் படையினர் திடீரென முன்னேறி வவுனியாவில் இருந்து மன்னார் செல்லும் பிரதான வீதியில் உள்ள பூவரசங்குளம் பகுதியை, சித்திரா பௌர்ணமி தினமாகிய கடந்த 25ம் திகதி கைப்பற்றினார்கள்.

சுமார் மூவாயிரம் பொதுமக்கள் இந்த இராணுவ நடவடிக்கையின் மூலம் புலிகளின் நிர்வாகக் கட்டுப்பாட்டிலிருந்து படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டார்கள். இவர்களிடையே புலிகளையும் அவர்களது நெருங்கிய ஆதரவாளர்களையும் இனங்கண்டு விசாரணை மேற்கொள்ளவும் படையினர் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இந்த நடவடிக்கையின் போது பூவரசங்குளத்திற்கு அப்பால் உள்ள கிராமத்திலிருந்து பூவரசங்குளத்திற்கு தனிப்பட்ட அலுவலுக்காக வந்திருந்த வேளையில் சிக்கிக் கொண்ட முதியவர் ஒருவரும் இருந்தார்.

சந்தேக நபர்களை இனங்காணும் பணியின் போது இவரைச் சுட்டிக்காட்டிய தமிழ் இளைஞன் ஒருவர் இவர் ஒரு புலி ஆதரவாளர் என்று இனங்காட்டியுள்ளார், இளைஞனை ஏறிட்டுப் பார்த்த பெரியவருக்கு முதலில் அதிர்ச்சி ஏற்பட்டது. பிறகு கோபம் வந்துவிட்டது.

"அங்காலை இருந்து வவுனியாவுக்குப் போறவைக்கு நீர்தானே விளக்கம் கேட்டு "பாஸ்" கொடுத்தனீர்? இப்போ இங்கே நிண்டு, என்னைப் பார்த்து புலியின் ஆதரவாளன் என்று சொல்றீரே, இது என்ன அநியாயம்? வவுனியா போறதுக்காக 'பாஸ்' எடுக்கறதுக்கு எத்தனை நாள் உம்மட்டை அலைந்து திரிஞ்சனான்..." என்று சாடினாராம்.

எதையுமே அலட்டிக் கொள்ளாத அந்த இளைஞன் "நீர்தானே புலிகளுக்கு சாப்பாடு சமைத்துக் கொண்டு வந்து தந்தது? எத்தனை நாள் அந்த சாப்பாட்டை நான் சாப்பிட்டேன் எண்டு உமக்குத் தெரியுந்தானே?" என எதிர் கேள்வி கேட்டுப் பெரியவரை மடக்க முயன்றாராம்.

"புலியின், கட்டுப்பாட்டில இருக்கேக்க சாப்பாட்டுச் சாமான்களைக் கொண்டு வந்து இறக்கிப் போட்டு 'நீ தான் எங்களுக்கு சமைச்சு சாப்பாடு தரவேணும்' என்று துவக்கு முனையில் மிரட்டினால் நாங்கள் சமைச்சு தாறதை விட வேறென்ன செய்ய முடியும்?" என்று விடாமல் பொரிந்து தள்ளினாராம் பெரியவர்.

சிவில் உடையில் நின்றிருந்த முக்கியஸ்தர்கள் இந்த சம்பாஷணையை ரசித்துப் பார்த்துவிட்டு புன்முறுவலோடு அப்பால் சென்றார்களாம்.

இராணுவ 'பாஸ்' வழங்கிய பொலிஸாரிடம் 'பாஸ் பெற்றுக் கொண்டு வவுனியா நகருக்குச் சென்ற அவர், அங்கிருந்து தாண்டிக்குளம் ஊடாக தமது சொந்த கிராமத்திற்குப் போய் சேர்ந்தார்.

அங்கேயும் பாதுகாப்பு அதிகார நடைமுறைகள் இங்கேயும் அதே அதிகார நடைமுறைகள் மத்தளத்தைப் போல அப்பாவிகள் தான் இரு பக்கத்திலும் அடிவாங்கி அவஸ்தைப்பட வேண்டியுள்ளது.

# T 56 பயிற்சி

பாதுகாப்புக் காரணங்களின் மீது ஊர்காவல் படையினருக்கு T 56 தன்னியக்க ஆயுதப் பயிற்சி கொடுப்பதை உடனடியாக நிறுத்துமாறு அரசின் பொறுப்பு வாய்ந்த பிரிவின் பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது..

தற்போது ஊர்காவல் படையினருக்கு 500 பேர் வீதம் பயிற்சியளிக்கப்படுகிறது.

ஊர்காவல் படையினர் 17,000 இற்கும் அதிகமான எண்ணிக்கையினர் பணிபுரிகின்றனர்.

# இப்படியும்

இம்முறை மேதினத்தில் தமிழ் மக்களோடு சேர்ந்து வேலை செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் கொழும்பிலிருந்து மலையகம் சென்று மலையக மக்கள் முன்னணியுடன் கலந்து கொண்ட 'இனங்களுக்கிடையிலான சகோதரத்துவ இயக்கம்' என்ற அமைப்பைச் சேர்ந்த இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

துலிப்,ஜயம்பதி எனும் இவ்விளைஞர்கள் கொழும்பிலிருந்து 'யுத்த எதிர்ப்பு' தமிழ் துண்டு பிரசுரங்களை கொண்டு போயிருந்தனர். கொட்டகலையில் இதனை விநியோகித்த போது பொலிஸாரால் மறிக்கப்பட்டு கேள்விகளுக்குள்ளானார்கள். 'ஏன் சிகப்புச் சட்டை தொப்பி அணிந்திருக்கிறாய்', 'இன்று மே தினம் அதன் சின்னமாக அணிந்துள்ளேன்', 'சிங்களவனாக இருந்தும் ஏன் தமிழ் பிரதேசத்துக்கு வேலை செய்ய வந்தாய்' 'தமிழ் மக்கள் மத்தியில் புரிந்துணர்வை கொண்டு வரும் முயற்சிக்காக', 'ஏனிந்த தேவையற்ற வேலை? யுத்தத்தை நிறுத்த வேண்டுமானால் துண்டுப்பிரசுரத்துக்கு செலவிட்ட காசை படையினருக்கு கொடு. அவர்கள் முடிவுக்கு கொண்டு வருவார்கள்" எனக் கூறி கொட்டகலை பொலிஸில் அடைத்து வைக்கப்பட்டு நீண்ட விசாரணையின் பின் இவ்விளைஞர்கள் விடுவிக்கப்பட்டனர்.

# சரிநிகரின் நாட்குறிப்பு

ஏப்-16
பலாலி இராணுவ முகாமில் இருந்து அச்சுவேலிப் பகுதியை நோக்கி வீசப்பட்ட ஷெல்லினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சிவலிங்கமூர்த்தி பேரின்பநாயகி (54) வேலுப்பிள்ளை சகுந்தலாதேவி (42) சிவலிங்கமூர்த்தி சிவதர்ஷினி (19) ஆகிய மூவரும் கொல்லப்பட்டனர்.

ஏப்-17
முல்லைத்தீவுப் பகுதியில் வற்றாப்பளை, சிலாபத்துறை குடிமனைப்பகுதிகளை நோக்கி பலமான ஷெல் தாக்குதல்கள் நடாத்தப்பட்டது.

ஏப்-18
புல்மோட்டை ஏழாவது மைல் பொலிஸ் நிலையம் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பொலிஸ் ஒருவர் கொல்லப்பட்டார்.
புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 11 பேர் அரசபடைகளின் கட்டுப்பாட்டில் உள்ள வவுனியா செட்டிக்குளம் பகுதிக்கு வந்ததாக பாதுகாப்புப்படையினர் தெரிவித்துள்ளனர்.

ஏப்-19
ஏறாவூரில் முஸ்லீம் வாலிபர் ஒருவரிடம் இருந்து பல வகைப்பட்ட ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை, சம்மாந்துறை, பெரிய நீலவாணை ஆகிய பகுதிகளில் உள்ள அதிரடிப்படை முகாம்கள் மூடப்பட்டுள்ளன.

ஏப்-20
பண்டிவிரிச்சானில் உள்ள புலிகளின் முகாம் நிர்மூலமாக்கப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
மட்டக்களப்பிலுள்ள வாகரையில் இருந்து வெலிக்கந்தைக்கு இராணுவத்தினர் சென்ற மூன்று பஸ்களுக்கு வைக்கப்பட்ட கண்ணிவெடியினால் 14 இராணுவத்தினர் காயமடைந்தனர்.
வாகரையில் இடம்பெற்ற கண்ணி வெடிச்சம்பவத்தைத் தொடர்ந்து பனிச்சம்கேணிப்பகுதியில் 50 வீடுகள் தீக்கிரை முதியவர் ஒருவர் பலி. 10 பேர் காயமடைந்துள்ளனர்.
உண்ணாவிரதம் இருந்து உயர் நீத்த அன்னை பூபதியின் சிரார்த்த தின இறுதி நாள் அன்று வடபகுதியில் பூரண ஹர்த்தால அனுஷ்டிக்கப்பட்டது.
உள்ளூராட்சி உறுப்பினர்களின் திருமலைக் கருத்தரங்கு தமிழ், சிங்களம் என வெவ்வாறாக நடத்தப்பட்டதனை ஆட்சேபித்து 24 தமிழ் உறுப்பினர்கள் வெளிநடப்பு.

ஏப் -21
பனிச்சங்கேணிப் பகுதியில் சிவிலியன்களுக்கு எதிராகச் செயற்பட்ட இராணுவக் குழுவைக் கைது செய்துள்ளதாகவும் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் கூறியுள்ளார்.
மன்னார் மாவட்டத்தின் பண்டிவிரிச்சானில் மேற்கொள்ளப்பட்ட இராணுவத் தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் பலி.
மட்டக்களப்பில் இடம்பெற்ற இரண்டு தனியான சம்பவங்களில் மூன்று புலிகள் கொல்லப்பட்டதுடன் மூவர் கைதானதாக அரசு தெரிவித்துள்ளது.

ஏப்-22
கொக்கட்டிச் சோலைக் காட்டில் உள்ள புலிகளின் முகாம் நிர்மூலமாக்கப்பட்டதில் புலிகளைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதாக அரசு தெரிவித்துள்ளது.

மணலாற்றில் ரோந்து சென்ற இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையே இடம் பெற்ற மோதலில் இரு இராணுவத்தினர் பலி.

ஏப்-23
செட்டிக்குளத்தில் இருந்து எட்டு மைல் தொலைவில் உள்ள பறையனாலங்குளம்வரை மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
மண்டூர் பிரதேச சபை மைதானத்தில் இடம் பெற்ற இசை நிகழ்ச்சியில் குண்டொன்று வெடித்ததால் 4 பேர் மரணம்.

ஏப்-25
தலைமன்னார் தொடக்கம் திருகோணமலை வரை அமுல்படுத்தப்பட்டு வரும் கடல் வலைய தடையை நீக்குவதற்கு பாதுகாப்பு அமைச்சு தொடர்ந்து மறுப்பு.

ஏப்-27
இரணை இலுப்பங்குளம்வரை இராணுவம் முன்னேறியுள்ளது.
திருகோணமலை மாவட்டத்தில் உள்ள வெருகல் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதலில் கைவிடப்பட்ட 7 முகாம்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

ஏப்-28
மன்னார் வீதியில் உள்ள பூவரசங்குளம் கிராமம் உட்பட 5 விவசாயக் கிராமங்கள் தம் கட்டுப்பாட்டில் வந்துள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

குருநகர் மண்டைதீவு கடற்பகுதியில் கடற்படையினர் நடாத்திய பீரங்கித் தாக்குதல் குருநகரைச் சேர்ந்த சுவட் சிறிஸ் என்ற 17வயது இளைஞர் கொல்லப்பட்டார். இவருடன் மீன்பிடிக்கச் சென்றவர்கள் கடலில் குதித்து தப்பியுள்ளனர்.
வவுனியாவில் சின்னதம்பனை எனும் பகுதியில் இடம்பெற்ற மோதலில் ஆறு புலிகள் கொல்லப்பட்டு நான்கு இராணுவத்தினர் மரணமாகினர் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஏப்-29
வவுனியாவுக்கு மேற்கே படையினர் மேற்கொண்டு வரும் ஜயமக இராணுவ நடவடிக்கையின் கீழ் 30 கி.மீ பிரதேசத்தை இராணுவத்தினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

ஏப்-30
வவுனியா பூவரசங்குளம் இராமையன்கல் எனும் இடத்தில் இராணுவத்தினர் மறைந்து இருந்து தாக்கியதில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு புலிகள் கொல்லப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நன்றி - நூலகத்திட்டம்



## மேதினம்....

உள்ளவர்களுக்கு அல்லது அதிகாரத்துக்கு வரக்கூடியவர்களுக்கு பின்னால் மக்கள் திரள்வது என்பது ஒரு நடைமுறை நிகழ்வே. பொ.ஜ.ஐ.முவின் பின்னால் திரண்டிருந்த கூட்டத்திடம் இருந்ததெல்லாம் ஐ.தே.க எதிர்ப்பு சந்திரிகா அலை மீதான ஆர்வம் என்பன மட்டுமே.

மேலும் இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகள் பலவற்றோடு ஒப்பிடுமிடத்தில் தொழிலாளர் தினத்தன்று தாங்கள் எட்டு மணித்தியால வேலை நேரத்தை வென்றெடுத்த தினமாக உணர்வுபூர்வமாக உணர்ந்து தொழிலாளர்கள் கலந்து கொள்வது சொற்பமே. இலங்கையைப் பொறுத்தளவில் தொழிலாளர் தினமானது அரசியல் கட்சிகளின் பலப்பரீட்சை தினமாக வளர்ந்துள்ளது. எனவே தொழிலாளர்களை 'தொழிலாளர் தினம்' என்ற நோக்கில் அணிதிரட்டாது கட்சிக்கூட்டமாகவே ஒழுங்குபடுத்தப்பட்டு வருகிறது.

இம்முறை ஐ.தே.கவின் மேதினக் கூட்டம் இடம்பெறவில்லை. மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் சிரார்த்த தினத்தை அனுஷ்டிப்பதற்காகவே அது நிறுத்தப்பட்டது எனக் கூறப்பட்ட போதிலும் கட்சியில் தோன்றியுள்ள உட்பூசலே காரணம் என்பது ரகசியமான ஒன்றல்ல.

இதைவிட இம்முறை பொ.ஜ.ஐ.முவின் கூட்டத்தை குழப்ப பல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. உதாரணத்திற்கு 'சந்திரிகாவைக் கொலை செய்ய இன்று ஒரு குழு வந்துள்ளது என 'புக்திய' மற்றும் இன்னும் சில பத்திரிகைகளுக்குத் தொலைபேசியில் அறிமுகப்படுத்தாத அறிவிப்புகள் வந்தன. வெளியிலும் அவ்வாறான வதந்திகள் பரப்பப்பட்டன.

ஒஸியின் தலைமையிலான ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் கூட்டத்தில் 'புருஷனை மனைவி மறந்தாலும் விஜயகுமாரணதுங்கவை நாங்கள் மறவோம்', 'இனவாதத்தைத் தூக்கிப் பிடிக்கும் ஐ.தே.கவுடன் நாங்கள் உறவு கொள்வதில்லை' போன்ற கோஷங்கள் வெளிப்பட்டன.

மக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதான கோஷமாக 'வட-கிழக்கை உடனே பிரி' என்பது இருந்தது.

இவ்வாறுதான் தொண்டமான் தலைமையிலான இ.தொ.கா மற்றும் சந்திரசேகரன் தலைமையிலான ம.ம.முன்னணி,இடதுசாரி அமைப்புகளான நவசமசமாஜ கட்சி போன்றவையும் தங்களது பலத்தை நிரூபிப்பதற்காக இம் மேதினத்தை பயன்படுத்தினவேயன்றி உண்மையில் இதனை தொழிலாளர் தினமாகவோ தொழிலாளர்களுக்கான அதிகாரத்தை முதன் முதலில் பெற்றெடுத்த தினமாகவோ அவர்கள் தலைமையிலான அரசினை உருவாக்குவதற்கான போராட்ட நாளாகவோ இதனை கிஞ்சித்தேனும் கொள்ளவில்லை.

தொழிலாளர்களை பொறுத்தவரையில் இக்கட்சிகளின் உண்மையான நிலைப்பாடு தாங்கள் சவாரி போவதற்கான குதிரைகள் தாம் இவர்கள் என்பதுதான்.

குதிரைகள் எப்போது எஜமானர்களைப் புரட்டப்போகின்றன?

## அடுத்து.....

னால் தானே தமிழர்கள் இன்னமும் அகதிகளாக வாழ்கிறார்கள்'' என்று வெறுப்பைக் கொட்டினார். கூச்சலின் மத்தியில் ஒரு தமிழ் வாரப் பத்திரிகையை 'மஞ்சள் பத்திரிகை'' என்று தாக்கோ தாக்கென்று தாக்கினார். அமர்ந்து விட்டார். மீண்டும் இவ்விசைக் கச்சேரி. மக்கள் அமைதியாக இருந்து ரசித்தார்கள்.

சில பாடல்களின் பின் மீண்டும் அரசியல். அதே கூச்சல் குழப்பம் விசில் சத்தங்கள். இவர்களது அரசியல் பிரகடனங்களையோ கருத்துக்களையோ மக்கள் காதில் வாங்கிக் கொண்டதாயில்லை. ஸ்ரீகாந்தா, சிவாஜிலிங்கம், கருணாகரன் என்று எல்லோரது பேச்சும் வெறும் காற்றில்தான். ஒரு பெரியவர் கூறினார். அடுத்த கூட்டத்துக்கு சின்ன மேளமும் வரும் என்று. எப்படி அரசியல்?

## முந்நூறு....

பட்டிருந்தது. இவரது மனைவியான வின்னி மண்டேலாவைப் படுக்கையில் வைத்துக் கொலைசெய்யும் முயற்சியிலும் அரசாங்கம் தோல்வியுற்றது. மண்டேலாவின் பிரதான தளபதிகள் எல்லோரும் ஒன்றில் சிறையிலிடப்பட்டனர். அன்றேல் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டனர். இவ்வளவுக்கு மத்தியிலும் தன்னை விலை பேசாமல் சிறையிலிருந்து விட்டு 1990 இல் வெளியேறினார் மண்டேலா. சிறையிலிருந்த போது காச நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு எங்கே இறந்து விடுவாரோ என உலகைக் கவலையிலும் ஆழ்த்தியவர். சிறையிலிருந்து வெளிவந்ததும் வின்னியை விவாகரத்துச் செய்தமை துர்திஷ்டமானது. ஆயினும் அவரின் அரசியல் வாழ்வின் குறுக்கே எதுவும் நிற்க முடியாது என்பது உறுதிப்பட வெளிப்பட்டது.

வின்னி மண்டேலா கட்சி முக்கியஸ்தர்கள் சிலருடன் சேர்ந்து எதிராளிகளைக் கொலைச் செய்யச் சதிசெய்தார் என்ற குற்றச்சாட்டிருந்தது. இதில் தண்டனை பெற்ற வின்னி தற்போது மேன்முறையீடு செய்திருக்கிறார். இதுவே விவாகரத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. ஆனாலும் அவரது சொந்த வாழ்வு எப்போதுமே அரசியலைப் பாதித்ததில்லை.

1989 இல் பதவிக்கு வந்த எவ்ப்.டப்ளியூ.டி.கிளார்க் சமரசப் போக்குக்குச் சைகை காட்டினார். இதன் முதற்படியே மண்டேலாவின் விடுதலை. யதார்த்தத்தை உணர்ந்தோம். இனி ஜனநாயகம் தீர்மானிக்கட்டும்' என்ற முடிவுக்கு வந்த கிளார்க் தென்னாபிரிக்காவில் முதன் முதலாகக் கறுப்பர்களும் கலந்து கொள்ளும் தேர்தலை நடாத்த முன்வந்தார். முதல் எதிர்ப்பு வலதுசாரி வெள்ளையர்களிடமிருந்து எழுந்தது. அடுத்து இவர்களால் தூண்டிவிடப்பட்ட இன்காதா சுதந்திரக் கட்சியிடமிருந்து எழுந்தது. இக்கட்சி சுளு இனத்தவர்களால் அமைக்கப்பட்டது. இதன் தலைவரே புத்தலேசி. எக்காரணங்கொண்டும் ANC யுடன் சமரசம் கிடையாது எனப் புத்தலேசி அடம்பிடித்தார். தங்களுக்குப் பூரண சுதந்திரம் வேண்டும் என்று இன்காதா கட்சி வாதிட்டது. சுளு மக்களுக்கான தாயகக் கோட்பாட்டின் மீதமையாத தீர்வுகளுக்குத்தான் சம்மதிக்க முடியாதெனவும் புத்தலேசி வலியுறுத்தி வந்தார். ஆனால் அண்மையில் சமரச உடன்படிக்கையில் கையொப்பமிட்டு விட்டார்.

### தேர்தல் முடிவுகள்

ஆபிரிக்கக் கண்டத்திலுள்ள நாடுகளிலேயே இராணுவ பலமிக்கது தென்னாபிரிக்கா. பொருளாதார வளத்திலும் அதற்கு இணையான நாடு ஆபிரிக்காவிலேயே கிடையாது. நிலக்கரி, இரும்பு, மங்கனீஸ், குரோமியம், நிக்கல், யூரேனியம், வைரம், இரத்தினம், செம்பு போன்ற எல்லா உலோக வகைகளும் தரமாகவும் தாராளமாகவும் கிடைக்குமிடம் தென்னாபிரிக்கா ஆகும். இவ்வளவும் இருந்தும் உலகச் சந்தையில் அதனால் தலைதூக்க முடியவில்லை. ஐ.நா.வின் தடைகளும் அயலவர்களின் பகையுமே காரணம். இன்று வல்லரசுப் போட்டி முடிந்த நிலையிலும் அணிசேரா நாடுகள் இயக்கம் தனது முக்கியத்துவத்தை இழந்து வரும் வேளையிலும் தென்னாபிரிக்கா சமரசத்தை விரும்பியது வரவேற்பிற்குரியது. ஜனாதிபதி கிளார்க்கின் உறுதியைப் பாராட்டமலிருக்க முடியாது. வலதுசாரி வெள்ளையரசுகளிடமிருந்து வரக்கூடிய உயிராபத்தையும் பொருட்படுத்தாமல் கிளார்க் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை நடாத்தினார். தென்னாபிரிக்காவின் கடைசி வெள்ளை ஜனாதிபதி என்ற பெருமையை விட அவர் ஜனநாயகத்துக்கு ஆற்றிய பங்களிப்பை உலகு மறக்காது.

கடந்தவாரம் தேர்தல் முடிவுகளை அடுத்து நெல்சன் மண்டேலா தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப்பின ஜனாதிபதியாகப் பதவியேற்கப் போகிறார். இவரது பதவியேற்பை முழு உலகமுமே வரவேற்று மகிழும் என்பதில் வியப்பில்லை. இவரது ANC 57%வாக்குகளைப் பெற்றுவிட்டது. தற்போதைய ஜனாதிபதியின் கட்சி 25% வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளது. ANC மட்டுமே கறுப்பர்களின் பிரதிநிதியல்ல என்று காட்டுவதற்காகவே அரசாங்க ஆதரவுடன் வளர்க்கப்பட்ட இன்காதா என்று கறுப்பினக் கட்சிக்கு 7%.வாக்குகள் மட்டுமே கிடைத்துள்ளன. தேர்தல் முடிவுகளைத் தான் ஏற்பதாக இன்காதாத் தலைவர் புத்தலேசி ஏற்கனவே அறிவித்து விட்டார்.

ஆபிரிக்க நாடுகளின் அரசியல் வரலாற்றைத் தெரிந்தோர் மனதில் எழும் ஐயம் யாதெனில் நெல்சன் மண்டேலா எவ்வளவு காலம் ஜனாதிபதியாக இருப்பார்? அங்கு ஜனநாயகம் எதுவரை நீடிக்கும்? என்பதேயாகும். அரசியலில் இராணுவத்தின் செல்வாக்கு ஆபிரிக்க நாடுகளில் மிகச் சாதாரணமே. வெள்ளையர்கள் ஆட்சி இருந்தவரை அங்கு அரசியலில் இராணுவம் நேரடியாகத் தலையிடவில்லை. ஆனால் இனி எப்படியெல்லாந் தலையிடும் என்பதை எதிர்வுகூற முடியாது. புதிய ஜனாதிபதியின் ஆளுமையும் புதிய தென்னாபிரிக்காவின் அசுர பலமும் சர்வதேச அரங்கில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியே தீரும். கண்டத்தின் தென்பகுதியில் ஜனநாயகக் காற்று வீசப்பெறும். இது அநேகரின் கண்களில் பொறாமைத் துகள்களை வீசுவதும் தவிர்க்க முடியாததே.

ஏகப்பட்ட பெரும் புயல்களுக்குத் தாக்குப்பிடித்த தென்னாபிரிக்கா இனிவரும் 'மினிச் சூறாவளிகளுக்கும் முகங்கொடுக்கும் வல்லமை கொண்டது என்பதில் ஐயமில்லை. நெல்சன் மண்டேலாவின் பெயரால் ஜனநாயகம் அரசுக்கட்டில் ஏறுகிறது. அங்கிருந்து அது அகற்றப்படாமல் பார்த்துக் கொள்வது பக்கத்து நாட்டவர்களதும் கடமையாகிறது. தற்போது நடைமுறைக்கு வரும் தற்காலிக அரசியலமைப்பின்படி எதிர் கட்சிக்குத் தலைவரான கிளார்க் உதவி ஜனாதிபதியாக மாறக் கூடிய வாய்ப்புண்டு. இதனை அவர் ஏற்றுக் கொண்டால் ஒற்றுமை வலுப்பெறும். வெள்ளையர்களது சுயநிர்ணய உரிமை எங்கே என்று வெள்ளையர்கள் குரலெழுப்பத் தொடங்கும் அங்கு ஜனநாயகத்தை நிலைநாட்டும் பொறுப்பு நெல்சன் மண்டேலா மீது சுமத்தப்பட்டுள்ளது. சுதந்திரப் போராட்டவீரராக வெற்றி பெற்ற மண்டேலா ஆட்சித் தலைவராகவும் வெற்றி பெற வேண்டும், இனவாதம் இந்த உலகில் ஒழிவதைக் காணும் வரை அவர் ஓய்வுபெறக் கூடாது என எதிர்பார்ப்போமாக!

# மணிவாசகம்

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சரிநிகர்

# மேதின கோலாகலங்கள்



**என்.எஸ்.குமரன்**

ஆட்சியைக் கைப்பற்ற இன்னும் ஏழு போயாக்களே உள்ளன. நீங்களும் எங்களுடன் அணிதிரளுங்கள்'' ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி ஊர்வலத்தில் சென்று கொண்டிருந்த ஒலி பெருக்கி இப்படி அடிக்கடி அறை கூவிக்கொண்டிருந்தது.

பொதுசன ஐ.முன்னணியின் ஊர்வலத்திற்கு சேர்ந்திருந்த கூட்டம் ஆறு லட்சத்துக்கும் அதிகமான மக்களைக் கொண்டிருந்தது. காலை 11.00மணிக்கு ஆரம்பமான ஊர்வலம் இரவு 11.00மணி வரை மைதானத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது. 1960இன் பின் ஸ்ரீ.ல.சு.கவின் மிகப்பெரிய கூட்டம் என வர்ணிக்கப்படுகிறது.

ஸ்ரீ.ல.சு.க தலைமையிலான பொது. ஜன.ஐக்கிய.முன்னணி இம்முறை மக்கள் மத்தியில் ஐ.தே.க எதிர்ப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சியாகவே இந்த மே தினத்தை திட்டமிட்டு நடத்தி இருந்தது.

ஊர்வலத்தில் 1989ஐ ஞாபகப்படுத்தும் 'ரயர்க்காட்சிகளை ஆங்காங்கு காணக்கூடியதாக இருந்தன. உடம்பில் சட்டை அணியாத இளைஞர்கள் மற்றும் பிக்குகளின் கழுத்தில் ரயரைப் போட்டு அவர்கள் பக்கத்தில் பொலிஸ் சீருடையணிந்த ஒருவர் துப்பாக்கியுடன் மிரட்டிக் கொண்டும் தாக்கிக் கொண்டும் வருவர்.இது ஒகு வீதி நாடகத்தின் சாயலைக் கொண்டிருந்தது.

எம்பிலிப்பிட்டிய, சூரியகந்த மலையையும் அதன் மேல் எலும்புக்கூடுகளையும் சித்திரிக்கும் காட்சிகளை ஏந்திய வாகனங்கள் இருந்தன.

கலந்து கொண்டோரின் வாய் மூல கோஷங்களை விட கோஷங்களைத் தாங்கிய பதாதைகளும் பெருமளவில் காணப்பட்டன. 'அமெரிக்காவின் குரல்', 'கந்தளம', 'திறந்த பொருளாதாரக் கொள்கை', 'சூரியகந்த' மற்றும் மாணவர்கள் பிரச்சினை, விவசாயிகள் பிரச்சினை என்பனவற்றை தாங்கிய இப்பதாகைகள் ஊர்வலம் நெடுகிலும் நிறைந்திருந்தன.

ஒலிபெருக்கிகளும் ஊர்வலத்தின் இடைகளில் சத்தம் போட்டுக் கொண்டிருந்தன. பௌத்த மத சடங்குகளில் ஒலிக்கும் 'பண' வடிவிலான பாடல்களையும் அவை ஒலித்தன. அநுர பண்டாரநாயக்காவை கேலி செய்யும் விதத்தில் இப்பாடல்கள் ஒலித்தன. 'பட்டிகொனா அநுர' (அநுர பண்டார நாயக்காவுக்கு சிங்கள மக்கள் மத்தியில் இந்தப் பெயர் உண்டு. தமிழில் இதன் அர்த்தம் 'பண்ணை மாடு' என்பதாகும்) , 'அம்மாவையும் விட்டு, அக்காவையும் விட்டு டிங்கிரியின் மலம் தின்ன போன அநுர' என்றெல்லாம் ஒலிபெருக்கிகள் ஒலித்தன.

நாங்கள் பிரேமதாசாவின் ஓராண்டுதானத்திற்குப் போகின்றோம். எங்களுடன் கலந்து கொள்ளுங்கள் எனக் கிண்டலடித்தனர் ஒரு குழுவினர்.

பாரிய இராணுவ ட்ரக்குகளைப் போல் செய்த வாகனங்களில் எலும்புக்கூடு உடையணிந்தவர்கள் காணப்பட்டனர். இதைவிட காணாமல் போன இளைஞர்களது படங்கள் அவர்களது விபரங்கள் தாங்கிய வாகனங்கள் சிலவும் சென்றன.

ஒருவாகனத்தில் நிஹால் பெரேராவின் பெரிய படமொன்றும் கொண்டு செல்லப்பட்டது. நிஹால் பெரேராவின் தற்கொலைக்கு காரணமானவர்கள் எனக் குற்றம் சாட்டப்படும் இவர்கள் அவரது பாதாதையைத் தாங்கி போனது ஆச்சரியமூட்டுவதாக இருந்தது.

அதைவிட 'யுத்தத்தை நிறுத்து', 'வட-கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வைக் கொடு' எனும் கோஷங்கள் எழுப்பப்பட்டன. கூடவே 'வடக்கில் இறந்த சிங்களவர்களுக்கு யார் பொறுப்பு' எனும் கோஷமும் கூட எழுப்பப்பட்டது.

ஊர்வலத்தின் முடிவில் சந்திரிகா உரையாற்றினார். இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டிய ஒன்று எனக்கூறிய அவர் உரை வழமை போல் தெளிவற்றதாகவே இருந்தது. திறந்த பொருளாதாரக் கொள்கையின் மூலமே உருவாக்கப்பட்ட நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் எனக் கூறும் சந்திரிகா என்ன முகத்தோடு தைரியமாக திறந்த பொருளாதாரக் கொள்கையை விமர்சித்துப் பேசுகிறார் எனும் கேள்வியை அங்கு யாரும் கேட்பதற்கு.இருக்கவில்லை. திறந்த பொருளாதாரக் கொள்கையை ஆதரிக்கும் சந்திரிகாவோடு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி என்பனவும் குலாவிக் கொண்டிருப்பது பற்றியோ அதன் பிழைப்புவாதத்தைப்பற்றியோ யாரும் அலட்டிக் கொள்ளவில்லை. அவ்வளவு வெறி; கும்பல் உணர்வுடன் கூடிய சிந்தனைக்களுக்கப்பாற்பட்ட - வெறி அந்தக் கூட்டத்தை அலைமோதியது. இந்த வெறியில் இடதுசாரிகளுக்கும் தலைகால் புரியவில்லைப் போலும். சொற்பமான நபர்களை மட்டுமே வைத்துக் கொண்டு பொ.ஐ.ஐ.முவில் தங்களது பலம் அதிகமானது எனத் தங்களைப் பறைசாட்டிக்கொள்ளும் இவர்கள் கூட 'ஆட்சியைக் கைப்பற்ற இன்னும் 7 போயாக்களே இருக்கின்றன' என்று கத்துகிறார்கள். யாரை ஆள்வதற்கான ஆட்சியை?

மக்களின் விழிப்புணர்வு வளர்த்தெடுக்கப்படாத சூழ்நிலையில் அதிகாரத்தில்

→ 15

# வானமே எல்லை

சரிநிகர் 50வது இதழ் வெளிவருவதையொட்டி உலகளாவிய அளவில் கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடக எழுத்துரு என்பனவற்றிற்கான போட்டியொன்றை சரிநிகர் நடாத்தவுள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழில் எழுதுகின்ற உலகில் எந்த மூலையிலும் வாழ்கின்ற எவரும் இப்போட்டியில் பங்கு கொள்ளலாம். போட்டியில் பங்கு பற்றுவதற்கு வயதெல்லை கிடையாது.

போட்டி விதிகள்:

1. ஆக்கங்களுக்கான கருப்பொருட்கள் தொடர்பாக எந்தக் கட்டுப்பாடும் இல்லை. -வானமே எல்லை.
2. ஆக்கங்கள் படைப்பாளியின் சொந்தப் படைப்பாகவும், இதற்கு முன் பிரசுரமாகாமலும் ஒலி/ஒளி பரப்பாகாமலும் இருக்க வேண்டும்.
3. மொழி பெயர்ப்புகள், தழுவல்கள் போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.
4. எல்லா ஆக்கங்களும் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட்டும்/தட்டச்சில் பொறிக்கப்பட்டும் பத்துப் பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
5. ஆக்கப்பிரதியில் எழுதியவர் பெயர், முகவரி என்பன இடம் பெறக் கூடாது. அவை தனியாக இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
6. ஒருவர் எத்தனை போட்டியிலும் பங்கு பற்றலாம்.
7. ஆக்கங்கள் 1994 ஜுன் 15ம் திகதிக்கு முன்னர் கீழுள்ள முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கவிதை/ கட்டுரை/ சிறுகதை/ நாடக எழுத்துரு எனக் குறிப்பிடல் வேண்டும்.
8. ஆக்கங்கள் திருப்பியனுப்பப்பட மாட்டா என்பதால், ஆக்கதாரர் பிரதியொன்றை கைவசம் வைத்திருப்பது உகந்தது.
9. சரிநிகர்- மேர்ஜ் நிறுவனத்தில் வேலை செய்பவர்களும், அவர்களது உறவினர்களும் இப்போட்டிகளில் பங்கு பற்ற முடியாது.
10. சரிநிகர் ஆசிரியர் குழுவின் முடிவே இறுதியானது.

## மாணவர்களுக்கு:

இதே தலைப்புகளில் பாடசாலை மாணவர்களிடையிலான போட்டிகளும் நடாத்தப்படவுள்ளன.
பாடசாலை மாணவர்கள் தமது ஆக்கங்களை அனுப்பும் போது அப்பாடசாலையின் அதிபரால் உறுதிப்படுத்தப்படும் கடிதமொன்றையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.
ஏனைய மேற்கூறிய விதிகள் இவர்களுக்கும் பொருந்தும்.

பரிசு விபரம்:

முதல் பரிசு ரூபா 1000/=ம் சான்றிதழும்
இரண்டாம் பரிசு ரூபா 750/=ம் சான்றிதழும்
மூன்றாம் பரிசு ரூபா 500/=ம் சான்றிதழும்

முகவரி:

ஆசிரியர்,
'வானமே எல்லை,
4,ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்ஸாய
கொழும்பு -05

சரிநிகர் (இரு வாரங்களுக்கொருமுறை) இதழ் இல.18/2 அலோசாலை கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்.